# புறநானூற்றில் தமிழர் வாழ்வியல்

முனைவர் *கல்பனா சேக்கிழார்*

**தமிழ்மண் பதிப்பகம்**

*நூற் குறிப்பு*

| | | |
|---|---|---|
| *நூற்பெயர்* | : | **புறநானூற்றில் தமிழர் வாழ்வியல்** |
| *ஆசிரியர்* | : | முனைவர் கல்பனா சேக்கிழார் |
| *பதிப்பாளர்* | : | கோ. இளவழகன் |
| *பதிப்பு* | : | 2009 |
| *தாள்* | : | 16.0 கி. வெள்ளை மேப்லித்தோ |
| *அளவு* | : | 1/8 தெம்மி |
| *எழுத்து* | : | 11 புள்ளி |
| *பக்கம்* | : | 144 |
| *படிகள்* | : | 1000 |
| *விலை* | : | உருபா . **135/-** |
| *நூலாக்கம்* | : | பாவாணர் கணினி<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர் நகர், சென்னை - 600 017. |
| *கணினி அச்சு* | : | முகமது ஆசாம் |
| *அச்சு* | : | ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 600 014. |
| *கட்டமைப்பு* | : | இயல்பு (சாதாரணம்) |

*வெளியீடு*

**தமிழ்மண் பதிப்பகம்**

எண். 2 சிங்கார வேலர் தெரு, தியாகராயர் நகர்,
சென்னை - 600 017. தொ.பே : 24339030
*மின்னஞ்சல் :* elavazhagantm@gmail.com

# பதிப்புரை

பேராசிரியர் கல்பனா உரத்தநாடு வட்டம், ஒக்கநாடு கீழையூர் கிராமத்தைச் சேர்ந்தவர். வேளாண் குடும்பத்தில் பெற்றோருக்குத் தலைமகளாகப் பிறந்தவர். இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டங்களை திருமணத்திற்குப் பிறகு தம் அருமைத் துணைவரின் தோன்றாத் துணையால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டங்களைப் பெற்றவர். தமிழரின் வாழ்வியல் நெறிகளை நெறிப்படுத்திக் கூறும் தமிழர் தம் அறநூலாம் திருக்குறளை ஆய்வுப் பொருளாக எடுத்து முனைவர் பட்டத்தைப் பெற்றவர்.

தமிழர் மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்களாகத் திகழ்ந்த பெரியார் , பாரதியார், பாரதிதாசன் போன்ற பெருமக்கள் காணவிரும்பிய பெண்விடுதலை, பெண்கல்விக்குச் சான்றாகத் திகழும் பெண்மக்களுள் இவரும் ஒருவர். குடும்ப வாழ்க்கையில் ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு எம் கண்முன்னே சான்றாக அருமைத் தங்கை கல்பனா திகழ்கிறார். பிறந்த குடும்பத்திற்கும், புகுந்த குடும்பத்திற்கும் பெருமை தேடித் தரும் தங்கையின் தமிழ்ப்பணி தொடர வாழ்த்துகிறேன்.

இவருடைய பேருழைப்பால் .உருவான 1. திருக்குறள் பரிதியார் உரை, 2. திருக்குறள் பரிதியார் உரைத்திறன் , 3, புறநானூற்றில் தமிழர் வாழ்வியல் ஆகிய இம் மூன்று நூல்களையும் எம் பதிப்பகம் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறது. தமிழ்க்காப்புப் பணியிலும், தமிழ் மீட்புப் பணியிலும் மேலும் மேலும் உழைத்துத் தமிழுக்கு அரணாக இருக்க விரும்புகிறேன்..

தமிழை உயிர்மூச்சாகக் கொண்டு வாழும் தமிழ்ச் சான்றோர்களாம் **முதுமுனைவர் இளங்குமரனார், பேராசிரியர் விருத்தாசலனார்** போன்ற பெருமக்களின் வழிகாட்டுதலுடன் தமிழாய்வுக் களத்தில் தம் காலடிச் சுவடுகளை ஆழமாகப் பதித்துத் தமிழ் உலகம் போற்ற வாழ வாழ்த்துவதுடன், இவரின் ஆய்வுப் பணிக்கு உற்ற துணையாய் இருந்து உதவும் வாழ்க்கைத் துணைவர் மருத்துவர் சேக்கிழாரையும் நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

**அன்புடன்**
**கோ.இளவழகன்**

# அணிந்துரை

*அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழியல் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரியும் முனைவர் கல்பனா சேக்கிழார் அவர்கள் புறநானூற்றில் தமிழர் வாழ்வியல் என்னும் இவ்வரிய ஆராய்ச்சி நூலைக் கூர்த்த நுண்ணறிவுடன் எழுதியுள்ளார். தெள்ளத் தெளிந்த தமிழில் உண்மை தேர்ந்துரைப்பது கவிதை என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் கவிதைக்குச் சொன்ன இலக்கணம் தமிழ் உரைநடைக்கும் மிகவும் பொருந்துவதாகும்.*

*பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தமிழ் மண்ணில் பிறந்து தமிழ் மண்ணிலேயே வளர்ந்த அருமையான தமிழ்ப்பண்பாட்டுக் கருவூலங்களாகும். பத்துப்பாட்டையும், புறநானூற்றையும் பதிப்பித்த பெருமைக்குரிய சான்றோர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் ஆவார். உ.வே.சா. அவர்களின் புறநானூற்றுப் பதிப்புக் குறித்து நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டர் அவர்கள் கரந்தைத் தமிழ்ச்சங்க 21-ஆம் ஆண்டு விழாத் தலைமையுரையில்,*

> மகாமகோ பாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதைய ரென்னும் பேரறிஞரொருவரால் தமிழ்மொழி எத்துணை நலம்பெற்றுள்ளது. நாம் இங்ஙனமெல்லாம் நமது பழந்தமிழைப் பற்றியும், பழந்தமிழ்ப் பெருமக்களைப் பற்றியும் பேசுவதற்கு வாய் தந்த வள்ளல் அவரன்றோ?

*என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இத்தகைய சிறப்பு மிக்க புறநானூற்றில் தமிழர் வாழ்வியல் பற்றிக் கூறப்பெற்றுள்ள செய்திகளையெல்லாம், இந்நூலாசிரியர் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் கூறியுள்ள திறம் பெரிதும் பாராட்டத் தக்கதாகும்.*

*இந்நூலில் தமிழர் வாழ்வியல் நெறிகள் என்னும் இரண்டாவது கட்டுரையில் அரசர் இயல்புகள், ஆட்சிமுறை, நீதிமுறைமை, அறவோர்அவை, நாட்டுநலம், புலவர்தொடர்பு, கொடைப்பண்பு, மறப்பண்பு முதலிய செய்திகள் விரிவாக ஆராயப்பெற்றுள்ளன.*

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

என்ற மோசிகீரனார் பாடலை எடுத்துக்காட்டித் தமிழ் மக்கள் நாட்டை உடலாகவும் அரசனை உயிராகவும் எண்ணி அவனுக்குச் சிறப்புச் செய்தமையை விளக்கியுள்ளார்.

இவ்வாறே இந்நூலில், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம் கட்டுரைகளாக முறையே சமுதாயச் சிந்தனை, சமயச் சிந்தனை, கல்விச் சிந்தனை, அறச்சிந்தனை ஆகிய கட்டுரைகள் விரிவாக எழுதப் பெற்றுள்ளன.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு ஏற்பக் கல்விச் சிந்தனை என்னும் கட்டுரையில்,

சாதிக்கொடுமை அகல, கல்வி ஒன்றே உயர்ந்த கருவி என்பதைக் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே என்னும் புறநானூற்றுத் தொடர்கள் நன்கு வலியுறுத்துகின்றன.

சமுதாயத்தில் மண்டிக்கிடக்கும் அறியாமை இருளை அகற்றி நல்வழிப் படுத்துவதே கல்வியின் தலையாய பயன்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம் என்று எழுதியுள்ள பகுதியைக் குறிப்பிடலாம்.

இந்த ஆராய்ச்சி நூலைக் கற்பவர்கள் புறநானூற்றின் சாரமாக விளங்கும் கருத்துக்களை எல்லாம் தெரிந்துகொள்ள முடியும். கல்லூரியில் பயிலும் மாணாக்கர் போலவே உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களும் நல்லறிவும், நல்லொழுக்கமும் பெறுவதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என்பது உறுதி. ஆகவே இந்நூலாசிரியராகிய முனைவர் கல்பனா சேக்கிழார் அவர்களையும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் தந்துள்ள தமிழ்மண் பதிப்பக உரிமையாளரும் தமிழ்மொழிக் காவலருமான திரு. கோ. இளவழகன் அவர்களையும் நெஞ்சம் நிறையப் பாராட்டுகின்றேன்.

**பேராசிரியர் பி.விருத்தாசலம்**

## முன்னுரை

பாட்டும் தொகையும் என அழைக்கப்பெறும் சங்க இலக்கியங்கள் நம்முடைய மரபு இலக்கியங்கள் எனப் போற்றப்பெறுவன. எட்டுத் தொகை நூல்களுள் புறநானூறு பதிற்றுப்பத்து என்னும் இரு நூல்களும் முழுக்க முழுக்க புறப்பொருள் பற்றிய நூல்களாகும். புறப்பொருள் பற்றிய இவ்விரு நூல்களுள் பதிற்றுப்பத்து முழுமையும் சேரர்களைப் பற்றிக் கூறும் செந்தமிழ் இலக்கியமாகும். புறநானூற்றுப் பாடல்கள் தமிழர் வாழ்வியலைப் பல்வேறு கோணங்களில் படம்பிடித்துக் காட்டுகின்றன.

புறநானூற்றினைக் காலம் தோறும் ஆழ்ந்த வாசிப்புக்கு உட்படுத்திப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் பண்டைத் தமிழரின் வாழ்வியலைப் புறநானூற்றுப் பாடல்கள் எவ்வாறு பதிவு செய்துள்ளன என்பதை அறிந்து கொள்ளும் வகையில் *புறநானூற்றில் தமிழர் வாழ்வில்* என்னும் இவ்வாய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

தமிழரின் வாழ்வியலை, நிலப்பாகுபாடு, குடும்பம், தொழில், வாணிபம், மகளிர் நிலை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள், நாகரிகம், பண்பாடு போன்றவற்றையும், அரசர், அரசர் இயல்புகள், ஆட்சி முறை, நீதிமுறைமை, அறவோர் அவை, நாட்டு நலம், புலவர் தொடர்பு, கொடைப்பண்பு, மறப்பண்பு போன்றவற்றையும், சமுதாயச் சிந்தனைகளில் குறிப்பாக சான்றாண்மை, மனைமாட்சி, விருந்தோம்பல், கவிச்சிறப்பு, பல்லோர் கடமைகள் போன்றவையும், சமயம் தொடர்பான செய்திகள், வீடுபேற்றிற்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு, மனிதனை உயர்த்தும் சிறப்புமிக்க கல்வி தமிழகத்தில் வளர்ந்த வரலாறு, புறநானூற்றில் காணக்கூடிய அறச் சிந்தனைகள் போன்றவையும் இந்நூலுள் விளக்கப்பட்டுள்ளன.

பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்க்கை முறையை அதன் பன்மைத் தன்மைகளோடும் சமூகத்தின் இயங்கியல் போக்கிலேயும் புறநானூறு எவ்வாறு பதிவு செய்துள்ளது என்பதை இவ்வாய்வு விளக்க முற்பட்டுள்ளது. இது சங்க இலக்கியத்தின் ஒரு குறிப்பிட்ட - புறம் - மரபு - தம் பாடலுக்கான பொருள் மரபை எவ்வாறு

தேர்ந்தது என்பது பற்றியும் சமூகத்தின் பல்வேறு தன்மைகளைப் புறமரபு எவ்வாறு உள்வாங்கியது என்பது பற்றிய பார்வை தெளிவிற்கும் இவ்வாய்வு ஓரளவிற்கு வழிவகுக்கும்.

இந்நூலுக்கு வழிகாட்டியாக இருந்து நெறிப்படுத்தியதோடு, ஆய்வுலகிற்கு என்னை அறிமுகம் செய்து வைத்த நெறியாளர் பேராசிரியர் துரை. பட்டாபிராமன் அவர்கள்.

இந்நூலினை மெய்ப்புத் திருத்தியும், அதற்கு அணிந்துரை வழங்கியும் சிறப்பித்த ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி நிறுவனர் பேராசிரியர் பி.விருத்தாசலனார் அவர்கள்.

ஆய்வேடு நூலாக்கம் பெறுவதற்கு அனுமதியளித்த அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனத்தினருக்கும், தமிழியல் துறைத் தலைவர் மற்றும் மொழிப்புல முதன்மையர் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் அவர்களுக்கும், ஆய்வுக்குத் துணை நின்ற தமிழியல் துறை நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

கணினித் துறையில் சென்ற என்னைத் தமிழ்த்துறைக்கு வழிப்படுத்தி அத்துறையில் தகுதிப்படுத்திக் கொள்ளத் தொடர்ந்து அக்கறையும் அன்பும் செலுத்தி வரும் என் கணவர் மருத்துவர் மு.சேக்கிழார் அவர்களுக்கு என் அன்புகள்.

இந்நூலினைக் கணினி அச்சு செய்துதவியர் திரு.ஆசம் அவர்கள். அட்டைப் படத்தினை வடிவமைத்தவர் திரு.முரளி அவர்கள்

தந்தை போன்ற அன்பினை அள்ளி அள்ளி வழங்கியதோடு, இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் திரு.கோ. இளவழகனார் அவர்களுக்கும் நன்றி.

**கல்பனா சேக்கிழார்**

**பொருளடக்கம்**

| | |
|---|---|
| பதிப்புரை | 3 |
| அணிந்துரை | 4 |
| முன்னுரை | 6 |
| புறநானூற்றில் தமிழர் வாழ்வியல் | 9 |
| அரசியல் நெறிகள் | 42 |
| சமுதாயச் சிந்தனை | 57 |
| சமயச் சிந்தனை | 69 |
| கல்விச் சிந்தனை | 88 |
| அறச் சிந்தனை | 114 |
| முடிவுரை | 138 |

# புறநானூற்றில் தமிழர் வாழ்வியல்

## வாழ்வியல் நெறிமுறைகள்

பாட்டும் தொகையும் என அழைக்கப்பெறும் சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியலை நன்கு சித்திரித்துள்ளன. தொகை நூல்கள் எட்டனுள் புறநானூறு, பதிற்றுப்பத்து என்ற இரு நூல்கள் மட்டுமே முழுக்க முழுக்கப் புறப்பொருள் பற்றிய நூல்கள். பரிபாடல் அகமும் புறமும் இணைந்தது. எஞ்சியவை அனைத்தும் அகப்பொருள் பற்றிய இலக்கியங்களேயாகும்.

புறப்பொருள் பற்றிய இந்நூல்களுள் பதிற்றுப் பத்து முழுதும் சேரர்வரலாறு கூறும் வரலாற்று இலக்கியமாகும். புறநானூறு புறப்பொருளை- குறிப்பாகத் தமிழர் வாழ்வியலைப் பல்வேறு கோணங்களில் படம்பிடித்துக் காட்டுகிறது.

புறநானூற்றால் அறியப்படும் தமிழர் வாழ்வியல், நிலப்பாகுபாடு, குடும்பம், தொழில், வாணிபம், மகளிர்நிலை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள், நாகரிகம்-பண்பாடு போன்றவை இக்கட்டுரையில் ஆராயப் பெற்றுள்ளன.

### 1. நிலப்பாகுபாடு

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை, நில அடிப்படையைத் தழுவி அமைந்திருந்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை. தமிழக நிலப்பரப்பு நான்குவகைப்பகுப்பிற்கு உட்பட்டது என்பதனை ‘மாயோன் மேய காடுறை உலகமும்’[1] என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். முல்லை, குறிஞ்சி, மருதம்,

நெய்தல் என்ற இந்நான்கு நிலப்பரப்பே மக்கள் வாழ்க்கைக்கு ஏற்புடையன. இந்நிலங்களே 'நானிலம்' எனப்பட்டன. 'நானிலம்' என்ற இச்சொல்லே பிற்காலத்தில் உலகைக் குறிக்கலாயிற்று.

ஐந்தாவது நிலமாகக் குறிக்கப் பெறும் 'பாலை நிலம்' நன்னிலமன்று, வன்நிலம்- அது இயற்கையான நிலப்பரப்பன்று. கோடையின் கடும் வெப்பத்தால் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து செயற்கையாக உருப்பெறும் நிலமே பாலை நிலமாகும். இவ்வாறு இந்நிலப்பரப்பு உருவாவதை,

***முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து***
***நல்லியல் பிழந்து நடுங்கு துயர் உறுத்துப்***
***பாலை என்பதோர் படிவங் கொள்ளும்***[2]

என்ற சிலப்பதிகாரத் தொடர்கள் விளக்குகின்றன.

நிலங்களின் இயற்கைச் சூழல்களுக்கு ஏற்பவே மக்களின் வாழ்க்கை நிலையும் அமைந்திருந்தது. இவ்வாழ்க்கைமுறை திணை எனப்பட்டது. திணையை ஒழுக்கம் என்பர் நச்சினார்க்கினியர். இத்திணை இருவகைப்படும். அவை அகம், புறம், அகம் காதல் வாழ்க்கை. புறம் காதலைத் தவிர்த்த ஏனைய வாழ்க்கை முறை.

இவ் ஐந்திணை ஒழுக்கங்களைத் தவிர்த்துக் கைக்கிளை, பெருந்திணை என்ற ஈரொழுக்கங்கள் உள. இவற்றுள் கைக்கிளை ஒருதலைக் காமம்; பெருந்திணை பொருந்தாக் காமம். இவை இரண்டிற்கும் தனி நிலம் இல்லை. எனவே இவ்வொழுக்கங்கள் மேற்குறிப்பிட்ட ஐவகை நிலத்தின் கண்ணும் நிகழும்.

### I. 1. ஐவகை ஒழுக்கங்கள்

தலைவன் தலைவி கூடுதல் குறிஞ்சி; தலைவன் பிரிவை நினைந்து தலைவி ஆற்றியிருத்தல் முல்லை; தலைவன் தலைவி ஊடல் மருதம்; தலைவன் பிரிவை ஆற்றாது தலைவி அரற்றுதல் நெய்தல்; தலைவன் பிரிவைக் குறித்தல் பாலை. இவ்வொழுக்கங்களின் நிமித்தங்களும் அவ்வவ் ஒழுக்கங்களே. இவ்வொழுக்கங்கள் அவ்வவ் நிலங்களுக்குரியனவாகக் கூறப்படினும் நடைமுறையில் எல்லா நிலத்திற்கும் பொது எனலாம்.

## I. 2. நிலமக்கள்

ஒவ்வொரு நிலத்து மக்களும் தலைமக்கள், தொழில் மக்கள் என்ற நிலையில் பெயர் பெற்றதனை

**ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்**
**ஆவயின் வரூஉங் கிழவரு முளரே**[3]

**ஏனோர் மருங்கினு மெண்ணுங் காலை**
**ஆனாவகைய திணைநிலப் பெயரே**[4]

என்ற நூற்பாக்களுக்கு இளம்பூரணர் வரைந்த உரைவழி அறியலாம்.

முல்லைநில மக்கள் ஆயர், வேட்டுவர் எனப்படுவர். செய்யும் தொழிலால் இப்பெயர்கள் அமைந்தன. பசுவினை மேய்ப்போர் ஆயர் எனப்பட்டனர். இந்நிலத்துத் தலைமகன் குறும்பொறை நாடன் எனப்பட்டான்.

குறிஞ்சிநில மக்கட் பெயர் குறவன், குறத்தி. தேன் சேகரித்தலும், கிழங்குகளை அகழ்ந்தெடுத்தலும் இந்நிலமக்கள் தொழில். மலைநாடன், வெற்பன் என்பவை தலைமக்கட் பெயர்.

பாலைநில மக்கட் பெயர் எயினன், எயிற்றியர். போரிடுதலும், வழிப்பறி செய்தலும் இந்நில மக்கள் தொழில்.

மருதநிலமக்கள் உழவன், உழத்தியர். இந்நில மக்கள் தொழில் உழவு. தலைமக்கள் பெயர் உழவன், மகிழ்நன்.

நெய்தல் நிலமக்கள் பெயர் நுளையர், நுளைச்சியர். இவர்கள் தொழில் மீன் பிடித்தல், தலைமக்கள் பெயர் சேர்ப்பன், துறைவன் என்பன.

இதனால் ஒவ்வொரு நிலத்து மக்கட்பெயரும் அவரவர் தொழிலையொட்டி அமைந்தன என்பதும், பிறப்பையொட்டி அமையவில்லை என்பதும் அறியத்தக்கவையாகும்.

### குலங்கள் - குடிகள்

பழந்தமிழ்நாட்டில் வழங்கிய குலங்களையும் குடிகளையும் புறநானூற்றின் வழி அறியலாம்.

பல்வேறு குலத்தாருள் மழவர் என்பார் ஒரு குலத்தார். இக்குலத்தினர் வீரத்தில் சிறந்தவர்கள். சோழ நாட்டிலுள்ள

தேவாரப் பாடல்பெற்ற தலமாகிய திருமழபாடி 'மழவர்' குடியை நினைவூட்டும் ஊராகும். 'மழவர்பாடி - மழபாடி' என மருவியது. இம்மழவர் குலத்தில் பிறந்தவன்தான் அதியமான். இவன் படைத்திறத்தைப் பரணரும், கொடைத் திறத்தை ஔவையாரும் பாராட்டி உள்ளனர்.

மழவரைப் போல் மற்றொரு குடியினர் பாணர் என்பார் ஆவர். பண்ணோடு இசைபாட வல்லவர் பாணர் எனப்பட்டனர். இசைநலம் வாய்ந்த பாணரைப் பேரரசர்களும் குறுநில மன்னர்களும் வரிசையறிந்து ஆதரித்தனர். சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிப்பூம்பட்டினத்தில் பெரும்பாணர் சிறந்து விளங்கியதனை,

***குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்***
***வழுவின் றிசைத்து வழித்திறங் காட்டும்***
***அரும்பெறன் மரபிற் பெரும்பாண் இருக்கையும்***[5]

என்று சிலப்பதிகாரம் சுட்டுகின்றது. யாழில் இசைபாடும் பாணர் யாழ்ப்பாணர் ஆவர்.

யாழில் இசைபாடிப் பரிசில் பெறும் பாணனை,

***களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்***
***பாடின் பனுவற் பாணர்***[6]

என்று முடமோசியார் பாராட்டுகிறார். இப்பொழுது இக்குலத்தார் தமிழ் நாட்டில் இல்லை. ஆனால் மலையாள நாட்டில் இன்றும் காணப்படுகின்றனர்.

ஆவியர்குடியினர் பிறிதொரு குலத்தவர். புறநானூற்றில் பேசப்படுகின்றனர்.

வையாவிக் கோப்பெரும்பேகன் ஆவியர் குடியினன் ஆவான். ஆவியர் பெருமகன் என்று சிறுபாணாற்றுப்படை இவனைப் போற்றுகிறது. ஆவியர் குடியினர் ஆண்ட பகுதி 'ஆவிநன்குடி' எனப் பெற்றது. இன்று ஆவிநன்குடி 'பழனி' என வழங்குகிறது.

ஆவியரைப் போலவே ஓவியர் என்பாரும் பழந்தமிழ்க் குடியினர் ஆவர். ஓவியர்குடியில் பிறந்து சிறந்து விளங்கிய சிற்றரசன் ஓய்மான் நல்லியக் கோடன் என்பதைப் புறநானூற்றால்

*அறிகிறோம். திண்டிவனமும் அதைச் சார்ந்தஇடமும் ஓய்மாநாடு என்று பட்டயங்களால் தெரிகிறது.*

### I.3. நிலத்தெய்வம்

*குறிஞ்சி - முருகன்; முல்லை - மாயோன்; மருதம் - இந்திரன்; நெய்தல் - வருணன். பாலை - கொற்றவை என்பதைத் 'தெய்வம் உணாவே' என்ற கருப்பொருள் உரைக்கும் தொல்காப்பியம் அகத்திணையியல் 21ஆம் நூற்பாவிற்கு இளம்பூரணர் உரைக்கும் உரையால் அறிகிறோம்.*

### I. 4 கடவுட் கொள்கை

*தமிழ்மக்கள் மேற்குறித்தவாறு நிலத்தெய்வங்களை வழிபட்டாலும், பண்டைய தமிழ்மக்கள் பல்வேறு தெய்வப் பெயர்களை வழங்கியுள்ளனர் என்பது புறநானூற்றின்வழி அறியப்படுகிறது. புறநானூற்றால் சிறப்பாக முக்கட் செல்வனுக்கும், முருகக்கடவுளுக்கும் கோயில் இருந்தமையை அறிகிறோம்.*

***பணியிய ரத்தைநின் குடையே முனிவர்***
***முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே***[7]

*என்றும், "அணங்குடை முருகன் கோட்டம்"[8] என்றும் புறநானூற்றில் வருதல் கொண்டு இதனை அறியலாம். இவையேயன்றித் திருமால், இமயவர், பலதேவன் முதலிய கடவுளருக்கும் கோயில்கள் இருந்தன. ஞாயிற்றின் வெப்பத்தைத் தாங்கி நிலமக்கட்கு வேண்டிய அளவு நல்கும் முனிவரும் உண்டென்றும், அவர்கள், காற்றை உணவாகக் கொண்டு சுடரொடு திரிந்தனர் என்றும் புறநானூறு கூறுகின்றது.[9] முருகன் கோயிலில் தூய்மையில்லா மகளிர் ஒடுங்கித் தலைகவிழ்ந்து நிற்பார் என்பர்.[10] குறவர் மழை வேண்டும் காலையும், பெய்யும் மழை நிற்க வேண்டும் பொழுதும் கடவுளைப் பலிதூவிப் பரவியுள்ளனர்[11].*

*இங்ஙனம் கடவுளை உணர்ந்து வழிபட்டு ஒழுகிய மக்கள் வினை உயர்வும், மறுபிறப்பு உண்மையும் மேற்கொண்டிருந்தனர்.*

***வாழச் செய்த நல்வினை யல்லது***
***ஆழுங்காலைப் புணை பிறிதில்லை***[12]

என்றும், *தீதும் நன்றும் பிறர்தர வாரா, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன, சாதலும் புதுவதன்றே* என்றும் *நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர் முறைவழிப் படூஉம்* என்றும் *திறவோர் காட்சியிற் றெளிந்தனம்*[13]என்றும் *உயர்ந்த வேட்டத் துயர்ந்தி சினோர்க்குச், செய்வினைமருங்கின் எய்தலுண் டெனில் தொய்யா வுலகத்து நுகர்ச்சி கூடும்*[14] என்றும் வருவன பிறவும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. இவற்றோடு போரில் பட்டோர் தேவருலகத்தில் இன்புறுவர் என்னும் கொள்கை, வீரர் நெஞ்சில் ஊறியிருந்தது[15] என்றும் தெரிகிறது.

## II. குடும்பம்

குடும்பம் என்பது சமுதாயத்தில் ஓர் அடிப்படைக் கூறாகும். பல குடும்பங்கள் சேர்ந்தமைவதே ஒரு சமுதாயம்.

குடும்பம் நீடித்து நிலைபெறத் திருமண ஏற்பாடு இன்றியமையாதது. அது புனிதமானது என்றும் கொள்ளப் பெறுகிறது. சமுதாய ஒழுக்கத்திற்கும் விதிகளுக்கும் ஏற்ப நன்னெறி வாழ்க்கை வாழவேண்டும் என்ற நல்லுணர்வும், மக்கட்பேறு எய்த வேண்டும் என்ற விருப்பமும் திருமணத்திற்குரிய காரணங்களாகக் கருதலாம்.

பழந்தமிழ்க்கொள்கைப்படி திருமண வாழ்க்கையின் நோக்கம் பாலுறவு மட்டுமன்று. கணவன் - மனைவி உயர்நிலை எய்தி உய்தி பெறுவது இதன் தலையாய நோக்கமாகும். உயர்நிலை எய்தி உய்தி பெறுவதே குடும்ப வாழ்க்கையின் முடிவான நோக்கம் என்பதை

***காமஞ் சான்ற கடைக்கோட்காலை***
***ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி***
***யறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்***
***சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே***[16]

என்ற தொல்காப்பிய நூற்பா உணர்த்துகின்றது.

ஐந்திணை மரபின்படி தலைவனும் தலைவியும் காதல் ஒழுக்கம் நிகழ்த்தித் திருமணம் புரிந்து இல்லறம் நிகழ்த்தியது குறித்துச் சங்க அகநூல்களில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. புறநானூறு புறப்பாடல்களைக் கொண்டதால் திருமணம் குறித்த பாடல்கள் இடம்பெறவில்லை. ஆனால், கணவன் - மனைவி இல்வாழ்க்கை பற்றிய குறிப்புக்கள் புறநானூற்றில் உள்ளன.

## II. 1. இல்வாழ்க்கை

கணவன் மனைவியர் மேற்கொள்ளும் இல்வாழ்க்கை அறம், பொருள், இன்பங்களால் சிறப்புறும். இம்மூன்றானும் தன் குடிப்பெருமை விளங்கத் தலைவன் மனைவாழ்க்கை நடத்துவான் என்பதை

*நன்னெறிப்படரும் தொன்னலம்*[17] என்று தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

சோழன் நலங்கிள்ளிக்கு முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் கூறும் நல்லுரையில்,

***... அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்***
***ஆற்றும் பெருமநின் செல்வம்***
***ஆற்றாமை நிற் போற்றாமையே***[18]

என்று அறிவுறுத்துகிறார். அறம், பொருள், இன்பம் மூன்றையும் செய்தற்கு உன் செல்வம் உதவாது ஒழிந்தால் மக்கள் பிறவியில் பிறந்தும் பயனில் பிறப்பாக அமைந்து பொல்லாங்கு விளையும் என்பது இதன் வழி அறிவுறுத்தப் பெறுகிறது.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் அறமே தலையாயது என்று புறநானூறு வலியுறுத்துகிறது.

அறத்தோடு அன்பு கூடினால் இல்லறம் பண்பும் பயனும் உடையதாகும் என்பது குறள் கூறும் கருத்து.

எல்லா அறங்களுக்கும் அன்பே அடிப்படை என்பதை வள்ளுவர்

***அறத்திற்கே அன்பு சார்பென்ப***[9]

என்று வலியுறுத்துவர்.

அன்புடைமை அதிகாரத்திற்கு விளக்கம் தரும் பரிமேலழகர் ‘இல்லறம் இனிது நடத்தலும், பிற உயிர்கள் மேல் அன்பு பிறத்தலும் அன்பின் பயனாதலின் இது வேண்டப்பட்டது’ என்பர். கணவன் மனைவியிடத்து வேரூன்றி வளரும் அன்பு நாளடைவில் தம் மக்கள்,, உற்றார், உறவினர், சமுதாயத்தினர் ஆகிய பலரிடமும் பரவி அமைந்து பல அறங்களுக்கு வழிகோலுவதாகும் எனபார் கூற்று இங்கு நினைக்கத்தக்கது[20].

இழிசினர், புலவர், அரசர் ஆகியோர் தம் மனைவியர்பால் காட்டிய அன்பிற்குப் பல சான்றுகள் உண்டு.

மழைக் காலத்தில் கருவுற்றிருக்கும் தன் மனைவிக்காக விரைந்து கட்டில் பின்னும் இழிசினன் செயலை,

**கட்டில் நிணக்கும் இழிசினன் கையது**
**போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ**[21]

எனப் புறநானூறு சுட்டுகின்றது. இழிசினன் மனைவிபால் காட்டும் அன்பு அவனது செயலில் வைக்கப்பெற்றுள்ளது.

அரசர்கள் மனைவிபால் காட்டிய அன்புக்கும் பல நிகழ்ச்சிகள் உள்ளன.

மாக்கோதை என்ற சேரமன்னன் தன் காதல் மனைவி இறந்த போது அவள் உடலை ஈமத்தீயில் இட்டநிலையில்,

**ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை**
**இன்னும் வாழ்வ லென்னிதன் பண்பே**[22]

என்று மனம் நொந்து, இரங்கிக் கூறுவது மனைவியின்பால் கொண்ட அன்பு நிலையைப் புலப்படுத்துவதாகும்.

போருக்கு வீறிட்டெழுந்த பூதப்பாண்டியன்.

**அவர்ப்புறங் காணே னாயின் சிறந்த**
**பேரமர் உண்கண் இவளினும் பிரிக**[23]

என்று கூறும் வஞ்சினம், மனைவியைப் பிரிதல் மிகப்பெரிய கொடுமை என விளக்குகின்றது.

அரசர்களைப் போலப்புலவர்களும் மனைவியரிடத்துத் தாம் கொண்டிருந்த அன்பினைப் புலப்படுத்தியுள்ளனர்.

வறுமையால் வாடும் தன் மனைவியின் துன்பத்தைக் கண்டு அதனைத் தீர்த்தற் பொருட்டு வந்ததாகக் குமணனிடம் கூறுகிறார் பெருந்தலைச் சாத்தனார்.

**மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ**
**நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண**[24]

என்ற புறநானூற்றுத் தொடர்கள் இதனை எடுத்து மொழிகின்றன.

இதனைப்போலவே மனைவியின் வறுமைத்துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டு, சேரமான் குடகோச்சேரல் இரும் பொறையிடம் வந்ததாகப் பெருங்குன்றூர்க் கிழார் கூறுகிறார்.

'மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே' என்பது அவர் கூற்று [25].

கணவன்மார்கள் தத்தம் மனைவியரிடம் காட்டிய அன்பைப் போல, மனைவியரும் தத்தம் கணவன்மார்களிடம் அன்பு செலுத்தி இல்லறம் நிகழ்த்தியுள்ளனர். கணவன் பிரிவிலேயே இவ் அன்பு பெரிதும் புலப்படுகின்றது. பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து மற்றொருத்தியை நாடியகாலை, ***"அருந்துயருழக்குநின் திருந்திழை அரிவை"*** [26] என அரிசில் கிழாரும், ***"நீல்நறு நெய்தலிற் பொலிந்த உண்கண், கலுழ்ந்துவா ரரிப்பனி பூண் அகம் நனைப்ப"*** [27] எனப் பரணரும் பேகனிடம் கூறுகின்றனர். இவற்றால் கண்ணகி தன் கணவன்பால் கொண்ட அன்பை அறியலாம்.

## II. 2. மனைமாட்சி

இல்லறத்தில் மனைவி பல்வகையிலும் மாட்சி உடையவளாக இருப்பாள். தொல்காப்பியர் மனைவியின் மாண்புகளாகக் குறிப்பிடுவன.

***கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்து புறந்தருதலும் சுற்ற மோம்பலும்***
***பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்*** [28]

இத்தகைய மனைத்தக்க மாண்புகளுடன் விளங்கிய மனைவியரைப் புறநானூற்றுவழி அறியமுடிகிறது.

## II. 2. 1. கற்பு

தொல்காப்பியர் வதுவைச் சடங்கைக் கற்பு என்பர், கற்பிக்கப்படுவது கற்பு என்பது நச்சினார்க்கினியர் தரும் விளக்கம். பிறர் நெஞ்சம் புகாமை கற்பு என்பது சீத்தலைச் சாத்தனார் கருத்து. கற்பென்னும் திண்மை வாய்க்கப் பெறின் பெண்ணிற் பெருந்தக்கயாவுள எனப் பெருமைப்படுத்துவார் வள்ளுவர்.

இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் அளிக்கக் காலம் நீட்டியமைக்காக மனம் வருந்திய வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் அவன் மனைவியின் கற்பு நலத்தை,

***கடவுள் சான்ற கற்பிற் சேயிழை***[29] என்று போற்றுகிறார். இதன் வழி கற்பிற்குத் தெய்வ நலம் அளிப்பதைக் காண்கிறோம். மனைவிக்குரிய மாண்புகளுள் கற்புடைமை முதன்மையான பண்பாடாகச் சுட்டப் பெறுகிறது.

## II. 2.2. காமம்

இக்காலத்தில் காமம், காதலின் நெறிபிறழ்ந்த தன்மையாகக் கருதப்பெறுகிறது. அற்றை நாளில் காமம் என்ற சொல் விருப்பம் என்ற பொருளிலேயே பயின்று வந்தது. கமம்-காமம். இங்குக்காமம் ‘நிறை’ என்ற பொருளுடையது. எனவே, அன்பின் நிறைவே காமம் ஆகும்.

மனைவியின் இவ் அன்புடைமையாகிய காமம் புறநானூற்றில் விளக்கப் பெற்றுள்ளது.

பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து பரத்தையை நாடினான். ஆனால் கண்ணகியோ பிரிவுத் துன்பத்தைப் பொறுத்து நிறையுடையவளாக விளங்கினாள். இதனைப் பரணர் பேகனிடம் கூறுவார்.

> ***இனமணி நெடுந்தே ரேறி***
> ***இன்னாது உறைவி அரும்படர் களைமே***[30]

இங்கு அவள் அடையும் துன்பம் பொறுத்தற்கியலாது என்பதை ‘அரும்படர்’என்றும், அவள் பொறுமை காண்பவர்க்கு வருத்தம் தரக்கூடியது என்பதை ‘இன்னா துறைவி’ என்றும் சுட்டுகிறார். இங்குப் பொறையும் நிறையும் சிறந்த மாண்புகளாகச் சுட்டப் பெறுகின்றன.

## II. 2.3. விருந்தோம்பல்

இல்வாழ்க்கையில் தமிழரின் தலைசிறந்த பண்பு விருந்தோம்பல்,

> ***இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி***
> ***வேளாண்மை செய்தற் பொருட்டு***[31]

என்பார் வள்ளுவர். தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகம் காட்டி வரவேற்று அன்போடும் ஆர்வத்தோடும் உபசரிப்பதைத் தமிழ்மக்கள் கடமையாகக் கொண்டனர்.

உறவினரும் நண்பருமன்றிப் புதிதாக வருபவர்களையே தமிழ் மக்கள் விருந்தினராகக் கருதினர். புறநானூற்றில் விருந்தினர் என்பவர் புதியவர் எனக் குறிக்கப்படுகின்றனர்.

ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர்

***வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை***[32]

என்பர். வரும் விருந்தினர்களுக்குச் சுவையான உணவளித்து விருந்தோம்புவதே பழியற்ற வாழ்க்கை என்பது இவர் கருத்து.

பெருங்குன்றூர்க்கிழார், வறுமை காரணமாகத் தாம் விருந்து கண்டொளியும் அவலத்தை, உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியிடம் கூறுகையில்,

***விருந்துகண் டொளிக்கும் திருந்தா வாழ்க்கை***[33] என்றார்.
இப்புலவர் விருந்து கண்டொளிக்கும் தம் வாழ்க்கை
நன்மை இல்லாத இல்வாழ்க்கை என்கிறார்.

குறிஞ்சி நில மக்கள் விருந்தோம்பும் திறத்தை ஏணிச்சேரி முடமோசியார்,

***சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை***
***விடர்முகை அடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்,***
***புகர்முக வேழத்து மருப்பொடு, மூன்றும்,***
***இருங்கேழ் வயப்புலி வரிஅதட் குவைஇ,***
***விருந்திறை நல்கும் நாடன்***[34]

விருந்தினர்க்கு உடை முதலியன தந்து அறம் புரியும் திறத்தை ஔவையார் மொழிந்துள்ளார் (390)

## II. 2.4. மக்கட்பேறு

மனைவியின் மாண்பு வீட்டிற்கு மங்கலமாகும். அம்மாண்பிற்கு அணிகலனாகத் திகழ்வது மக்கட்பேறு என்பதை,

***மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்***
***நன்கலம் நன்மக்கட் பேறு”***[35]

என்பர் வள்ளுவர்.

மக்கட்பேறு என்பது ஒருவனையும் ஒருத்தியையும் தம் வாழ்நாள் முழுவதும் ஒன்றுபடுத்துவதாகும் என்பர்[36] அறிஞர்.

பாண்டியன் அறிவுடை நம்பி மக்கட்பேற்றின் இன்பத்தை அனுபவித்துக் கூறுவது அனைவர் உள்ளங்களையும் ஈர்ப்பதாகும்.

***படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்***
***உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்***
***குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்***
***நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்***
***மயக்குறு மக்களை யில்லோர்க்குப்***
***பயக்குறை இல்லைத் தாம்வாழு நாளே***[37]

## III. தொழில் - வாணிபம்

தமிழக மக்கள் தங்கள் உயரிய நாகரிகத்திற்கு இன்றியமை யாது வேண்டப்படும் தொழில்கள் பலவற்றையும் அறிந்திருந்தனர் என்பது சங்க இலக்கியங்களின்வழி அறிய முடிகிறது.

அந்தணர், அரசர், ஏனோர் என்னும் வருணப் பாகுபாடு தொல்காப்பியர் காலத்திலேயே தமிழகத்தில் புகுந்துவிட்டது என்பதைத் தொல்காப்பிய மரபியல் செய்திகள் வழி அறியலாம். இப்பாகுபாடு தமிழகச் சிற்றூர்களை ஊடுருவ வில்லை எனினும் தொழில் அடிப்படையிலான பல பிரிவுகள் அக்காலத்தில் இருந்தன. அந்தணர், அரசர், அளவர், இடையர், இயவர், உமணர், உழவர், எயிற்றியர் முதலான பல சாதிப்பகுப்புகள் இருந்ததைப் புறநானூற்றுப் பதிப்புரையில் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்[38].

தொடக்க நிலையில் தொழில்களுக்கிடையே உயர்வு, தாழ்வுக் கருத்தில்லை. அவரவர் செய்கடன் என்ற உணர்வே இருந்துள்ளது. ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே என்ற பொன்முடியார் பாட்டு இதனை மெய்ப்பிக்கின்றது. தெண்கடல் வளாகம் பொதுமையின்றி வெண்குடை நிழற்றும் அரசர்க்கும், கடுமாப் பார்க்கும் கல்லாதே ஒருவற்கும் எல்லாம் ஒன்று போலவே அமையும் என்பர் நக்கீரர்[39]. இப்பாட்டிலேயே தொழில் அடிப்படையிலான உயர்வு தாழ்வு இருப்பினும் அதனைக் கருத வேண்டாம் என்பது நக்கீரர் அறிவுரை. இவ்வாறு அறிவுரைக்கும் அளவே தொழில்களில் அக்காலத்தில் உயர்வு தாழ்வு உணர்ச்சி தோன்றியிருக்கிறது என அறியலாம்.

துடி எறிவோர், கட்டில் பின்னுவோரை 'இழிசினர்' என்று குறிப்பிடும் வழக்கு இருந்துள்ளது. இதற்கு ஆரியர் வருணப்பாகுபாடே காரணமாகும்.

***அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்***
***கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்***[40]

***ஏவல் மரபின் ஏனோரும் உரியர்***
***ஆகிய நிலைமை அவரும் அன்னர்***[41]

எளிய மக்கள் அன்பின் ஐந்திணைக்கு உரியர் அல்லர் என்று மேற்கண்ட நூற்பாவிற்குப் பொருள் உரைப்பர் இளம்பூரணர். 'ஏவல் மரபு' என்ற தொடர் அடிமைப்பணி செய்வதற்கு என்றே மக்கள் இருந்தமையினைக் காட்டுகின்றது.

கிரேக்க நாட்டிலும் நாலரை இலட்சம் மக்கள் அடிமைகளாக இருந்தனர் என்றும், உடல் உழைப்பு இழிவாகக் கருதப்பட்ட தென்றும் அறிஞர் கூறும் செய்திகள் இங்கு நினைக்கத்தக்கன. [42]. தமிழகத்தில் இந்த அளவுக்கு இல்லையெனினும் பரணர் போன்ற புலவோர் தம்மையே இரவலர் எனக் குறித்துக் கொள்ளுதல், சில பிரிவு மக்களை 'இழிசினர்' எனக் கூறுதல் ஆகியன பண்டைத் தமிழகத்தில் நிலவிய சாதி உயர்வு தாழ்வு மனப்பான்மையைக் காட்டுவன எனலாம் [43] என்பார் கூற்றிலும் உண்மை உள்ளது.

### III. 1. உழவுத்தொழில்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உயிர்நாடியாக இருப்பது உழவுத் தொழிலேயாகும். வாழ்விற்கு இன்றியமையாத உணவை அளிப்பது இவ் உழவுத் தொழிலே. இதனாலன்றே ***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே*** [44] என்றனர். உழவுத்தொழில் நீர்வளம் மிக்க மருத நிலத்தில் நடைபெற்றது. உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் என்ற சொற்கள் உழவுத் தொழில் செய்வோரைக் குறிக்கும். தமக்குரிய நிலத்தில் தாமே உழுது பயிர் செய்பவர் 'களமர்' என்றும் அழைக்கப்பட்டனர்[45]. உழவர்கள் நெல்லோடு கரும்பு முதலிய பிற பயிர்களையும் பயிரிட்டனர். அவ்வவ் நிலமக்களின் தொழில்கள் முன்னரே விளக்கப்பட்டுள்ளன.

## III. 2. நெசவுத் தொழில்

*நாகரிகம் மிக்க சமூகத்தின் சிறந்த அடையாளமான நெசவுத்தொழில் அக்காலத்தில் மிகச்சிறப்புடன் நடைபெற்றுள்ளது.*

> ***நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து***
> ***அரவுரி அன்ன அறுவை*** [46] என்றும்

***ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்***[47] என்றும் நுட்பமிக்க ஆடை நெசவினைக் குறிக்கின்றன.

> ***போதுவிரி பகன்றைப் புதுமலரன்ன***
> ***அகன்று மடி கலிங்கம்*** [48] ***என்றும்***

> ***பாம்புரி யன்ன வடிவின காம்பின்***
> ***கழைபடு சொலியி னிழையணிவாரா***
> ***ஒண்பூங் கலிங்கம்*** [49]

என்றும் புறநானூறு நெசவுத்தொழிலைப் போற்றுகிறது. *ஆளில் பெண்டிர் தாளிற் செய்த நுணங்கு நுண் பனுவல்*[50] என்ற நற்றிணைக் குறிப்பால் கைம்மை நோன்புடைய மகளிர் நெசவுத் தொழில் புரிந்தனர் என உணரலாம்.

## III. 3. பிற தொழில்கள்

உழவுத்தொழில், நெசவுத் தொழில்களேயன்றி **"*வைகல் எண்தேர் செய்யும் தச்சன்*"**[51] எனத் தச்சுத் தொழில் திறமும், வேட்கோச் சிறார் தேர்க்கால் வைத்த பசுமட் குரூஉத் திரள்[52], எனக் குயச்சிறுவர் மனக்குறிப்பின்படியே கலன் உருவாவதன் திறமும் பேசப்பெற்றுள்ளன. ஆடை நெய்பவன் "புலநிதி" எனப்பட்டான். இரும்புசெய் கொல்லன் வேல் முதலியன செய்து கொடுக்கும் கடப்பாட்டினன் எனவும், அவனது உலைக் களத்தில் போரிற் சிதைந்த ஆயுதங்கள் பழுதுபார்ப்பதற்குக் கிடந்தன என்றும் கூறுவர்[53].

> ***ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த***
> ***பொலன் செய் பல்காசு அணியிழை***[54]

அருங்கலம் எனப் பலப்பெயர்களைப் பொன்னும் வெள்ளியும் கொண்டு உருவாக்கிய கலன்கள் பெற்றன [55].

### III. 4. வாணிகம்

சங்க காலத்தில் வாணிகம் செழிப்புற்றிருந்ததைப் புறநானூற்றுப் பாடல்கள்வழி உணர முடிகிறது.

குட்டுவன் என்ற சேரமன்னனின் துறைமுகப் பட்டினமாகிய முசிறியில் தமிழகத்துப் பல பண்டங்கள் நிறைந்திருக்கும் சிறப்பினைப் பரணர் எடுத்துரைத்துள்ளார்.

"மீனினைவிற்று நெற் குவியலைப் பெறுவார்கள் ஓடத்தில் ஏற்றி வந்த நெற்குவியல்கள் வீட்டையே மறுகச் செய்யும், வீட்டில் வைக்கப் பெற்றிருந்த மிளகு மூட்டைகள் வாணிகத்திற்காகக் கடற்கரைக்குக் கொண்டு சேர்க்கப்படும். அம்மிளகு மூட்டைகளை வெளிநாட்டுக் கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்து, கப்பல் வழிவந்த பொற் பரிசில்களை ஓடங்கள் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும்"[56], என்று பரணர் தம் பாட்டில் விளக்கியுள்ளார்."

***யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்***[57] என்ற நக்கீரரின் புறநானூற்றுத் தொடர் வெளிநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு மதுக் கொண்டு வந்த செய்தியைக் குறிக்கின்றது.

### III. 5. மரக்கலம் செலுத்துதல்

வாணிகம் செய்வதற்குப் பண்டைத் தமிழ் மக்கள் மரக்கலங்களைப் பயன்படுத்தினர். மரக்கலம் செலுத்துவதற்குப் பருவக்காற்றுப் பற்றிய செய்திகளை அறிந்திருந்தனர். வளிதிரிதரு திசையும்[58] என்ற புறநானூற்றுச் சொற்றொடர் இவ்வுண்மையை விளக்கும்.

சோழன் கரிகாற் பெருவளத்தானை,

***நளியிரு முந்நீர் நாவா யோட்டி***
***வளிதொழி லாண்ட உரவோன் மருக***[59]

என வெண்ணிக்குயத்தியார் குறிப்பிடுவதாலும் இதனை அறியலாம்.

### III. 6. பண்டமாற்று

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு நிலத்திலும் ஒவ்வொரு வகையான பொருள் கிடைத்தது. அப்பொருள் பிறநிலத்தவருக்குப் பண்டமாற்றுச் செய்யப் பெற்றது. நெய்தல் நில மக்கள் மீனுக்கு

மாற்றாக நெல்லைப் பெற்றனர்.

முல்லைநில வேடர்கள் மான் இறைச்சியைக் கொடுத்துத் தயிரினைப் பெற்ற செய்தியும் அறிய வருகிறது.

### III. 7. உப்பு வாணிகம்

உமணர்கள் என்போர் உப்பு வணிகம் செய்தனர். பாரி இறந்த போது கபிலர் பாடும் கையறு நிலைப் பாடலில், பாரி உயிரோடு இருந்த போது இளமகளிர் பகையரசர்களின் யானைகளையும் குதிரைகளையும் எண்ணுவர்; அவன் இறந்தபிறகு உமணர்களின் உப்பு வண்டிகளை எண்ணுகின்றனர்[60]. இதன் வழி வண்டிகளில் உப்பு ஏற்றி வணிகம் செய்ததை அறியமுடிகிறது.

### IV. மகளிர்நிலை

சமூகத்திற்கு அச்சுப் போன்றவர்கள் பெண்கள். ஒரு சமுதாயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமையினின்றும் அதனுடைய நாகரிகப் பண்புமேம்பாடு உணரப்படும். பழங்காலச் சமுதாயத்தில் பெண்கள் பெரிதும் மதிக்கப்பட்டே வந்துள்ளனர். “நமது நாட்டில் பெண்களை வெகுகாலமாக அடிமைகளாகவும் ஆடுமாடு போலவும் நடத்தி வந்திருக்கிறோம். புறநானூற்று முன்னையோர் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. அவர்கள் மிக்க மாண்புடன் நடத்தி வந்திருக்கிறார்கள்” என்பார் கூற்று இங்கு நினையத் தக்கது.[61]

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**[62]

என்ற தொல்காப்பிய நூற்பா ஐந்திணையிடத்து நிகழும் காமக் கூட்டத்தைக் கூறுகிறது. பல்லாற்றானும் ஒத்த தலைமகனும் தலைவியும் தற்செயலாக எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் காதலித்துத் திருமணம் செய்து கொள்வர். இவ் உண்மை சங்க அகப்பாடல்களால் உறுதிபெறுகிறது. இதனால் சங்க காலத்தில் மகளிர் தாம் விரும்பிய கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்பது புலனாகும்.

பெண்கள் மிகவும் போற்றப்பட்டனர் என்பதை,

**மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன்**[63]

எனப் புறநானூறு குறிப்பிடுகிறது.

ஏகபத்தினி விரதமே தக்கது என்பதை,

**வடமீன் புரையும் கற்பின் மடமொழி**
**அரிவை தோள்அள வல்லதை**
**நினைதெனை இலை நீ**[64]

என்ற புறநானூற்றுத் தொடர்கள் வலியுறுத்துகின்றன.

புறாநானூற்றுக் காலத்தில் பெண்கள் பெரும்பாலும் இல்லறக் கடமைகளுக்கு உரியவர்களாகவே கருதப்பட்டனர். இல்லறக் கடமையேற்ற பெண்கள் உயிரினும் சிறந்ததாக நாணத்தைக் கருதினர் என்பர் தொல்காப்பியர். நாணம் என்பதற்கு அடக்கம் என்றும் பொருள் கொள்ளலாம்.

பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் பரிசில் நீட்டித்த விடத்து, ஆவூர் மூலங்கிழார் என்ற புலவர் தம் மனைவியைக் குறித்து.

**நாணல தில்லாக் கற்பின் வாணுதல்** [65] என்கிறார்.

## IV. 1. மகளிர் அழகு செய்தல்

மகளிர் எக்காலத்தும் தம்மை அழகுபடுத்திக் கொள்வதில் மிக்க விருப்பமுடையவர்கள். ஆனால் கணவன் தன்னைப் பிரிந்திருக்கும் காலை மனைவி பூ முதலியவற்றால் தன்னை அழகுபடுத்திக் கொள்வதில்லை என்பதைப் புறநானூறு உணர்த்துகிறது.

போர்ப்பறை கேட்டதும் வீரர்கள் போர்க்களம் போய்விடவே தனித்து இருக்கும் பெண்டிர் பூவினை வாங்க மாட்டார்கள் என்று கருதிப் பூ விற்பனை செய்யும் பெண் திரும்பிச் செல்வதை நொச்சி நியமயங்கிழார் என்ற புலவர்,

**அளியள் தானே பூவிலைப் பெண்டே**[66] என்று குறிப்பிடுவார். சங்ககாலத்தில் பெண்கள் தம் கணவருக்காகவே தம்மை அழகுபடுத்திக் கொண்டனர் என்பதை இதன்வழி அறியலாம்.

## IV. 2. அரண்மனையில் மகளிர்

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுங்செழியன் போரில் வெற்றி பெற்றதைச் சிறப்பித்துப் பாடுகிறார் மாங்குடி கிழார் என்ற புலவர். அப்போது ஒள்ளிய

வளையலை உடைய மகளிர் பொற்கலத்தில் நறுமண மதுவை நெடுஞ்செழியனுக்கு வழங்கினர்[67] என்று குறிப்பிடுகிறார்.

### IV. 3. மகளிர் வீரமும் நாட்டுப்பற்றும்

சங்ககால மகளிர் வீரஉணர்வுடன் நாட்டுப்பற்று மிக்கவர்களாகவும் திகழ்ந்தனர். பகைவர்களிடமிருந்து தாய்நாட்டைக் காப்பாற்றத் தம் மக்கள், கணவர் ஆகியோரைத் தியாகம் செய்தனர்.

போர்க்களத்தில் புறமுதுகு காட்டாது தன்மகன் இறந்த செய்தியைக் கேள்வியுற்ற தாய் போர்க்களம் சென்றாள். தன் மகனின் வீரமரணத்தைக் கண்டு பெருமிதமுற்றாள். அப்போது அவளுடைய வற்றிய மார்பில் பால் சுரந்தது எனப் பாடுகிறார் ஔவையார்[68].

தன்மகன் போரில் இறந்ததற்கு இவள் வருந்தவில்லை. நாட்டைக் காப்பதற்கு உயிர் கொடுத்தானே என்று பெருமிதப்படுகிறாள்.

தன்மகன் போரில் புறமுதுகிட்டு இறந்தான் என்று சிலர் கூறிய செய்தியைக் கேட்டாள் மற்றொரு தாய்! இச்செய்தி உண்மையாக இருக்குமேயானால் அவன் பாலுண்ட மார்பை அறுத்தெறிவேன் என்று வஞ்சினம் கூறிப் போர்க்களம் சென்றாள். மகனோ மார்பில் புண்பட்டு இறந்து கிடப்பதைக் கண்டாள். அப்போது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை,

***ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே***[69] என்று சுட்டுகிறார் நச்செள்ளையார்.

மற்றொரு மறக்குடி மகள், முதல்நாள் போரில் தன் தமையனையும், மறுநாள் போரில் தன் கொழுநனையும் இழந்த பின்னரும் அதற்காக மனந்தளராது மூன்றாம் நாள் போருக்குத் தனக்கு ஆதரவாக இருந்த ஒரே மகனையும் அனுப்பினாள் என்று ***கெடுக சிந்தை கடிதிவள் துணிவே***[70] என்று தொடங்கும் புறப்பாடல் குறிப்பிடுகின்றது.

இதனால் பெண்கள் தம் மக்கள் வீரமுள்ளவர்களாகத் திகழ வேண்டும், பகைவர்களோடு போர் செய்து நாட்டைக் காப்பாற்ற

வேண்டும் என்ற உயரிய பண்புகளைப் பெற்றிருந்தமையை அறியமுடிகிறது.

## IV. 4. கைம்மை நோன்பு

சங்ககால மகளிர் கணவனை இழந்த பின்பு கடுமையான கைம்மை நோன்பு மேற்கொண்டு தம் வாழ்நாளைக் கழித்தனர் என்ற செய்தியைப் புறப்பாடல்கள் கூறுகின்றன.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் வஞ்சினப்பாட்டு, கணவனை இழந்த மகளிர் கூந்தல் கொய்வர் என்பதைக் குறிக்கின்றது.[71]

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரில் இறந்துபட்டனர். அவர்களுடைய மனைவியர் பசிய இலையைத் தின்னாமலும், குளிர்நீரில் மூழ்காமலும் இறந்துபட்ட தத்தம் கணவரின் மார்பைத் தழுவிக் கிடந்தனர் என்பர் கழாத்தலையார்[72].

கணவனை இழந்த மனைவி தன் கூந்தல் கொய்து வளையல் களைந்து அல்லி அரிசியை உண்டு துன்புற்றதைத் தாயங் கண்ணியார் என்ற புலவர் கூறுகின்றார்.

## IV. 5. மகளிர் கல்வி

அக்காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் கல்விகற்றுச் சிறந்திருந்தனர். புறநானூற்றில் 15 பெண்பாற் புலவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

கரிகாற்சோழன் வெண்ணிப் போர்க்களத்தில் பெற்ற வெற்றியைப் பாடியவர் குயவர் குலத்தினர்; இவர் வெண்ணிக் குயத்தியார் எனப்பட்டார்.

நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர் மலையமான் திருமுடிக்காரியையும் பிறரையும் பாடியுள்ளார். இன்னும் ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்களும் சிறந்து விளங்கியுள்ளனர்.

"கல்விச் சிந்தனை" என்ற தலைப்பில் மகளிர் கல்வி மேம்பாடு விரித்துரைக்கப்பட்டுள்ளது.

### IV. 6. பரத்தையர்

சங்ககாலச் சமுதாயத்தில் பரத்தமை ஒழுக்கம் பெரிதும் இருந்தது என்பதை மறுக்க இயலாது. பரத்தையர் பொது மகளிர் என்றும், பொருட்பெண்டிர் என்றும் அழைக்கப்பட்டனர்.

சோழன் நலங்கிள்ளி தம் வஞ்சினப்பாடலில், எதிரியைப் போரில் வெல்லவில்லை எனில், தம் நெஞ்சத்தில் காதல் கொள்ளாத பொதுப் பெண்டிரைத் தழுவியவனாவேன் என்று உரைக்கின்றான். இதனால் பொதுப் பெண்டிர் ஒழுக்கம் கடியப்படுதலும் புலனாகிறது.

### V. பழக்க வழக்கம்

பழக்க வழக்கம் என்பது தனிமனிதனிடம் இயல்பாக வந்து அமைந்த நடத்தையாகும். இது ஒரு செயலின் தொடக்க நிலையைக் குறிக்கும். தமிழ் இலக்கியத்தில் பழக்கம் என்ற சொல் “பழகுதல்” என்ற பொருளில் ஆளப்பட்டு உள்ளது. பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். இது சமுதாயம் சார்ந்த ஒன்றாகும். ஒழுக்கத்தாலும் செய்கையாலும் வழக்கம் உருவாகிறது.

தனிமனிதனும் சமுதாயம் என்ற அமைப்பும் சேர்ந்து பழக்க வழக்கங்களை உருவாக்குகின்றன. இவை சமூகத்தின் குறிக்கோள், தேவை ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுகின்றன.

பழக்க வழக்கம் என்ற புணர்மொழியோடு *மரபு* என்ற சொல்லும் தொடர்புடையது. மரபு என்பது வழக்கமாகத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப் பெறுவது.

புறநானூற்றில் பண்டைய தமிழரின் சில பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. அவை அக்காலப் பண்பாட்டினைப் புலப்படுத்துவன.

### V. 1. குடிப்பழக்கம்

நானிலமக்களும் உணவுடன் கள் வகைகளைப் பருகுவது பெரு வழக்காக இருந்தது. மதுவகைகளுள் தேறல், நறவு, தோப்பி, அரியல், கந்தாரம், பிழி, வேரி, மட்டு முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இஞ்சியாலும் மலராலும் தொகுக்கப் பெற்ற

மாலையைக் கட்குடத்தின் கழுத்தில் கட்டி, பானையில் சந்தனத்தை அப்பி வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். கள் விலைக்காக யானைக் கொம்பினைக் கொடுத்தனர்.

### V. 2. ஆடை - அணிகள்

மகளிர் 'கலிங்கம்' என்னும் ஒருவகை ஆடையை அணிந்தனர். கோடை, குளிர் முதலிய காலங்களுக்கேற்ப உடைமாற்றி உடுத்தினர்.

காலில் பொன்சலங்கை, இடுப்பில் பொன் மணிவடம், அவைமேல் சிவந்த பலவடங்கள், அவற்றின்மேல் பூந்துகில், கையில் அழகிய தொடி முதலியவற்றை அணிவதை வழக்கமாகக் கொண்டனர்.

### V. 3. மாலையணிதல்

ஆத்தி, வேம்பு, பனம்பூ முதலிய அடையாள மாலைகளை மூவேந்தர் சூடினர்; ஆடவர் கண்ணியைத் தலையிலும், மாலையை மார்பிலும் அணிந்தனர். பெண்கள் தமக்குரிய மாலையை மார்பில் அணிந்தனர். மறவர்கள் போர்க்களம் செல்லும் போது போர் நிலைக்கேற்ப வெட்சி, கரந்தை முதலிய பூக்களைச் சூடினர்.

***ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென***
***மாடமதுரையும் தருகுவன்***[73]

என்ற புறநானூற்றுத் தொடர்கள் சோழ மன்னனின் மறச்சிறப்பை உணர்த்துவதுடன் உடன்பாட்டு முகத்தால் பூவையரின் மலர்சூடும் இன்றியமையாமையையும் காட்டுவன.

நலங்கிள்ளி ஆவூரை முற்றுகையிட்டதால் ஏற்பட்ட அவல நிலையைக் குறிக்கும் போது *பூவில் வறுந்தலை முடிப்பவும்* என்று மடந்தையர் பூச்சூட இயலாத நிலையைப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

### V. 4. கலம் தொடா மகளிர்

பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் தூய்மையற்றவர்களாகக் கருதப்பட்டனர். அக்காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்கள் *கலம் தொடா மகளிர்* எனப்பட்டனர்.

புறநானூற்றுப் பாடல் ஒன்று கலந்தொடா மகளிரைப் பற்றிய தெளிவான குறிப்பைச் சுட்டுகிறது.

சிற்றூர் மன்னனின் குதிரைத் தாக்குதலுக்குப் பகை மன்னனின் குதிரை பின்னிட்டதற்கு, முருகன் கோயிலில் விலக்குடைய மகளிர், பாண்டங்களைத் தொடப் பின்வாங்குதல் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இதனை,

> **அணங்குடை முருகன் கோட்டத்துக்**
> **கலம் தொடா மகளிரின் கந்துநின்றவ்வே**[74]

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

## V. 5. ஈமச் சடங்கு

பிறந்தோர் இறப்பர் என்பது மறுக்க இயலாத உண்மை. ஆனாலும், இறந்தவர்களுக்குச் சில சடங்குகள் செய்வது வழக்கமாக உள்ளது. இது ஈமச்சடங்கு எனப்படும்.

“இழிசினனாகிய புலையன் உப்பின்று வேகவைத்த சோற்றைப் படைக்கும் இறுதிநாள் வரும் முன்பே இந்நில உலக வாழ்க்கையைப் பற்றறத் துறக்க வேண்டும்”[75] என்று ஐயாதிச் சிறு வெண்டேரையார் என்ற புலவர் கூறுகின்றார்.

உப்பின்றி வேகவைத்த சோற்றை இறந்தவர்க்குப் புலையன் பலியாகப் படைக்கும் வழக்கம் இருந்தது என்பதை அறியமுடிகிறது.

இறந்தவரைத் தீயிலிட்டு எரிக்கும் முன்பு புலையன் உண்ணுமாறு தருப்பைப் புல்லின் மேல் கள்ளுடன் சோறாகிய உணவைப் படைக்கும் வழக்கம் உண்டு என்பதைச் சங்க வருணர் என்னும் நாகரையர் அறிவுறுத்துகிறார்.[76]

## V. 6. முதுமக்கட்டாழி

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் உடலைக் கவிழ்த்து வைக்கத் தாழி செய்யுமாறு வேண்டுகிறார் ஐயூர்முடவனார். [77] தன் கணவனுடன் தானும் கூடியிருக்கும்படி செய்யுமாறு பெண் ஒருத்தி குயவனிடம் கேட்டதாக முதுபாலைப் பாட்டொன்று கூறுகிறது. [78]

### V. 7. போர்ப் பழக்கவழக்கங்கள்

போரில் புண்பட்டுத் துன்புறும் வீரனைக் காக்க மனையைத் தூய்மை செய்து ஒப்பனை செய்தலும், இனிய இசைபாடுதலும், நறுமணப் பொருள்களைப் புகைத்தலும் பண்டைய தமிழ் மக்கள் மரபு என்பதை அரிசில் கிழார் பாடல் உணர்த்துகின்றது.[79]

குழந்தை இறந்தாலும் தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அதனைத் தருப்பைப் புல்லில் கிடத்தி வாளால் பிளந்து அடக்கம் செய்தனர் பழந்தமிழர்[80].

### VI. நம்பிக்கைகள்

"சமூகத்தின் தேவைகள், குறிக்கோள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நம்பிக்கைகள் தோன்றுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன"[81] என்பர்.

மனித மனத்தின் விழைவால் நம்பிக்கை தோன்றுகிறது. தீமைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள நல்லவை நடக்க வேண்டும் என்ற விழைவால் நம்பிக்கைகள் தோன்றியுள்ளன.

### VI. 1. விரிச்சி கேட்டல்

ஒரு செயலைச் செய்வதற்கு முன்பு சகுனம் பார்த்தல் மக்களிடம் இருந்து வந்துள்ளது. இதன் வகைகளில் ஒன்றே விரிச்சி கேட்டல். நாம் ஒரு செயலைச் செய்வதற்கு முன்னர் அருகில் உள்ளவர்கள் அதனோடு இயைபுடையதைச் செய்தாலோ சொன்னாலோ அல்லது இயைபில்லாதவற்றைச் செய்தாலோ சொன்னாலோ அது தன் செயலை முடிவு செய்யும் என்று கருதுதல் விரிச்சி எனப்படும்.

தன் கணவன் இறந்து பட்டதற்காக மனைவி பெரிதும் வருந்துவதாகக் கூறும் மாறோக்கத்து நப்பசலையார்.

> ***நெல்நீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்***
> ***செம்முது பெண்டின் சொல்லும் நிரம்பா***

என்ற தொடர்களில் விரிச்சி கேட்கும் வழக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

### VI. 2. நன்னிமித்தம்

நிமித்தங்களில் நன்னிமித்தம், தீநிமித்தம் என இருவகை உண்டு.

நாள் நிமித்தம், பறவை நிமித்தம், பிறவற்றின் நிமித்தங்களால் நன்மை தீமைகளை அறிந்து மற்றவர்கள் உவத்தலும் அச்சங் கொள்ளுதலும் எய்தித் தலைவன் நலம்பெற எதிர்கால நோக்கில் வாழ்த்துதல் ''ஓம்படை'' எனப்படும்.

***அச்சமும் உவகையும் எச்சமின்றி***
***நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்***
***காலம் கண்ணிய ஓம்படை[82]***

என்னும் தொல்காப்பிய நூற்பா உன்னநிலை, விரிச்சி கேட்டல். பல்லியின் சொற்கேட்டல் முதலியற்றைப் பிறவற்றின் நிமித்தம் என்பதன் விளக்கமாகக் கொள்ளலாம்.

### VI. 3. உன்னநிலை

உன்னம் என்பது ஒருகை மரம், உன்ன மரம் பற்றித் தொல்காப்பியர் புறத்திணையியலில் ''ஓடா உடல் வேந்தன் அடுக்கிய உன்னநிலை'' என்பர்.

உன்ன மரம் தன் நாட்டகத்துக் கேடு வருங்கால் உலர்ந்தும், வாராக்கால் குழைந்தும் நிற்கும் எனக் கூறுவர். இளம்பூரணர் இம்மரத்தைத் தெய்வ மரமாக எண்ணி வழிபட்டு நிமித்தம் அறிவது உன்னநிலை என்பார்.

### VI. 4. புள் நிமித்தம்

புள் என்பது பறவை. புறத்தே இருந்து புதுப் பறவைகள் தன் நாட்டிற்கு வரினும், தன் நாட்டில் நெடுநாள் உறைந்த பழம் பறவைகள் வெளியே செல்லினும் தீநிமித்தமாகப் பண்டையோர் கருதினர்.

இச்செய்தியைக் குறுங்கோழியூர்கிழார் என்ற புலவர்,

***புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்***
***விதுப்புற வறியா ஏமக் காப்பினை;***
***அனையை ஆகன் மாறே,***
***மன்னுயிர் எல்லாம் நின்னஞ்சுமே[83]***

என்பர். நிமித்தம் பார்ப்பதில் காக்கைக்கும் சிறப்பான இடம் உண்டு, காகம் கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது.

### VI. 5. மழை நிமித்தம்

செங்கோலாட்சியில் மழைபொழியும், வருவாய் பெருகும், தொழில்வளம் கொழிக்கும் என்பது மக்கள் நம்பிக்கை. இவற்றில் குறை ஏற்படின், மன்னனின் கொடுங்கோல் ஆட்சியே காரணம் என்று மன்னரைப் பழிப்பர். இந்நம்பிக்கையை வெள்ளைக்குடி நாகனார் பாடற்பகுதியில் அறியலாம்.

***மாரிபொய்ப்பினும் வாரிகுன்றினும்***
***இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும்***
***காவலர்ப் பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்***[84]

***மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்***
***தென் திசை மருங்கின் வெள்ளி யோடினும்***[85]

என்று கூறப்பட்டவை தீநிமித்தம் உணர்த்துவன என்றும், அவற்றைக் கடந்து பாரியின் செங்கோன்மை நாட்டு வளத்தை நாட்டுகிறது என்பர் கபிலர்.

### VI. 6. கனவு

இலக்கியத்தில் கனவுகள் , நம்பிக்கைகளாகவும், வருஞ் செயலை முன்னர் உணர்த்துவனவாகவும் அமைந்துள்ளன. கனவுகள் உள நோயால் ஏற்படும் என்பர் வேறு சிலர்.

எயிறு நிலத்தில் வீழ்தல், "தலையில் எண்ணெய் தேய்த்து இருத்தல், களிறுமேல் ஊர்தல், கட்டிய ஆடை நீங்கல், படைக்கலம், கவிழ்தல், கோட்டுமா ஊர்தல்" ஆகிய கனவுகள் தீநிமித்தங்களைக் குறிப்பன எனப் புறநானூற்றால் அறிகிறோம்.[86]

### VI. 7. இருவினைப் பயன்

நல்வினை புரிந்தார் மேலுலகம் சென்று இன்புறுதலும், தீவினை புரிந்தார் நிரயம் சென்று துயருறுதலும் தவிர்க்க முடியாதவை என்பது பண்டையோர் துணிபு.

***புலவர்பாடும் புகழுடையோர் விசும்பின்***
***வலவன் ஏவா வான ஊர்தி***

***எய்துப என்பதம் செய்வினை முடித்து***[87]

என்பது நல்வினைப் பயனுக்கும்,

***இவணிசை உடையோர்க்கு அல்லது அவணது***
***உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை***
***விளங்கக் கேட்ட மாறுகொல்***[88]

என்பது தீவினைப் பயனுக்கும் சான்றுகளாகும்.

## VII. கலைகள்

கலை என்பதற்குப் பலர் பலவாறு விளக்கம் தருவர். உள்ளத்து உணர்வின் வெளிப்பாடே கலையாகும். ஓவியன் தன் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்துவது ஓவியக்கலை. சிற்பி தன் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தல் சிற்பக்கலை. இசைஞன் தன் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்துதல் இசைக்கலை. இவ்வாறு ஆயகலைகள் அறுபத்து நான்கு என்பர். ஒரு நாட்டின் கலை வளர்ச்சி, அந்நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் குறிக்கும்.

புறநானூற்றில் கலைகள் குறித்த குறிப்புகள் மிகுதியாக உள்ளன. ஆய்வுச் சுருக்கம் கருதி ஒவ்வொரு கலைக்கும் சில சான்றுகள் மட்டும் கூறப்பெற்றுள்ளன.

### VII. 1. இசைக்கலை

பண்டைத் தமிழ் வேந்தர்கள் இயற்றமிழைப் போல் இசைத் தமிழையும் நன்கு வளர்த்தனர். அக்கால இசைக்கருவிகளில் குழலும் யாழும் சிறந்தனவாகக் கருதப்பட்டன. சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதையால் மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ், பேரியாழ் என நால்வகை யாழ்கள் இருந்தமையை அறியலாம்.

பாணர் என்பவர் சீறியாழ் என்னும் சிறிய யாழைச் செல்லுமிடமெல்லாம் கையகத்து வைத்திருந்ததால் “கைவழி” என்று பெயர் பெற்றது.

இசை வாணராகிய பாணரை ஆதரித்த குறுநில மன்னர்களில் ஒருவன் பெருநள்ளி என்பவன். இவனைப் பரணர் என்பார் பாடிய ***“நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்”***[89] என்று தொடங்கும் புறப்பாட்டில், மன்னன் கொடுத்த உணவால் மயங்கிய பாணர்கள் இசை மரபினை மறந்து மாலைப் பொழுதில் பாடுதற்குரிய

செவ்வழிப் பண்ணைக் காலைப் பொழுதில் பாடுகின்றனர் என்றும், காலையில் பாடுதற்குரிய மருதப் பண்ணை மாலையில் பாடுகின்றனர் என்றும் நயமாகக் குறிப்பிட்டுள்ளார்.

### VII. 2. ஆடற்கலை - கூத்துக்கலை

நாட்டியக் கலையே ஆடற்கலை எனப்படும் அக்கால வள்ளல்கள் இக்கலையை ஓம்பினர். பாரி, கோப்பெருஞ்சோழன் குறித்த பாடல்களில் ஆடற்கலை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

***ஆடினிர் பாடினிர் செலினே***
***நாடுங் குன்றும் ஒருங்கீயும்மே***[90]

என்று கபிலர் பாரியைப் பாராட்டுவர்.

இதனைப் போலவே கோப்பொருஞ்சோழனும் ஆடற்கலையை ஊக்குவித்தான் என்பது,

***ஆடுநர்க் கீத்த பேரன்பினன்***[91]

என்ற புறநானூற்றுத் தொடரால் அறியமுடிகிறது.

***செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த*** [92]

என்று பாண்டியன் ஒருவன் சுட்டப்படுகிறான். வயிரியர் எனப்படுவோர் கூத்தாடுபவர் ஆவர். கூத்தாடுவோர் கோலங்களைந்து மாறிமாறி வருவது போலே உலகில் உள்ளோரும் செத்துப் பிறந்து மாறிமாறி வருதலுமுண்டு என்பது இப்பாட்டில் சுட்டப்படுகிறது. இதனால் அக்காலத்தில் கூத்தர் இருந்தமையும், அவர்தம் கூத்துக் கலையை மக்கள் விரும்பிப் பார்த்தமையும் தெரிகின்றன.

### VII. 3. ஓவியக் கலை

பழந்தமிழ் மக்கள் ஓவியங்களை எழுதி அவற்றின் வாயிலாகக் கருத்துக்களைப் புலப்படுத்தினர்[92] என்பர். இதனால் தொடக்க காலத்தில் இருந்தே ஓவியம் தீட்டும் பழக்கம் இருந்தது தெரியவருகிறது. இக்கலை இசைக்கலை, ஆடற்கலை ஆகிய கலைகளுக்கு முன்னே தோற்றம் பெற்றது என்று கொள்ளலாம்.

மலையடிவாரத்தில் வாழ்ந்த மக்கள் சிலருடைய வீடுகள் வண்ண ஓவியம் போலக் காட்சி அளித்தன என்பதை

**ஓவத்தன்ன வியனுடை வரைப்பின்**[93]

என்று புறநானூறு சுட்டுகிறது. அழகான அரண்மனைக்கு ஓவியம் உவமையாகக் கூறப்பட்டுள்ளதிலிருந்து சங்க காலத்தில் ஓவியக் கலை பெற்ற சிறப்பை நன்கு அறியலாம்.

### VII. 4. சிற்பக் கலை

பண்டைத் தமிழிரின் சிற்பக்கலைத் திறனை உணர்த்தும் வகையில் மண் சிற்பம், மரச் சிற்பம், கற் சிற்பம், சுதைச் சிற்பம், தந்தச் சிற்பம் என ஐவகைச் சிற்பங்களும் சங்கத் தொகை நூல்களில் அமைந்துள்ளன [94] என்பர்.

கல்லில் அமைக்கப்பட்ட சிற்ப வகையில் நடுகல் சிற்பம் முதன்மை யானது. நடுகல் வழிபாடு பற்றித் தொல்காப்பியம் விரிவாகக் கூறுகிறது.

நடுகல் என்பது இறந்த வீரனின் உருவத்தைச் செதுக்கி, அவனது பெயரும் சிறப்பும் பொறித்து அக்கல்லை நட்டு வழிபடுதலாகும்.

புறநானூற்றில் கோப்பெருஞ்சோழன் நடுகல் ஆயினமையும்[95] அதியமான் நெடுமானஞ்சி இறந்த பின்பு அவனுக்கு நடுகல் நட்டு மயிற்பீலி சூட்டி வழிபட்டனர்[96] என்பதும் கூறப்பட்டுள்ளன. எனவே அக்காலத்தில் நடுகல் சிற்பம் வழக்கில் இருந்ததை அறிகிறோம்.

### VII. 5. போர்க்கலை

போர்க்கலையில் தமிழர் சிறந்தவர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. போர்ப்பறை கேட்டவுடனேயே வீரர்கள் விருப்பமுடன் எழுவர்.

போர்க்கலைகளுள் மற்போர்க்கலை குறிப்பிடத் தக்கது. மல்லன் ஒருவன் ஒரு காலை மண்டியிட்டு மற்றொரு காலைப்பகைமல்லன் மார்பில் மடித்து வைத்துப் போரிடுவது மற்போராகும்.

புறநானூற்றில் கோப்பெருநற்கிள்ளி என்ற சோழ மன்னனும் தலையாலாங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற பாண்டியனும் மற்போரில் சிறந்தவர்களாகப் புகழப்படுகின்றனர்.

இதுபோலவே சோதிடக் கலை, வானியல் கலை, சொற்கலை ஆகிய கலைகளிலும் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதற்குப் புறநானூற்றுச் சான்றுகள் உள.

**ஆய்வு முடிகள்**

தமிழ்மக்களின் வாழ்க்கை, நில அடிப்படையில் அமைந்திருந்தது. வாழ்ந்த நிலங்களுக்கேற்பவே அவர்களின் கடவுட் கொள்கையும் அமைந்தது. கடவுளை வழிபட்டு ஒழுகிய மக்கள் வினை உணர்வும், மறுபிறப்பு உண்மையும் உடையவர் களாகத் திகழ்ந்தனர்.

பழந்தமிழ் நாட்டில் மழவர், பாணர், ஆவியர் முதலிய பல்வேறு குலத்தினரும் குடியினரும் வாழ்ந்தனர்.

பழந்தமிழகத்தில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையே இருந்தது. உயர்நிலை எய்தி உயர்வு பெறுவதே குடும்ப வாழ்க்கையின் நோக்கமாக அமைந்தது.

இல்வாழ்க்கை அறம், பொருள், இன்பங்களால் சிறப்புற்றது, அன்பும் அறனும் இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக அமைந்தன. அரசர், புலவர், இழிசினர் ஆகியோர் தம் மனைவியர் மாட்டு அன்பு செலுத்தியதை அறிய முடிகிறது.

இல்வாழ்க்கையில் மனைவி கற்பு, காமம், நிறை, பொறை என்று பல்வேறு நிலைகளில் மாட்சிமை உடையவளாக விளங்கினாள். இல் வாழ்க்கையில் மக்கட்பேறு சிறப்பாகக் கருதப்பட்டது.

விருந்தோம்பல் தமிழரின் தலைசிறந்த பண்பாகத் திகழ்ந்தது.

தொழில்களின் அடிப்படையில் அக்காலத்தில் பலபிரிவுகள் இருந்தன. இவையே பின்னர் சாதிகள் ஆயின. தொடக்க காலத்தில் தொழில்களில் உயர்வு தாழ்வு இல்லை; எனினும், பின்னர் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது.

தொழில்களில் உழவுத் தொழிலே அச்சாணியாக விளங்கியது. நெசவுத் தொழில், தச்சு, கொல்லு முதலான பிற தொழில்களும் இருந்தன.

சங்க காலத்தில் கடல் வாணிகமும், உள்நாட்டு வாணிகமும் செழிப்புற்றிருந்தன.

சமூகத்தில் மகளிர் மிகவும் மதிக்கப்பட்டனர். கல்வி அறிவிலும் சிறப்புற்றிருந்தனர். வீர உணர்வோடு நாட்டுப்பற்று உடையவர்களாகவும் திகழ்ந்தனர். சமூகத்தில் பரத்தமை இருந்தது எனினும் அது கடியப்பட்டது.

தமிழரின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் புறநானூற்றில் விரிவாக இடம் பெற்றுள்ளன. ஈமச்சடங்கு, முதுமக்கள்தாழி, போர்குறித்த பழக்க வழக்கங்களையும் காண்கின்றோம்.

தமிழ் மக்களின் நம்பிக்கைகளில் விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல், கனவு, வினைப்பயன் பற்றிய நம்பிக்கைகள் குறிப்பிடத்தக்கன.

தமிழகத்தே விளங்கிய கலைகளுள் இசைக்கலை, ஆடற்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, மற்போர்க்கலை, சோதிடக்கலை, வானியற்கலை, சொற்கலை என்பன குறிப்பிடத்தக்கன.

**சான்றெண் விளக்கம்**

1. தொல் பொருள் 6
2. சிலம்பு.
3. தொல். பொருள் நச்சி. உரை ப. 4.
4. தொல் பொருள் - இளம். நூ 23, 24 - உரை
5. சிலம்பு
6. புறம் ; 127 ; 1, 2
7. புறம் ; 6 : 17, 18
8. புறம் ; 292
9. புறம் ; 43 : 1 - 3
10. புறம் ; 299 : 6, 7
11. புறம் ; 143 : 1 - 3
12. புறம் ; 367 : 10 - 11
13. புறம் ; 192
14. புறம் ; 214

15. புறம் ; 341
16. தொல் - பொருள் - கற்பு. 51
17. தொல் - பொருள் - கற்பு. 5
18. புறம் 28 ; 15 - 17
19. குறள், *அன்புடைமை* - 6
20. பழனிச்சாமி, செ. *புறநானூற்றில் தமிழ்ப் பண்பாடு* ப. 28.
21. புறம் ; 82 : 3 - 4
22. புறம் ; 245, 6 - 7
23. புறம் ; 71, 5 - 6
24. புறம் ; 164, 7 - 8
25. புறம் ; 211, 22
26. புறம் ; 146, 7
27. புறம் ; 144, 4 - 5
28. தொல் - பொருள - கற்பு இளம் நூ. 11.
29. புறம் ; 198, 3
30. புறம் ; 145, 9 - 10
31. குறள் ; *விருந்தோம்பல்* - 2
32. புறம் ; 10 ; 8
33. புறம் ; 266 ; 11
34. புறம் ; 374 ; 11 - 15
35. குறள், *வாழ்க்கைத் துணைநலம்* - 10
36. ஜோஷி, என். வி. *Socio Philosophy*, P. 64
37. புறம் 188
38. புறநானூறு, உ.வே. சா. பதிப்பு, *விசேடச் செய்திகள்* பக். 85 - 86
39. புறம் 189
40. தொல் - பொருள், இளம். நூ. 25
41. தொல் - பொருள், இளம். நூ. 26
42. சோணாசலம், கே. எஸ். *பொருளாதாரச் சிந்தனை வரலாறு*, ப. 10.
43. பாலசுப்பிரமணியன், கு.வெ. *சங்க இலக்கியத்தில் புறப்பொருள்*, ப. 217
44. புறம் ; 18 ; 19

45. *புறம், 212 ; 2.387 ; 251*
46. பொருநராற்றுப்படை *82 - 83*
47. பொருநராற்றுப்படை *469*
48. *புறம் ; 17 - 18*
49. *புறம் ; 382 ; 9 - 11*
50. *நற்றிணை, 99 ; 3*
51. *புறம் ; 87*
52. *புறம் ; 32 ; 9 - 10*
53. *புறம் ; 312 ; 3*
54. *புறம் ; 383 ; 1 - 2*
55. *புறம் ; 146 ; 1, 378 ; 11 - 21*
56. *புறம் ; 343 ; 1 - 6*
57. *புறம் ; 56 ; 18*
58. *புறம் ; 40 ; 3*
59. *புறம் ; 66 ; 1 - 2*
60. *புறம் ; 116*
61. வையாபுரிப்பிள்ளை, ச. *புறநானூறும் தமிழரும்,* ப. *16*
62. தொல் - பொருள் - கனவு, நூ. *1*
63. *புறம் ; 314*
64. *புறம் ; 122 ; 8 - 10*
65. *புறம் ; 196 ; 13*
66. *புறம் ; 293 ; 6*
67. *புறம் ; 24 ; 31 - 33*
68. *புறம் ; 295 ; 5 - 9*
69. *புறம் ; 278*
70. *புறம் ; 279 ; 3 - 11*
71. *புறம் ; 25*
72. *புறம் ; 42*
73. *புறம் ; 250*
74. *புறம் ; 299 ; 6 - 7*
75. *புறம் ; 363*
76. *புறம் ; 360*

77. புறம் ; 228 ; 10 - 13
78. புறம் ; 256 ; 4 - 7
79. புறம் ; 231 ; 1 - 5
80. புறம் ; 74 ; 1 - 2
81. பழனிச்சாமி, செ. *புறநானூற்றில் தமிழர் பண்பாடு* ப. 102
82. தொல் பொருள், புற இளம் நூ. 30
83. புறம் ; 20 ; 18 - 21
84. புறம் ; 35 ; 27 - 29
85. புறம் ; 117 ; 1 - 2
86. புறம் ; 41
87. புறம் ; 27 ; 7 - 9
88. புறம் ; 50 ; 14 - 16
89. புறம் ; 149
90. புறம் ; 109 ; 17 - 18
91. புறம் ; 221
92. செந்துறைமுத்து, *ஆயகலைகள் அறுபத்து நான்கு*, ப. 62
93. புறம் ; 251 ; 1
94. செந்துறைமுத்து, *தமிழ் வரலாறு நாகரிகம் பண்பாடு*, ப. 358
95. புறம் ; 223 ; 3 - 4
96. புறம் ; 232 ; 3

# 1

## அரசியல் நெறிகள்

புறநானூற்றுக் காலம் முடியாட்சிக் காலம்: எனினும், அக்காலம் குடியாட்சிக் காலமாகவே விளங்கியது. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகு என்னும் நிலை காணப்பட்டது. மக்களும் திருவுடை மன்னரைக் காணின் தெய்வமாகவே மதித்தனர். மன்னர்களும் குடிதழுவிக் கோலோச்சும் இயல்பினர்களாக விளங்கினர்.

அரசியல் நெறிகள் என்ற இவ் ஆய்வுத் தலைப்பு, அரசர் - அரசர் இயல்புகள், ஆட்சி முறை, நீதிமுறைமை, அறவோர் அவை, நாட்டுநலம், புலவர் தொடர்பு, கொடைப்பண்பு, மறப்பண்பு என்ற தலைப்புகளாகப் பகுத்து ஆராயப் பெற்றுள்ளது.

### I. அரசர் - அரசர் இயல்புகள்

தொல்காப்பியர் தமிழக நிலப்பரப்பை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காக வகுத்துரைப்பார். இவற்றில் “பண்டைத் தமிழகத்தில் மருத நிலங்களும், நெய்தல் நிலங்களும் முடியுடைய மூவேந்தருக்கும், இடைப்பட்ட பகுதியிலுள்ள குறிஞ்சியும், முல்லையும் குறுநில மன்னர்களுக்கும், வேளிர் களுக்கும், பழங்குடியினருக்கும் உரிமையாய் இருந்தன”[1] என்பர். “தமிழகத்தின் பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்களும் வேளிர் களும் மூவேந்தர்களில் ஒருவருடனோ மற்றொருவருடனோ நாட்டின் உடன் படிக்கைக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருந்தனர்”[2]

"தமிழக அரசியலில் நடுவனாகத் திகழ்பவன் அரசனே. அரசன் இல்லாத நாட்டைக் கற்பனை செய்து கூடப் பார்க்க இயலாது"[3] என்பார் கூற்று மிகவும் பொருத்தமுடையது. தமிழ் மக்கள், நாட்டை உடலாகவும், அரசனை அதன் உயிராகவும் எண்ணி அவனுக்குச் சிறப்புச் செய்தனர். இதனை

**நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால், யானுயிர் என்பதறிகை**
**வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே"**[4]

என்ற மோசிகீரனார் பாடல் வழி அறியலாம். அரசன் அறிவு, அன்பு, ஆற்றல் என்பன உடையவனாயிருத்தல் வேண்டும். அறிவினால் நாடு, காவலுக்கு உரியனவற்றை ஆராய்ந்து முறைதவறாது காப்பாற்றுதலும், அன்பினால் குடிமக்கள் நலன் கருதி ஆவன செய்தலும், இரவலர்க்கு ஈதலும், ஆற்றலினால் பகையரசனால் வரும் ஏதத்தைத் தடுத்தலும் போரில் வெற்றி பெறுதலும் அவன்பால் அமைகின்றன.

கிள்ளி வளவனை மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவர்பாடும் புறப்பாட்டில் (39) ஈகை, வீரம், நீதி வழங்குதல், அறிவு என்பன மன்னனுக்குரிய சிறப்புக்களுள் தலையாயவை என்று குறிப்பிடுகிறார்.

இத்துடன் நாடு, நகர், ஆறு, மலை முதலிய இயற்கை உறுப்புகளும், தார், கொடி, முரசு முதலியவையும் அமைச்சர், மறவர் முதலிய சுற்றத்தினரும் சேர்ந்தால்தான் அரசு உருவாகும். அரசன் உயிரானால், நாடு உடல்; ஏனையவை, அவ்வுடலின் உறுப்புகள்.

### I. 1. அரச உரிமை

அரசுரிமை தலைமுறை தலைமுறையாக அரசனின் மூத்தமகனுக்கு வந்து கொண்டிருந்தது என்பதை,

**"மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்**
**பால்தர வந்த பழவிறல் தாயம்"**[5]

என்ற நலங்கிள்ளி கூற்றால் அறியலாம். சேர, பாண்டிய அரசர்கள் பரம்பரையில் அரசுரிமையைப் பற்றிய சிக்கல் ஏதேனும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் சோழ நாட்டில் பல

உள்நாட்டுக் கலகங்களும் பட்டத்துக்கு உரிமை பற்றிய பல தகராறுகளும் நடந்தன என்றும், இரண்டாம் கரிகாலன் அரசு கட்டிலேறிய வரலாறு இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும் என்றும் அறிஞர் கூறுவர்[6].

**I. 2. அரசன் இயல்புகள்**

குடி தழுவிக் கோலோச்சும் மன்னவன் சிறந்த இயல்பினனாக இருத்தல் வேண்டும் என மக்கள் எதிர்பார்த்தல் இயல்பே.

உதியஞ் சேரலாதன் குறித்து முரஞ்சியூர் முடிநாகனார்

***"மண்டிணிந்த நிலனும்***
***நிலனேந்திய விசும்பும்***
***விசும்பு தைவரு வளியும்***
***வளித்தலைஇய தீயும்***
***தீ முரணிய நீரு மென்றாங்***
***கைம் பெரும் பூதத்தியற்கை போலப்***
***போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்***
***வலியும், தெறலும் அளியுமுடையோய்"***[7]

என்று போற்றுகிறார்.

உதியஞ் சேரலாதன் ஐம்பெரும் பூதத்து இயற்கை போல ஐம்பெரும் பண்புகளைப் பெற்றிருந்தான் என்பது இதன் வழி அறியப் பெறுகிறது.

அவையாவன :

1. நிலம் போலப் பகைவரைப் பொறுத்தல்
2. விண் போலச் சூழ்ச்சியின் விரிவு
3. வளி போல வலிமை
4. தீப்போலப் பகைவரைத் தெறுதல்
5. நீர் போலத் தண்ணளி செய்தல்

நெய்தலங்கானத்து இளஞ்சேட் சென்னியின் இயல்புகளை ஊன்பொதி பசுங்குடையார் எடுத்துக்காட்டுகிறார் (10) அவையாவன :

1. வழிபடுவோரின் பணிவினை ஆராய்ந்து உணர்தல்

*2.* புறங் கூறுவோரைத் தெளிவாக அறிதல்

*3.* பிறர் தீமைகளை உண்மையாகக் கண்டு அதற்கேற்பத் தண்டனை வழங்கல்

*4.* குற்றம் புரிந்தோர் அடிபணிந்து வணங்கினால் தண்டனையைக் குறைத்தல்

*5.* உணவினைத் தம்பால் வருவோர்க்கு வரையாது வழங்குதல்

*6.* எதனையும் எண்ணித் துணிதல்.

குறமகள் இளவெயினி ஏறைக் கோனிடம் தாம் கண்ட இயல்புகளாக,

***தமர்தற் றப்பினது நோன்றலும்***
***பிறர் கையறவு தான் நாணுதலும்***
***படைப்பழி தாரா மைந்தினை னாகலும்***
***வேந்துடை அவையத் தோங்குபு நடத்தலும்[8]***

எனக் குறிப்பிடுவர். அதாவது,

*1.* தம்மவர் தவறிழைப்பின் அதனைப் பொறுத்துக் கொள்ளுதல்

*2.* பிறர் வறுமை கண்டு நாணுதல்

*3.* போரில் பழிவராமல் பொருதல்

*4.* வேந்தர் அவைக் கண் பெருமிதத்துடன் நடத்தல்

கிள்ளி வளவன் தன் செங்கோலாட்சியால் "புலி புறங்காக்கும் குருளை போலக் குடிமக்களைப் புரந்தான்" *(42)* என இடைக்காடனார் குறிப்பிட்டுள்ளார்.

கரிய மீன் புகையினும், தூமம் தோன்றினும், வெள்ளி தென்திசை நோக்கிச் செல்லினும் பறம்புநாடு பாரியின் ஆட்சிச் செம்மையால் மழைவளம் பொய்க்காது செழித்திருந்தது எனக் கபிலர் சிறப்பிப்பர் *(117)*.

நன்மாறனைச் சீத்தலைச் சாத்தனார்.

***ஞாயிறு அனையை நின்பகைவர்க்கு***
***திங்கள் அனையை எம்ம னோர்க்கு[9]***

என்று மொழிவர்.

ஆய் அண்டிரனை முடமோசியார்,

***ஆடு மகள் குறுகின் அல்லது***
***பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே***[10]

என்று பாராட்டுவர்.

வேந்தர்கள் போரில் உரைத்த வஞ்சின மொழிகளும் அவர் தம் இயல்பினை உணர்த்துவதைப் புறப்பாடல்கள் வழி அறிகிறோம்.

**II. ஆட்சிமுறை**

சங்ககால மன்னர்கள் அரசியலைச் செம்மையாகச் செலுத்த அமைச்சர்கள், ஆலோசகர்கள் என்ற இன்னோருடன் ஒற்றர்கள், புலவர்கள், பொருநர்கள், கூத்தர், பாணர், விறலியர், முதலியோர் வழியாகவும் கண்டும் கேட்டும் உலக நடப்பை அறிந்தனர்.

ஆட்சி நடத்துவது அவ்வளவு எளிதானது அன்று என்பதைச் செங்கோல் வேந்தர்கள் அனைவரும் அறிந்திருந்தனர். எனினும், அதனைத் துன்பமாகக் கருதாது பல்வேறு இடர்ப்பாடுகளைத் தாங்கி முனனேறினர் என்பதனைப் புறநானூற்று வழி அறியலாம். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனை மருத்துவன் தாமோதரனார் பாராட்டிய புறப்பாட்டில்,

***கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்***
***ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்***
***உரனுடை நோன்பகட் டன்ன வெங்கோன்***[11]

என்று மொழிவர்.

நெய்தல் நிலத்தில் விளையும் உப்பினை ஏற்றிக் கொண்டு மலைநாட்டை நோக்கிச் செல்லுகின்ற வண்டிகள் குண்டும் குழியும் உள்ள சாலையில் சிக்கிக் கொள்ள, வண்டியை இழுத்துச செல்லுகின்ற பகடுகள் தம் முழுவலிமையையும் பயன்படுத்தி முன்னேறுகின்றன. அதைப்போலத் திருமாவளவனும் தம் நாட்டிற்கு உண்டாகும் குறைபலவும் போக்கி அதனைக் காக்கும் வகையில் பெரும் முயற்சியும், பேர் உழைப்பும் உடையவனாக இருந்த இயல்பும் இங்குப் புலவரால் எடுத்துக் காட்டப்படுகின்றது.

“அரசன் தான் செய்ய வேண்டியவற்றை ஒரு குழுவுடன் கலந்து எண்ணியே செய்தான்”. அக்குழுவின் அறிவுரையைக்

கேட்ட பின்பே நீதி வழங்கினான். சங்க இலக்கியங்கள் இக்குழுவினைச் "சுற்றம்" எனக் கூறுகின்றன என்றும், இடைவிடாது எக்காலதது்ம் அரசனைச் சுற்றியோ அவன் அருகிலோ இருந்து, நீதியெனக் கண்டவற்றை எடுத்துக் கூறும் உறுதித் துணையாளர் "சுற்றம்" எனப்பட்டனர் என்றும் கூறுவார்[12] சு. வித்தியானந்தம்.

ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பனவே இச்சுற்றம் மக்களாட்சியில் அரசினர் அறிஞர்களின் ஆலோசனையைப் பெறுவது போல, அரசன் இக்குழுவினரின் ஆலோசனையைப் பெற்றுத் தம் ஆட்சிச் சுமையை எளிதாக்கிக் கொண்டான்.

வேந்தன் அறிவால் மெலியனாகி அவன் விரும்புவதனையே தாமும் கூறும் ஆராவாரத்தையுடைய சுற்றத்தோடு கூடிக் குடிமக்களை வருத்திப் பொருள் கொள்ள விரும்பின் "யானை புக்க விளைநிலம் சிதைவது போல" அவன் நாடு அழியும் என்ற உண்மையைப் பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுறுத்துகிறார்[13].

இதனால் அமைச்சர் மன்னனுக்கு உறுதி பயக்கும் நன்னெறிகளை அறிவுறுத்துவது தம் கடமை எனக் கருதினார் என்பதை உணரலாம்.

அமைச்சர்கள் இயற்கை மாறுபாட்டாலும் தம்முள் மாறுபாடு இல்லாத சூழ்ச்சியை உடையவராக இருந்தனர். அரசன் நெறி தவறும் காலத்து அவனுக்கு அவர்கள் இடித்துக் கூறி நெறிப்படுத்துவதைக் கடமையாகக் கொண்டனர்.

### III. நீதிமுறைமை

மன்னன் வலிமை வாய்ந்த நாற்படைகளை உடையவனாக இருந்தாலும், தன்னால் விரும்பப் பெற்றவர் கொடுந் தொழிலைச் செய்தால் தவறாமல் அவரைத் தண்டிக்க வேண்டும். அயலவர் எனினும் அவர்தம் உயரிய குணங்களைக் கெடுக்காமல் ஆட்சிசெய்து நீடு வாழ்க என்று மதுரை மருதனிளநாகனார். பாண்டியன் நெடுமாறனுக்கு எடுத்துரைக்கின்றார்.

***நான்குடன் மாண்ட தாயினு மாண்ட***
***அறநெறி முதற்றே யரசின் கொற்றம்***
***அதனால் நமரெனக் கோல் கோடாது***
***பிறரெனக் குணங்கொல்லாது***
***நீ நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்***[14]

என்பர். வேண்டியவர் தவறு செய்தால் பொறுத்துக் கொள்ளுதல் அறநெறியன்று, வேண்டாதவர் நற்குணம் உடையவராய் நல்லது செய்யும் காலை அவர்களைத் துனபுறுத்துவது அரசனுக்கு அறமாகாது. எனவே, மன்னன் நடுநிலைமையோடு நீதி வழங்க வேண்டும் என்று புலவர் உரைக்கின்றார்.

நிலம் பிறழினும் மன்னன் ஆணையாகியசொல் பிறழாது இருக்க வேண்டும் என்று இருப்பிடார்த்தலையார் பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும் பெயர் வழுதிக்கு அறிவுறுத்துகிறார்.[15]

மன்னன் ஆணை, அரச நெறியை ஒட்டியதாக இருத்தல் வேண்டும் என்பதனை இது உணர்த்துகின்றது.

செங்கோல் செலுத்துகின்ற அரசன் குடிமக்கள் நீதி வேண்டும் காலத்து, காட்சிக்கு எளியவனாக இருந்து நீதி வழங்குவது, மழை வேண்டும் காலத்து மேகம் மழை பொழிவதற்கு ஒப்பாகும் என்று புறப்பாட்டு ஒன்று கூறுகின்றது[16].

“வேந்தன் அமைதிக் காலத்தில் ஒவ்வொரு நாளும் பகலில் முதற்பத்து நாழியை கொடைக்கும், இடைப்பத்து நாழியை வழக்குத் தீர்த்து முறை செய்வதற்கும், கடைப்பத்து நாழியை தன் இல்லற இன்பத்திற்கும் செலவிட்டான்”[17] என்று ஞா. தேவநேயன் கூறுகின்றார்.

### IV. அறவோர் அவை

அரசர்கள் மக்களுக்கு ஏற்படும் வழக்குகள் அனைத்தையும் கேட்டு நீதி வழங்குதல் இயலாத ஒன்று. எனவே அறவோர் அவைகளும் தொழிற்பட்டு வந்தன. இவ்வகையில் அறநூல் வல்லார் குழு விளங்கிற்று. இக்குழுவினர் நடுநிலை பெற்றுச் சிறந்தனர். அவர் கூடிய இவ்அவை “அறமறக் கண்ட நெறிமாண் அவையம்”[18] என்று குறிக்கப்படுகின்றது.

***மறங் கெழு சோழர் உறந்தை அவையத்து***
***அறம் நின்று நிலையிற்றாகலின்***[19]

என்பதனாலும்

***அறம் துஞ்சு உறந்தை***[20] என்பதனாலும் உறையூரில் அறங்கூற அவையங்கள் இருந்தன என்பது புலனாகின்றது.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்.

***ஆரம ரலறத் தாக்கித் தேரொ***
***டவர்ப்புறங் காணே னாயிற் சிறந்த***
***பேரம ருண்க ணிவளினும் பிரிக***
***அறனிலை திரியா வன்பின வையத்துத்***
***திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து***
***மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்[21]***

என்று கூறும் வஞ்சின மொழியால் அரசன் அவையில் அறவோர் இருந்தனர் என்பதும், அவர்கள் எடுத்துக் கூறும் அறநெறிப்படி ஒழுகி அரசன் தன் செங்கோன்மையை நிலைநிறுத்தினான் என்பதும் பெறப்படுகின்றன.

இக்குழுவினர் அரசனால் தேர்ந்தெடுக்கப் படுவோர் என்பதும், அவர் நீதியின்றும் வழுவின், அவ்வழுவினால் வரும் பழி அரசனையே சாரும் என்பதும், அத்தகைய அறங் கூறவையத்தில் கூடியிருக்கும் அறவோர்கள் நீதி வழங்குவது மட்டுமன்றி, மக்கள் உள்ளத்தில் உள்ள அச்சத்தையும் வருத்தத்தையும், போக்கி அறங்காத்தனர்[22] என்று மதுரைக் காஞ்சி கூறுவது மேற்கூறிய புறப்பாட்டின் கருத்தோடு ஒப்பு நோக்கத் தக்கதாகும்.

**V. நாட்டுநலம்**

நீர்வளம் நிலவளம் சிறந்து சான்றோரும் விரும்பி உறையும் வண்ணம் நாடு உயர்ந்து நின்றது. ஒரு பிடி படுத்துறங்கும், சிறிய இடத்தில் விளைந்த விளைபொருட்கள் ஏழு ஆண் யானைகளுக்கு ஆண்டு முழுமைக்கும் வேண்டும் உணவாயின.

***ஒருபிடி படியும் சீறிடம்***
***எழுகளிறு புரக்கும் நாடு கிழவோயே[23]***

என்ற தொடர்கள் இதனை மெய்ப்பிக்கும்.

இத்தகைய வளங்கொழிக்கும் நாடு யாருடைய நாடு? சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் நாடேயாகும். இந்நாடு காவிரி பாய்ந்து வளங்கொழிக்கும் நாடாகையால் இவ்வுலகத்தை ஆளும், மூவேந்தர்களுள் அவனுடைய அரசே சிறப்புடையது என்று வெள்ளைக்குடி நாகனார் போற்றுகிறார்.[24]

ஒரு நாடு நன்னாடாய் விளங்க வேண்டும் என்றால் நாட்டில் வாழும் குடிமக்கள் உணவுக் குறைவின்றி வாழ்தல் வேண்டும். உணவே மக்களுக்கு உயிர். உணவுப் பொருளை ஆக்கும் வன்மையது நீர். குழிந்த நிலத்தில் நீரை ஒன்று கூட்டினாலன்றி நெல் முதலியவற்றை வித்தி உணவுப் பொருளை ஆக்கிக் கொள்ள இயலாது. ஆதலின் நீர்வளம் பெருகச் செய்தோரே கடமை உணர்ந்த அரசராவர். இதனைச் செவ்வனே உணர்ந்த புலவர்[25]

எனக் கோவூர்கிழார் குறிக்கின்றார். வெள்ளைக்குடி நாகனார் கிள்ளிவளவன் நாட்டைச் சிறப்பிக்குங்கால் "அந்தண் காவிரி வந்து கவர் பூட்ட" என்று நீர்வளம் பெருக்கிய சோழன் நலங்கிள்ளியை,

***புனிறு தீர் குழவிக் கிலிற்று முலை போலச்***
***சுரந்த காவிரி மரம்கொன் மலிநுர்***
***மன்பதை புரக்கும் நல்நாட்டுப் பொருநன்[25]***

எனக் கோவூர்கிழார் குறிக்கின்றார். வெள்ளைக்குடி நாகனார் கிள்ளிவளவன் நாட்டைச் சிறப்பிக்குங்கால் ***அந்தண் காவிரி வந்து கலர் பூட்ட*** என்று மொழிகிறார். இங்ஙனம் நீர் வளம் பெருக்கியோர் நம் பண்டைத் தமிழ் மன்னர்களே யாவர்.

மன்னர்களின் இத்தகு செயல்களால் மக்கள் கவலையின்றி வாழ்ந்தனர். விண்ணுலக மக்களைப் போல் மண்ணுலக மக்களும் மகிழ்ந்தனர். ***நாடு புத்தேளுலகத் தற்றே*** என்பதால் இதனை அறிகிறோம். இங்ஙனம் வளம் பெருக்கி விருந்தருத்தித் துன்பமகற்றி அரசர், பிறர் வாழ வாழ்ந்தனர்.

## VI. புலவர் தொடர்பு

பண்டைத் தமிழ் மன்னர்கள் பெருமிதமுடைய புலவர்களோடு பழகுவதைப் பெரிய இன்பமாகக் கொண்டனர். அரசர்கள் புலவர்பாடும் புகழுடையோர் சுவர்க்க பதவியை அடைவர் என்பது அவர்கள் நம்பிக்கை நெடுஞ்செழியனின் வஞ்சினக் கூற்றில் என் பகைவர்களை நான் புறங்காணாவிட்டால்

***ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி***
***மாங்குடி மருதன் தலைவனாக***
***உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற்***
***புலவர் பாடாது வரைக என் நிலவரை[26]***

என்று சூளுரைக்கின்றான். புலவர் பாடாதொழிதலை அவன் எவ்வளவு இழிவாகக் கருதுகிறான் என்பதை இத்தொடர்கள் தெரிவிக்கின்றன.

கழாத் தலையை இகழ்ந்த ஓர் அரசனது ஊராகிய அரையம் கெட்டது. பழியையுடைய நன்னன் என்னும் அரசனையும் அவன் வழி வந்தோரையும் புலவர் பாடாமல் வெறுத்து ஒதுக்கினர்.

புலவர்களின் வாய்மொழிக்கு அஞ்சியொழுகும் ஒழுக்கம் மன்னர்களிடத்தே இருந்தது. புலவர்களின் கடுமையான அறிவுரையையும் மன்னர்கள் ஏற்றுக் கொண்டனர். கோவூர் கிழார் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவரையும் அமைதிப்படுத்தினார். கிள்ளிவளவன் மலையமான் மக்களை யானைக் காலில் இடறப் புக்க போதும், இளந்தத்தன் என்னும் புலவனை ஒரு சோழன் பகை அரசனுடைய ஒற்றன் என்று கருதிக் கொலைத் தண்டனை விதித்த போதும் கோவூர் கிழாரின் அறிவுரையால் அவர்கள் உயிர் மீண்டனர். அரசன் ஆணையை அடக்கும் ஆற்றல் புலவர் வாய்மொழிக்கும் இருந்தது.

புலவர்கள் அரசர்களிடையே வேற்றுமை கண்டவிடத்து அமைதிப் படுத்தினர். ஒற்றுமை கண்டவிடத்துப் பாராட்டி மகிழ்ந்தனர்.

புலவர்கள் எந்நேரமும் அரசன் அவைக் களத்தில் புகும் உரிமை பெற்றிருந்தனர். அவைக்களம் தங்களுக்குரிய இடம் போலச் செம்மாந்து நடந்தனர்[27].

அரசர்கள் புலவர்களை நண்பர்களாகக் கருதி அவர்களோடு நெருங்கிப் பழகினர். இவ்வாறு மன்னர்கள் புலவர்களைப் பெரிதும் போற்றி ஆதரித்து நாட்டின் கல்வியையும், கலையையும் வளர்த்தனர்.

## VII. கொடைப் பண்பு

தமிழக அரச மரபினர் வீரத்தில் சிறந்து விளங்கியது போன்று கொடைப் பண்புடையவர்களாகவும் திகழ்ந்தனர். அரசர்களுக்கு இது பிறவிக் குணமாகவே அமைந்திருந்தது. கொடுத்தல் எய்திய இசைமையால் அரசர்கள் பாராட்டப் பெற்றனர்.

அரசர்கள் தம்மை நாடி வந்த புலவர்களையும் இரவலர்களையும் அவைக்களத்தில் வரவேற்று வேண்டிய சிறப்புகளைச் செய்தனர். தம்முடன் தங்கி இருக்குங்காலை இரவலர்களுக்கு உணவும் உடையும் கொடுத்துச் சிறப்பித்தனர். பிரியும் பொழுது அவர்களுக்குப் பரிசில்களை நல்கினர்.

***தன் பெருமையின் தகவு நோக்கிக்***
***குன்று றழ்ந்த களிறென்கோ***
***கொய் உளைய மா என்கோ***
***மன்று நிறையும் நிரை என்கோ***
***மனைக் களமரொடு களம் என்கோ***
***ஆங்கு அவை, கனவு என மருள, வல்லே, நனவின்***
***நல்கியோனே, நசைசால் தோன்றல்***[28]

என்பர் குண்டுகட்பாலியாதனார். இப்பாடல் சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாராட்டிப் பாடியதாகும். புலவர் தம் கூற்றால் களிறு, மா, நிரை, களமரொடு, களம் ஆகியவற்றைத் தன் பெருமையின் தகுதி நோக்கிக் கனவோ நனவோ என மருட்சி எய்த மன்னர் ஈந்தனர் என்பதை அறியலாம்.

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியோடு போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்தான். அவனைப் போர்க்களத்தில் காணும் நோக்கத்துடன் கழாத்தலையர் என்ற புலவர் வந்தார்.

வந்தவர் பரிசில் பெறும் நோக்கமுடையவரல்லர் எனினும் கொடுத்துப் புகழ் பெற்ற சேரன் தான் போர்க்களத்துக் கிடந்த காலத்தும் தன் கழுத்தில் இருந்த முத்தாரத்தைப் புலவர்க்கு ஈந்தான். இந்நிகழ்ச்சி உயிர் துறக்கும் அளவும் அரசர் இப்பண்பினின்றும் மாறியோர் அல்லர் என்பதைப் புலப்படுத்துகின்றது.

புலவர்களேயன்றிப் பாணர், விறலியர் முதலிய கலைஞர்களும் அரசனுடைய ஆதரவை முற்றிலும் பெற்றிருந்தனர். பாணன் தன் இசையாலும், விறலி தன் இசையாலும் கூத்தாலும் மன்னனை மகிழ்விப்பர். இவர்களுக்குப் பல்வகைப் பொருளும், அருங்கலங்களும் யானை முதலியனவும் பரிசிலாக அரசர்கள் தருவது வழக்கம். சிறப்பாகப் பாணர்களுக்குப் பொன்னாலாகிய

தாமரைப் பூவையும், விறலியர்களுக்குப் பொன்னிழையையும் தருவர்.

### VIII. மன்னர்கள் மறப்பண்பு

தமிழ் மன்னர்கள் கொடைப் பண்பினராக விளங்கியதைப் போலவே மறப்பண்பிலும் சிறந்து விளங்கினர். தமிழ்மக்களில் ஆடவர்களேயன்றி, மகளிரும் மறப்பண்புடையவர்களாகவே விளங்கினர். "போரும் பகை நாடு கைக் கொள்ளுதலும் பகையரசர் கோட்டை கொத்தளங்களை அழித்தலும் அங்குள்ள பொன்னும் பொருளும் கவர்தலும் அவர்களின் மகிழ்ச்சி தரும் பொழுது போக்கு"[29] என்பர். "அரசர்கள் சிறந்த வீரர்களாய் இருநதனர். வீரக்குடிகளையும் பாதுகாத்து வந்தனர். இரு திறந்தாரும் போர்த்திறமையில் நல்ல பயிற்சி பெற்றிருந்தனர்"[30] என்றும் உரைப்பர்.

தமிழ் இலக்கியங்கள், *வெல்போர் வேந்தர்*[31] *ஆய் அண்டிரன் அடுபோர் அண்ணல்*[32] *அடுபோர் ஆனா, ஆதன் ஓரி*[33] *அடுபோர்ப் பேகன்*[34] *மறப்போர் மலையன்*[35] *நல்போர் குமண*[36] *வெல்போர்க் கழல்புனை திருந்தடிக் கடுமான் நள்ளி*[37] என வள்ளல்களையும் மன்னர்களையும் சிறப்பிக்கின்றன. இவை நாடாண்ட மன்னர்களிடையே நிலவிய போர் உணர்விற்குச் சான்றுகளாகும்.

இலக்கியங்கள் குறிக்கும் போர்கள் பெரும்பாலும் நல்லமர் என்றே குறிக்கப் படுகின்றன. இப்போர்கள் *அறத்தின் மண்டிய மறப்போர்*[38] என்றும், *மறம் கந்தாக நல்லமர்*[39] என்றும் சுட்டப்படுகின்றன. நற்போர் என்பதற்கு அறத்தாற் பெறுகின்ற போர் என்றே நச்சினாக்கினியர் உரைக்கின்றார்.

தமிழ் மன்னர்கள் போர் புரிந்ததற்குப் பல காரணங்கள் உண்டு எனினும் மண் ஆசையே முதன்மைக் காரணமாகும். தன் நாட்டு மக்கள் செழித்து வாழ்தற்கு இடமில்லாத நிலையில் இடம் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப மன்னர்கள் போர்புரிந்தனர். கொடுங்கோன்மையை ஒழிப்பதற்காகவும், பிற மன்னர் மகள் வேண்டியும் போர்கள் நிகழ்ந்துள்ளன.

மற்றவர்களைப் போல மன்னர்களும் வீரம் செறிந்து விளங்கினர்.

*"மறப்புலி யுடலின் மான்கண மூளவோ*
*மருளின விசும்பின் மாதிரத் தீண்டிய*
*இருளு முண்டோ ஞாயிறு சினவின்*
*-----------------------------------*
*-----------------------------------*
*கற்பக நடக்கும்*
*பெருமிதப் பகட்டுக்குத் துறையுமுண்டோ"* 40

இவ்வாறு ஔவையார் கூறும் அருந்தமிழ்க் கருத்து, தமிழ் மன்னர்களின் வீரத்திற்குச் சிறந்த சான்றாகும்.

அரசர்கள் தம் பகையரசர்களை வென்று களங்கொள்ளுதலும், அவர்களுடைய முரசு முதலியவற்றை அகப்படுத்தலும், கடிமரம் தடிதலும், ஊரை எரியூட்டுதலும், நீர் நிலைகளை உடைத்தலும், வயல்களில் எரி பரப்புதலும், பகைவர் நாட்டைப் பாழாக்குதலும் அஞ்சத்தக்க செயல்களாகும்.

பகைவர்கள் பாற் பெற்ற கலங்களைப் பரிசிலர்க்கு ஈந்தும், பகை அரசர்களின் முடிப்பொன்னால் கழல் செய்து தாம் அணிந்தும் பகையரசர்களின் யானைகளின் ஓடைப் பொன் கொண்டு பொற்றாமரைப் பூச் செய்து பாணர்க்குக் கொடுத்தும் தம் வெற்றியைக் கொண்டாடினர்.

களவேள்வி, இராச சூய வேள்வி முதலிய வேள்விகளைச் செய்த அரசர் சிலர் உண்டு. போர்க்களத்தில் மடிந்த வீரர்களுக்கு நடுகல் நட்டுப் போற்றுவது தமிழ் மரபு. கோப்பெருஞ்சோழன் போன்ற மன்னர்களும் கூடத் தம் வீரத்தால் நடுகல்லாயினர்.

தமிழக அரசியலில் நடுவனாகத் திகழ்பவன் அரசனே. ஈகை, வீரம், நீதி வழங்குதல், அறிவு என்பன மன்னனின் சிறப்புப் பண்புகள்.

அரச உரிமை மூத்தவனுக்கே முடி என்பதாகும். சங்ககால மன்னர்கள் ஆட்சிப் பொறுப்புணர்ந்து செங்கோல் செலுத்தினர். ஐம்பெருங்குழு, எண்பேராயம் மற்றும் அறவோர் ஆலோசனைகளைப் பெற்று ஆட்சி செலுத்தினர்.

நடுவுநிலைமை தவறாத நீதி முறையினைக் கொண்டனர்.

நில நீர்வளங்களைப் பெருக்கி நாட்டு நலத்தில் அக்கறை கொண்டனர்.

*பண்டைத் தமிழ் மன்னர்கள் புலவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருநதனர். புலவர் பாடும் புகழையே பெரும் பேறாகக் கருதினர்.*

*புலவர்கள் அரசர்களின் ஒற்றுமையைப் பாராட்டியும், வேற்றுமையைக் களைந்தும் தொண்டாற்றினர்.*

*தமிழ் மன்னர்கள் இயல்பாகவே கொடைப் பண்பு பெற்றிருந்தனர். போர்க்களத்து வீழ்ந்து கிடந்த காலத்தும் கொடையளித்த நிகழ்ச்சிகள் உண்டு.*

*தமிழ் மன்னர்கள் கொடையினைப் போலவே வீரப்பண்பிலும் சிறந்து விளங்கினர். போரிலும் அறம் தழைத்தது.*

**சான்றெண் விளக்கம்**

*1.* செ. பழனிச்சாமி, *புறநானூற்றில் தமிழர் பண்பாடு* ப.*113.*

*2.* Sivaraja Pillai. K.N. *Chronology of the Early Tamils* P - 135.

*3.* ஜகந்நாதன் கி.வா. *புறநானூறும் தமிழரும்* ப. *32.*

*4.* புறம், *186*

*5.* புறம், *75, 1-2*

*6.* அறவாணன். க.ப. *அற்றை நாள் காதலும் வீரமும்* ப. *226*

*7.* புறம், *2 : 1 - 8*

*8.* புறம், *157 : 1 - 4*

*9.* புறம், *59 : 6 - 7*

*10.* புறம், *128 : 6 - 7*

*11.* புறம், *60 : 7 - 9*

*12.* வித்தியானந்தம். சு. *தமிழர்சால்பு* ப. *58*

*13.* புறம், *184*

*14.* புறம், *55 : 9 - 17*

*15.* புறம், *3*

16. புறம், 35
17. தேவநேயன், ஞா. *பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்*, ப. 134
18. புறம், 224
19. புறம், 39
20. புறம், 58
21. புறம், 71 : 4 - 9
22. மதுரைக் காஞ்சி ; 489 - 490
23. புறம், 40 : 10 - 11
24. புறம், 35
25. புறம், 68 : 8 - 10
26. புறம், 72 : 13 - 16
27. புறம், 54
28. புறம், 387 :22 - 27
29. "The Tamils were great warriors wars instructions, Battles and sleges were their part time and pleasure. - Purnalingam Pillai. M.S. "Tamil Indian".
30. பாலசுந்தரம்பிள்ளை, தி.சு. *சங்க நூற்கட்டுரைகள் அல்லது பழந்தமிழ் நாகரிகம்* 1966. பக். 18-19.
31. புறம், 41 : 3
32. புறம், 125 : 8
33. புறம், 13 : 4
34. புறம், 146 : 2
35. புறம், 158 : 7
36. புறம், 168 : 4
37. புறம், 167 : 9 - 10
39. புறம், 93 : 8
40. புறம், 90 : 3 - 9

# 2

## சமுதாயச் சிந்தனை

*குடும்பம் என்பது சமுதாயத்தின் அடிப்படைக் கூறாகும். இவ்வகையில் "ஏதோ ஒருவகைக் குடும்ப அமைப்பின்றிப் பண்பாடோ அல்லது சமுதாயமோ என்றும் இருந்ததில்லை"[1] என்பார் கூற்றுப் பொருத்தமுடையதாகும்.*

*புறநானூற்றால் அறியப்பெறும் சமுதாயச் சிந்தனைகள், பிறகட்டுரைகளின் தொடர்பு கருதி இடைமடுத்துக் கூறப்பெற்றுள்ளன.*

*இக்கட்டுரையில் குறிப்பாகச் சான்றாண்மை, மனைமாட்சி, விருந்தோம்பல், கல்விச் சிறப்பு, பல்லோர் கடமைகள் குறித்த சிந்தனைகள் விளக்கப் பெற்றுள்ளன.*

### I. 1. சான்றாண்மை

*கற்று, கற்றதன் வழி நின்று, ஒழுக்கத்தில் தலைசிறந்தோராக வாழ்க்கை நடத்துவோரே சான்றோர் எனப்படுவர். பதிற்றுப்பத்தில் "சான்றோர் மெய்ம்மறை" என்ற பாடலில் சான்றோர் என்ற சொல் "வீரர்" என்ற பொருளில் பயன்படுத்துப் பெற்றுள்ளது.*

*இனம் இனத்தோடு சேரும் என்பதற்கு ஏற்பச் சான்றோர் சான்றோரையே சேர்வர், சாலார் சாலாரையே சேர்வர் என்று கூறுகிறது புறப்பாடல் (218)*

***புலமிக்கவரைப் புலமை தெரிதல்***
***புல மிக்கவர்க்கே புலனாம்[2]***

*என்று பழமொழி நானூறு கூறுவதும்,*

***கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்றிலா***
***மூர்க்கரை மூர்க்கரே முகப்பர்*** [3]

*என்று மூதுரை உரைப்பதும்,*

***கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்*** [4]

*என நன்னெறி நவில்வதும் இக்கருத்தினதே.*

*மேன்மக்கள் எங்கிருப்பினும் ஒத்த கருத்தால் ஒருவரையொருவர் ஈர்க்கப்படுதல் உண்டு.*

### I.1.1. நல்நாடு

***நாடா கொன்றோ, காடா கொன்றோ***
***அவலா கொன்றோ, மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவர் ஆடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நிலனே (187)***

*என்பது புறநானூற்றில் ஔவையார் பாடல்.*

*நாடும் காடும் மேடும் பள்ளமும் நிலத்தின்கண் காணப்படும் இயல்பாகும். நிலங்கள் எப்படி இருப்பினும் அங்கு வாழும் மக்கள் நல்லவராக இருப்பின் அது நல்ல நாடாகும் என்பது இப்பாடலின் கருத்தாகும். இதனால் நாட்டில் வாழும் மக்களையொட்டியே அந்நாட்டில் நன்மை தீமைகள் விளைகின்றன என்றும், நாடு செழிக்க மக்கள் நல்லவராதல் வேண்டும் என்றும் ஔவையார் அறிவுறுத்துகின்றார். சான்றோர் சமுதாயமே நல்ல நாட்டை உருவாக்க முடியும்.*

### I.1.2. உலக நிலைபேறு

*நில்லா உலகம் நிலை பெற்றிருப்பது எவராலே? என்று சிந்திக்கிறார் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி உண்டால் அம்ம இவ்வுலகம் என்ற புறப்பாடலில் இதற்கு விடை தருகிறார். பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்னும் குறளில் வரும் பண்புடையார்க்கு விளக்கம் தருவது போல் அமைகிறது அவரது பாட்டு.*

***தமக்கென முயலா நோன்றாள்***
***பிறர்க்கென முயலுநர் உண்மையானே*** [5]

*என்று பண்புடையானைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இப்பண்புடையார் இந்திரர் அமிழ்தமே கிடைப்பினும் தனித்து*

உண்ணார்; சினங்கொள்ளார்; சோம்பலிலர்; அஞ்ச வேண்டுவதற்கு அஞ்சிப் புகழெனின் உயிரும் கொடுப்பர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளார். இத்தகையோரே தமக்கென வாழாது, பிறர்கென வாழும் சான்றோராவர்.

### I.1.3. அல்லவை செய்தல் ஓம்புமின்

புறநானூற்றுப் புலவராகிய நரிவெரூஉத் தலையார் நல்லாற்றுப்படும் நெறியினை நன்கு விளக்கியுள்ளார்.

***நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின், அதுதான்***
***எல்லாரும் உவப்ப தன்றியும்***
***நல்லாற்றுப் படூஉம் நெறியுமாரதுவே***[6]

என்று அறிவுறுத்துகிறார்.

ஒருவன் ஒருசெயலைச் செய்ய விரும்பினால், கூற்றுவன் வருவதற்கு முன்பே அச்செயலைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய இயலாமற் போயினும் நல்லவை அல்லாதனவற்றைச் செய்வதை ஒழியுங்கள். அஃதொன்றே நல்ல நெறியின்கண் செலுத்தும் வழியாகும் என்பது மேற்குறித்த புறப்பாடலின் கருத்தாகும். சான்றோர் இவ்வாறே செயற்படுவர்.

“நல்லது செய்தலினும் தீமை செய்யாமை, எல்லார்க்கும் இயலும் என்பதால் ‘எல்லாரும் உவப்ப’ என்றார். மேலும் தீமை செய்யாமல் இருப்பது நல்லது செய்து நாம் பெறுவதற்கு வழிவகுக்கும் என்பதால் நல்லாற்றுப் படூஉம் நெறியும் அதுவே என்றார்”[7] என்று விளக்கம் தருவது சிறப்புடையது.

### II.1. மனைமாட்சி

கணவனும் மனைவியும் கூடி அறம், பொருள், இன்பம் வழுவாமல் வாழும் வாழ்க்கை இல்லறமாகும். தலைவன் தன் குலப்பெருமை விளங்க மனைவாழ்க்கை நடத்துவான் என்பதை *நன்னெறிப் படரும் தொன்னலம்*[8] என்பர் தொல்காப்பியர். நன்னெறியாவது அறம், பொருள், இன்பம் தவறாத நெறி என்பர் இளம்பூரணர். அறம், பொருள், இன்பம், மூன்றனுள் அறமே தலையாது, அறத்திற்கு அன்பு சார்பாகும்.

புறநானூற்றுப் புலவர்கள் புரவலர்களைச் சந்தித்தவிடத்துத் தன் மனைவி மாட்டுக் கொண்ட அன்பினைப் புலப்படுத்தியுள்ளனர்.

சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறையைக் காண வருகிறார் பெருங்குன்றூர் கிழார். தம் மனைவி வறுமையால் துன்புறுவதைப் பொறுக்க இயலாது வந்ததாகக் கூறுகிறார்.

*மனைத்தொலைந் திருந்தவென் வாணுதற் படர்ந்தே*[9] என்றார். இவ்வாறே வறுமையால் வாழும் தன் மனைவியின் துன்பத்தைக் கண்டு அதைத் தீர்த்தற் பொருட்டுப் பெருந்தலைச் சாத்தனார் குமணனிடம் வந்ததாகப் பாடுகிறார்.

***மனையோள் எவ்வம் நோக்கி நினைஇ***
***நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண***[10]

அன்புப் பெருக்கினால் மனைவி பல்வகையிலும் மாண்புடையவளாக விளங்குகிறாள்.

தொல்காப்பியர்,

***கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்து புறந்தருதலும் சுற்ற மோம்பலும்***
***பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்***[11]

என மனைவியின் மாண்புகளைத் தொகுத்துரைக்கிறார்.

## II.1.2. கற்பு

தலைவனுக்குத் தலைவியை அவளுடைய பெற்றோர் உரிய சடங்குகளுடன் திருமணம் செய்து கொடுப்பதைக் கற்பு என்பர் தொல்காப்பியர். கணவன் முதலியோர் கற்பித்த நிலையில் திரியாத நல்லொழுக்கம் கற்பு என நச்சினார்க்கினியர் விளக்கம் தருவர்.

***தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை***[12]

எனக் கற்பின் ஆற்றலை விளக்குவார் வள்ளுவர்.

இவ்விளக்கங்களால் ஏற்படும் தெளிவு யாது? பண்புடைய தலைவனும் தலையியும் திருமணம் புரிந்து இல்லறம் நிகழ்த்துவதும், இல்லறத்தை மேற்கொண்ட மனைவி கணவனைத்

தெய்வமாகக் கருதி அவன் சொற்படி ஒழுகுவதும கற்பெனத் தெளிவு பெறுகிறது.

இரும்பிடர்த் தலையார் என்ற புலவர் பாண்டியன் கருங்கையொள்வாள் பெரும் பெயர் வழுதியைப் புகழ்ந்து வாழ்த்துங்காலை, 'செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ' எனப் பாராட்டுகிறார். *செயிர்தீர் கற்பு*[13] குற்றமற்ற கற்பு எனப் பொருள்படும். மனைவியின் தூய்மையான கற்பு அவளின் தலைசிறந்த பண்பாடாகப் போற்றப் பெற்றுள்ளது. இத்தகைய கற்பு கணவனின் புகழை மிகுவிக்கும் என்பதும் புலப்படுகிறது.

### II.1.3. பொறுமை

> ***ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்***
> ***பொன்றும் துணையும் புகழ்***[14]

என்பது வள்ளுவம்.

புறநானூற்றில் பேகனின் மனைவி கண்ணகியின் பொறையுடைமை இங்கு நினைவு கூரத்தக்கது.

பேகன் கண்ணகியைப் பிரிந்து பரத்தையை நாடினான். அப்போது அவள் கணவனின் வரவைப் பொறுத்திருந்த திறம் அவளின் பொறையுடைமையையும், மனம் உடையாமல் நெஞ்சை நிலை நிறுத்திய தன்மையையும் அவளின் நிறைவையும் குறிப்பிடும்.

கண்ணகியின் இத்தகைய மாண்புகளை எடுத்துக் கூறி உடனே சென்று அவள் துன்பத்தைக் களைய வேண்டுகிறார் பரணர்,

> ***இனமணி நெடுந்தே ரேறி***
> ***இன்னா துறைவி அரும்படர் களைமே***[15]

என்றார். "அரும்படர்" என்பது பொறுத்தற்கரிய துன்பமாகும். "இன்னா துறைவி" என்பது காண்பவர்களுக்கு வருத்தத்தைத் தரும் என்பதைக் குறிக்கும். இதன்வழி பொறையும் நிறையும் மனைவிக்குரிய மாண்புகளாகப் புறநானூற்றில் சுட்டப்படுகின்றன என்பது தெளிவு.

**II.1.4. மக்கட்பேறு**

"திருமணப்பிணைப்பானது மக்களை ஈன்று அவர்களை நன்முறையில் வளர்க்கும் நோக்கத்தோடு நடைமுறை விதிப்படியும், பொது மக்கள் கருத்துக்கு இணங்கவும் சமயக் கொள்கைப்படியும் ஒருவனையும் ஒருத்தியையும் அவர்தம் வாழ்நாள் முழுவதும ஒன்று படுத்துவதாகும்" [16] என்பார் என். வி. ஜோஷி.

இல்வாழ்க்கைக்கு ஏற்றம் தருவது நன்மக்கட் பேறேயாகும். மனைவியின் மாண்பு வீட்டிற்கு மங்கலம் என்றால், அதற்கு அணிகலமாகத் திகழ்வது நன்மக்கட் பேறு என்பதனை,

***மங்கல மென்ப மனைமாட்சி மற்ற அதன்***
***நன்கலம் நன்மக்கட் பேறு*** [17]

என்பர் திருவள்ளுவர்.

புறநானூற்றில் பாண்டியன் அறிவுடை நம்பியின் பாட்டு (186) நன்மக்கட் பேற்றின் இன்பத்தை அனுபவித்துக் கூறும் பாட்டாகும். "படைத்தற்குரிய செல்வம் அனைத்தையும் படைத்துப் பலரோடு சேர்ந்து உண்ணத்தக்க மிகுந்த செல்வம் உடையராயினும், குறுகக் குறுக நடந்து சென்று, சிறிய கையை நீட்டிக் கலத்திலுள்ள நெய்யுடை உணவினைத் தரையில் இட்டும், அதை வாயால் கவ்வியும் கையால் துழாவியும் தன் உடம்பின் கண் சிதறியும் இவ்வாறு, அறிவை இன்பத்தால் மயக்கும் மக்களைப் பெறாதவர் தம் வாழ்நாளின் பயனைப் பெறாதவர் ஆவர் என்பது இப்பாட்டின் கருத்தாகும்.

"தம் மக்களால் உண்டாகும் இத்தகைய இன்பமானது இம்மை இன்பம் எல்லாவற்றினும் சிறந்ததென்பதும், அதை எய்துவோரே வாழ்வின் பயனைப் பெற்றவராவர் என்பதும் இதனால் உணர்த்தப்படுகிறது" [18] என்று தரும் விளக்கம் முற்றிலும் பொருத்தமுடையதாகும்.

நன்மக்கட் பேற்றால் குடும்பமே யன்றி நாடும் நலம் பெறும்.

**III. விருந்தோம்பல்**

விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று மகிழ்வது இல்லறக் கடமைகளில் ஒன்று "விருந்து" என்ற சொல் புதியவர் என்று

பொருள்படும். உறவினரும் நண்பருமன்றிப் புதிதாக வருபவரையே விருந்தினர் என்று தமிழ் மக்கள் கருதினர் என்பதை,

***உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை***
***----------------------------------***
***தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப***[19]

என்ற சிறுபாணாற்றுப்படைத் தொடர்கள் வழி அறியலாம்.

தொல்காப்பியர் "விருந்து புறந்தருதல்" என்பதை மனைவிக்குரிய மாண்புகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளார்.

விருந்தினர்க்குச் சுவையான விருந்தளித்துப் போற்றுவதே பழியற்ற வாழ்க்கை எனத் தமிழ் மக்கள் கருதினர் என்பதை,

***வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை***[20]

என்ற தொடரால் ஊன்பொதி பசுங்குடையார் என்ற புலவர் அறிவுறுத்துகிறார்.

விருந்தனரைப் பேணுதல் இல்வாழ்க்கையின் பயன் என்பதனை,

***இருநதோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி***
***வேளாண்மை செய்தற் பொருட்டு***[21]

என்பர் திருவள்ளுவர்.

விருந்து கண்டொளிக்கும், தம் வாழ்க்கை நன்மையில்லாத இல்வாழ்க்கை என்பதை *விருந்து கண்டொளிக்கும் திருந்தா வாழ்க்கை*[22] எனப் பெருங்குன்றூர் கிழார் குறிப்பிடுகிறார்.

ஆய் அண்டிரன் நாட்டைச் சிறப்பித்துப் பாடும் உறையூர் ஏணிச்சேரிமுடமோசியார் என்ற புலவர், அந்நாட்டுக் குடிமக்கள் விருந்தினர்க்கு விருந்து அளிப்பரோடு அவர்களுக்குப் பரிசாகக் கொழுவிய மான் இறைச்சி, மலைச்சாரலில் நன்கு விளைந்த சந்தனக்கட்டை, யானைத் தந்தம் ஆகிய மூன்றையும் புலித்தோலில் குவித்துக் கொடுப்பர் என்பதனை,

***சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை***
***விடர்முனக வடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்***
***புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்***

**இருங்கேழ் வயப்புலி வரியதட் குவைஇ**
**விருந்திறை நல்கும் நாடன் எங்கோன்**[23]

என்பர்.

குறிஞ்சி முல்லை நிலங்களிலிருந்து மருதம், நெய்தல் நிலங்களுக்கு வந்த விருந்தினர்களுக்கு அங்கு வாழும் மக்கள் வாளை மீன், ஆமை, கரும்பு, தேன் ஆகியவற்றை உணவாகக் கொடுத்து வரவேற்பர் என்பதனைப் புறப்பாடல் ஒன்றன் வழி அறிகிறோம்.[24]

## IV கல்விச் சிறப்பு

கல்வியின் சிறப்பும், கற்றவரின் மேன்மையும், கல்லாதார் இழிவும், கேள்விச் செல்வத்தின் உயர்வும் கல்விச் சிந்தனைகள் என்ற தலைப்பின் கீழ் விரித்துக் கூறப்பெற்றுள்ளன.

கல்வி, அறிவை வளர்ப்பதோடு வாழ்க்கையை நன்முறையில் அமைத்துக் கொள்வதற்கும், மேற்கொண்ட செயல்களைச் செம்மையுறச் செய்வதற்கும் பெரிதும் உதவும். ஆகையால் சமுதாயத்தில் கல்விக்கும் கற்றோர்க்கும் மிகுந்த இடமுண்டு என்ற பொருத்தத்தில் இங்குச் சிறிது விளக்கப்படுகிறது.

ஒரு தாய் தான் பெற்ற பிள்ளைகள் பலருள்ளும் கற்றவன் பாலே மிகுந்த ஈடுபாடும் பாசமும் கொள்வாள் என்பதனை *உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்* (183) என்ற புறப்பாடல் நமக்கு உணர்த்துகிறது.

வாழும் உயிர்க்குக் கல்வி கண் போன்றது என்பது திருவள்ளுவர் கருத்து.

“கல்வியினால் அறிவுக் கண் உண்டாகும். கல்வி மெய்ப்பொருள் அல்லது தவத்தினை விளைவிக்கும்; துன்பத்திற்கு உதவியும் ஆகும். கல்வியினால் பொருள்களும் உண்டாகும். புகழும் உண்டாகும். எனவே கல்வியை ஒழித்த மற்றவை பொருள்களல்ல. அதனால் துன்பக் காலத்திற்கென வைத்திருக்கும் பொருளைக் கொடுத்தேனும் கல்வி கற்க வேண்டும்”[25] என்று சீவக சிந்தாமணி கல்வியின் சிறப்பையும், அதைப் பெற வேண்டிய இன்றியமையாமையையும் வலியுறுத்துகின்றது.

**V. பல்லோர் கடமைகள்**

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு. பெற்றோர் பாதுகாப்பில் உள்ள குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆன பிறகு, தங்களைக் காத்துக் கொள்ளும் கடமையை வழுவாமல் செய்தல் வேண்டும். முதலாவதாகத் தம்மைக் காத்துக் கொண்டால்தான் பெற்றோருக்கோ அல்லது உடன் பிறந்தவர்களுக்கோ உதவிக் குடும்பக் கடமைகளைச் செய்ய இயலும்.

நல்ல குடும்பமே சமுதாயத்தின் ஆணிவேர். ஆதலால் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் வாழும் சமுதாயத்திற்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டியது கடமையாகும். சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு என்பதனை **"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே"** (312) என்ற புறநானூற்றுப்பாடல் வழி அறிகிறோம்.

பெற்ற பிள்ளைகள் எல்லாம் நல்லபிள்ளைகள் ஆகுமா? ஒரு தாய் கருவுற்ற நிலையில் நற்சிந்தனை உடையவளாக இருந்து நல்ல குழந்தையைப் பெற்றெடுப்பதுடன் அதனை ஒழுக்க நெறியிலும் வளர்க்க வேண்டியது அவளுடைய கடமை என்பதனை **"ஈன்று புறந்தருதல்"** தாயின் கடன் என்றார்.

உடல் வளர்ந்தால் மட்டும் போதாது. உள்ளமும் அறிவும் வளர்ந்தால்தான், ஒருவன் முழு மனிதனாக முடியும். இவ்வாறு சான்றோன் ஆக்குதலைத் தந்தையின் கடனாகக் குறிப்பிடுவர். தாம் பெற்ற குழந்தையைப் பிறர் சான்றோன் எனப்போற்றத்தக்க நிலையில் ஆளாக்குவது தந்தையின் பொறுப்பாகும்.

"சான்றோன்" என்ற சொல் வீரன் எனவும் பொருள்படும். வீரமிக்க இளைஞனுக்கு வெற்றிகிட்டச் சிறந்த வேலினைக் கொடுப்பது கொல்லனின் கடமையாகும்.

போர்முனையில் தன் திறமையை வெளிப்படுத்தி அரசனுக்கு வெற்றியைத் தேடித்தருவது மறக்குடியில் பிறந்த வீரமகனின் கடமையாகும். அம்மறக்குடி மகன் தன் கடமையை முழுமையாக நிறைவேற்றப் போர்ப் பயிற்சியையும், போர் விதிமுறைகளையும், ஒழுக்கத்தையும் கற்பித்தல் அரசனுக்குரிய கடமை என்பதால் **"நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே"** என்றார்.

ஒரு நாட்டைப் பகைவரிடமிருந்து பாதுகாத்தற்கு யார் யார் எவ்வெக் கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதைப் பொன்முடியார் இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

பண்பட்ட மக்கள் கூடி வாழ்தலே சமுதாயம் எனப்படும். குடும்பம் சமுதாயத்தின் அடிப்படைக் கூறாகும்.

கற்று, கற்றதன் வழிநின்று, ஒழுக்கத்தில் தலைசிறந்தோராக வாழ்க்கை நடத்துபவரே சான்றோர் எனப்படுவர்.

சான்றோர் சமுதாயமே நல்ல நாட்டை உருவாக்க முடியும். தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் சான்றோராலேயே உலகம் நிலை பெற்றுள்ளது.

ஒருவர் நல்லது செய்தல் இயலாதாயினும் அல்லது செய்தலைத் தவிர்த்தல் வேண்டும். சான்றோர் இவ்வாறே செயற்படுவர்.

கணவனும் மனைவியுங் கூடி அறம், பொருள், இன்பம் வழுவாத வாழ்க்கையே இல்லறமாகும்.

இல்லறத்தில் அன்புடைமை முதன்மையாகும். புறநானூற்றுப் புலவர்கள் தமது மனைவியர் மாட்டுப் பெரிதும் அன்புடையவர்களாக விளங்கியுள்ளனர்.

கற்பு, காமம், ஒழுக்கம், பொறையுடைமை, நிறை, ஈன்று புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலியன மனையோள் மாண்புகளாகும்.

மனைவியின் தூய்மையான கற்பு அவளின் தலைசிறந்த பண்பாடாகும். இத்தகைய கற்பு கணவனின் புகழை மிகுவிக்கும்.

பெண்களின் பொறையுடைமைக்குப் புறநானூற்றில் சுட்டப்பெறும் பேகனின் மனைவி ஒரு சான்றாகும்.

இல்வாழ்க்கைக்கு ஏற்றம் தருவது நன்மக்கட் பேறேயாகும். விருந்தோம்பல் இல்லறக் கடமைகளில் தலை சிறந்தது. தமிழ்மக்கள் விருந்தினருக்கு உணவு அளித்து வரவேற்றதுடன் பரிசுப் பொருளும் நல்கியுள்ளனர். சமுதாயத்தில் கற்றோர் பெரிதும் மதிக்கப்பட்டனர். புறநானூறு சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு என்பதை வலியுறுத்தியுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. *No culture or society has ever existed without some form of family organization* - V. Gisbert Fundamental of Society 1959 P. 64.
2. *பழமொழி நானூறு*
3. *மூதுரை - 24*
4. *நன்னெறி - 35*
5. *புறம், 182. 8 - 9*
6. *புறம், 195. 6 - 9*
7. *இராமலிங்கம், என். இ. புறநானூறும் வாழ்வியலும் ப. 135*
8. *தொல் - பொருள், கற்பு இளம் நூ. 5*
9. *புறம், 211 : 22*
10. *புறம், 164 : 7 - 8*
11. *தொல் - பொருள் - கற்பு இளம் - நூ. 11*
12. *குறள் - 55*
13. *புறம், 3 : 6*
14. *குறள் - 156*
15. *புறம், 145 ; 9 - 10*
16. The marriage tie . . . is a life long contract to cement their union by securing the sanction of low public opinion and religion with a view to the procreation of children and also the effective nurturing of the protective.
17. *குறள் - 60*
18. *பழனிச்சாமி, செ. புறநானூற்றில் தமிழர் பண்பாடு ப. 43.*
19. *சிறுபாண் - 190, 192*
20. *புறம் - 10 : 8*

21. *குறள் - 81*

22. *குறள் - 81*

23. *புறம் - 374 : 11 - 15*

24. *புறம் - 42 : 12 - 18*

25. *சீவகசிந்தாமணி, 1892*

3

## சமயச் சிந்தனை

*சங்க கால மக்களின் சமயச் சிந்தனை, புறநானூற்றுச் செய்யுட்களை மையமாகக் கொண்டு ஆராயப் பெறுகிறது.*

*புறநானூற்றுப் புலவர்களின் சமயச் சிந்தனையை அறிதற்குத் தொல்காப்பியச் சமயச் சிந்தனைகள் முன்னோட்டமாக அமைவதால் அவை முதற்கண் விளக்கப்பெறுகின்றன.*

*இவ் ஆய்வுக்கட்டுரை சமயம் என்பதன் பொருள் என்ன? சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சமயத்தின் பயன்கள், வீடு பேற்றிற்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு, தொல்காப்பியச் சமயச் சிந்தனைகள், புறநானூற்றுச் சமயச் சிந்தனைகள் என்று பகுக்கப் பெற்று விளக்க ஆய்வாகவும், ஒப்பாய்வாகவும் அமைகிறது.*

### 1. சமயம் – பொருள் விளக்கம்

*சமயம் என்பதற்கு அறிஞர்கள் வெவ்வேறு வகையில் விளக்கம் அளிக்கின்றனர். எனினும் அனைத்து விளக்கங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையனவே.*

*“சமைக்கபட்டது சமயம். மாக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று மக்கள் தன்மை பெறும் வழியாகச் செய்யப்பட்டது அல்லது சமைக்கப்பட்டதுதான் சமயமாகும். மனிதனைப் பண்பாடுடையவனாக ஆக்குவது சமயம். சமயம் வெறும் குறிகளும் அடையாளமும் அன்று. பிறர்க்குப் பயன்படுவானாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும்”[1] என்பர் அ.ச. ஞானசம்பந்தன். “சமயம் என்னும் சொல்லால்*

பொழுது அல்லது காலம் என்னும் பொருள் பெறப்படுகிறது"[2] என்பர் மறைமலையடிகள். "மனிதன் தன் அமைப்பு முறையிலேயே சமய உணர்வு கொண்ட பிராணி"[3] என்பர் எட்மண்டபர்க்.

உண்மையான சமயத்திற்குரிய தனிச்சிறப்பான இயல்புகள் நல்லெண்ணம், அன்பு, வாய்மை, தூய்மை, உத்தம உணர்வு, கருணை[4] என்பர் கௌதம புத்தர்.

"சமயம் என்பது மெய்யறிவை உணர்தல், அது அழகுப் பேச்சோ, தத்துவமோ, சித்தாந்தமோ இல்லை"[5] என்பது விவேகானந்தர் கருத்து.

"உயர்ந்த உணர்வு வாழ்க்கையில் அருள் வாழ்க்கை அல்லது சமய வாழ்க்கை, மெய் வாழ்க்கை என்று நவிலப்படும்"[6] எனவும் கருதுகின்றனர்.

"அன்பையும் அருளையும் எல்லா உயிர்களிடத்தும் செலுத்துவதே சமயம் ஆகும். அவ்வாறு செலுத்துவதற்கு இறைவன் உதவுகிறான் இவ்வுண்மையை உலகிற்கு உணர்த்தி, இயற்கையை இறைவனாகக் கண்டு உயிரினங்கட்குத் தொண்டு செய்வதே உயிர் மூச்செனக் கருதுவது சமயமாகும்"[7] என்பார் கூற்று மேற்கூறிய கருத்துகளைத் தழுவியதாகும்.

தமிழர் அன்பு நெறியே சமயநெறி எனக் கொள்வார். அன்பில்லா வாழ்க்கை சிறக்காது என்பது சமயத்தின் அறிவுரை.

**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே**[8]

என்பர் திருமூலர்.

## II. சமயம் – தோற்றம் – வளர்ச்சி

மக்களினத்தின் சிறப்பியல்புகளுள் ஒரு முக்கிய அங்கமாக அமைந்துள்ளது சமயம். சமயக் கோட்பாடு இல்லாத மக்களினமே இல்லை என்று சொல்லலாம். கொள்கைகளிலே எத்தனையோ பேதங்கள் காணப்படலாம். பழக்க வழக்கங்களிலே எத்தனையோ மாறுதல்கள் இருக்கலாம். ஆனால் எல்லோரும் தெய்வக் கொள்கையிலே ஒரு தன்மையராகக் காணப்படுகின்றனர். எல்லோரும் தெய்வம் என்று ஒன்று உண்டு என்று நம்புகின்றார்கள். தெய்வமே இல்லை என்பவர்களும் அதன் நிலையில் இயற்கை

சக்திகளை ஒப்புக் கொள்ளுகின்றனர். இத்தெய்வக் கொள்கை எக்காலத்துத் தோன்றியது என்று வரையறுத்தல் இயலாது. பலவகையில் ஆராய்ந்து பார்ப்பினும் சமய உணர்ச்சி அநாதியாகவே தோன்றி இன்று வரையிலும் பயின்று வந்திருப்பது சரித உண்மை"[9] என விளக்குவர்.

**II.1. பொருள் - இன்பம் - அறம்**

மக்கள் பொருட் செழிப்புடன் வாழும் நிலையில் பொருட்களின் தன்மைகளை ஆராயக் கல்வி அறிவிலும் நாட்டம் கொள்கின்றனர். பொருள் இயல்புகளை ஆராய்ந்தபிறகு, அவ்வியல்புகளைப் பலருக்கும் பயன்படுத்தி மகிழும் அன்புணர்வில் மேம்படுகின்றனர். அதன் பின்னர்ப் பிறர்க்கென வாழும் அருள் உருக்கமாகிய பெருநிலையில் உயர்ந்து செல்கின்றனர். இவ்வளர்ச்சி நிலை உயிர்களுக்கு இயல்பாக அமைந்துள்ளது. இவ்வமைப்பினைத் திருக்குறள் அமைப்பு வழி அறியலாம். பொருட்டன்மையை அறிய வள்ளுவர் பொருட்பாலை அமைத்து அதனை ஆராயும் கல்வியைப் பொருட்பகுதியில் அமைத்து விளக்கி அக்கலைகளைப் பயன்படுத்தும் உயிரன்பு நிலையை இன்பப்பால் கொண்டு தெரிவித்து, இன்பப் பாலின் வளர்ச்சியாகிய அருளறத்தை அறத்துப்பாலில் தெளிவித்துள்ளார். இதனை,

***அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து***
***தீதின்றி வந்த பொருள்***[10]

என்ற குறள் வழி அறியலாம்.

உயிருணர்வின் இவ்வளர்ச்சி முறை

***அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்***
***ஆற்றும் பெருமநின் செல்வம்***[11]

என்ற புறநானூற்றுத் தொடர்களால் தெளிவு பெறும்.

பொருளின் செழுமைகண்டு, அதன் கலைகள் அறிந்து, ஆண், பெண் நேயமான அன்புணர்ந்து அருள் வாழ்வில் உயரும் நல்லோர், அருள் நிலையில் பொருள்களை மறந்து, தொடர்புடையோரை மறந்து, அருள் உணர்வு நிலையில் மிதக்கும் நிலையே சமய நிலை.

இவ்வாறு அருள் உணர்வில் நிற்பதற்கு இறைவனோடு திளைத்து நிற்க வேண்டும். இவ்வாறு நிற்கும் போது உலகுயிர்ப் பற்றுகள் அற்றுப் போகின்றன.

இறைப்பற்று ஏற்படச் சமயப்பற்று வழிகோலுகிறது. உலகப் பொருட்பற்று அற்றுப் போகின்றது.

உலகில் தவநெறியே உயிர்களை அருள் உணர்வில் கொண்டு செலுத்தும் ஒன்றில் செழித்த நிலையில்தான் அதன் நிலையாமையை நாம் உணரமுடியும். இச்செழிப்பு நிலையையே (வெற்றி) தொல்காப்பியர் வாகைத் திணை என்றார். "எனவே சமய உணர்ச்சி மக்கள் முதன் முதல் தோன்றுவதற்கு இடமாயிருந்தது இவ்வாகைத் திணையே என்க. மக்களின் எல்லா வகையினரும் தத்தம் நிலையை மிகுத்துக் கொண்டு செழிப்புக் கண்ட நிலையில் அவர்க்கு நிலையாமை உணர்வும், நிலைத்த மெய் உணர்வுப் பெருமையும் தோன்றி வளர்தலின் தொல்காப்பியர் இவ் இயற்கை முறையே பற்றி வாகைத் திணைக்கு அடுத்தபடி நிலையாமை கூறும் காஞ்சித் திணையையும் மெய்யுணர்வுப் பெருமை பாராட்டும் பாடாண் திணையையும் வைத்து அருள்நெறி உண்மையை விளக்கிச் சென்றார் என்பார் கூற்று முற்றிலும் பொருந்துவதாகும்.[12] இவ்வியல்புகளைப் புறநானூறு வாகைத் திணையின் துறைப்பாட்டுகளால் (251 - 52) அறியலாம்.

அருள் உணர்ச்சியே திருவருள். இத் திருவருள் உலகம் முழுவதும் ஊடுருவி ஒளிரும் திறனுடையது. இவ்வாறு அருளில் திளைத்தலாகிய கடவுள் உணர்ச்சி சங்க காலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் தழைத்திருந்தது என்பதில் சற்றும் ஐயமில்லை.

சங்க காலத் தமிழ் மக்கள் சமய உணர்வை வெறுங் கலையளவாய்க் கருதாமல் வாழ்க்கை உணர்வாய் உணர்ந்து அருள் வாழ்க்கை வாழ்ந்தனர். இவ் அருள் வாழ்க்கை முறைகளிலிருந்தே பின்பு அவற்றின் கருத்துப் பகுதிகள் பற்பல சமயக் கலைகளாக வெளிப்பட்டன. அவை உலகாயதம், பௌத்தம், சாங்கியம், நைசாயிகம், நவகேடிகம், மீமாம்சம் என்னும் அறுவகைப் பிரிவுகளில் நிலைத்து நின்றன. இந்த அறுவகைப் பிரிவுகளும் ஒருங்கு சேர்ந்த வாழ்க்கை முறையே உண்மையிற் சமயம் என்று கூறுவதற்குப் பொருந்தும்.

**III. சமயத்தின் பயன்**

சமயம் என்பது நம் மனத்தைக் கட்டுப்படுத்தி ஒருவழியில் செலுத்துவது என்று கருதப் பெறுவதால் ஒரே சிந்தனையில் மனத்தைக் கட்டுப்படுத்தி நற்றொண்டுகளைச் செய்யச் சமயம் வழிகோலுகிறது.

சமயம் மனக்கட்டுப்பாட்டிற்கு வலிகோலுவதால் ஒவ்வொரு நாளும் மனிதனது நடத்தையை அது செம்மைப்படுத்துகிறது. உண்மையான சமயம் ஒரு மனிதனுள் அடங்கிக் கிடக்கும் அன்பை வளர்ப்பதாக அமைகிறது.

***எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே***
***அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே***[13]

என்று தாயுமானவர் பாடியதற்கேற்பச் சமயம் அனைவரும் மகிழ்ந்து வாழ வழி வகுக்கிறது.

சமயமும் வாழ்க்கையும் ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாதவை. வாழ்வில் அமைதி ஏற்படச் சமயமே உறுதுணை. அணுவில் அணுவாக நிறைந்துள்ள இறைவனை அறியச் சமயம் என்னும் அன்புநெறி உதவுகிறது.

சமயம், அன்பு, அறம், அருள், நீதி எனும் நெறிகளைக் கொண்டு தழைத்தது ஆதலால் மனிதச் சிந்தனையில் தெளிவையும், அறிவுக் கூர்மையையும், மனத்தூய்மையையும் ஏற்படுத்தும். சுருங்கக் கூறின் சமயம் பண்பையும், ஒப்புரவையும், ஒற்றுமையையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தும்.

ஒவ்வொரு சமயமும் சில மூலக் கொள்கைகளை மேற்கொண்டு காலத்திற்கேற்றபடி தோன்றிச் சமூகத்திற்குப் பெரும்பயன் அளித்துள்ளன. புத்த சமண சமயங்கள் உயிர்க்கொலை செய்து ஊன் உண்பதைத் தடுத்து உயிரிரக்கத்தைப் புகட்ட வந்தன. இக்கோட்பாட்டில் இம்மதங்கள் வெற்றி பெற்றன.

சமயம் மக்களுக்குத் தொண்டு செய்வதிலும், நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை வலியுறுத்துகிறது. போரிலும் அறநெறி பேணப் போதிக்கின்றது.

அறநெறிகளே பிற்காலத்தே சமயக் கொள்கைகளாக மாறின. எல்லாச் சமயங்களுக்கும் அன்பே அடிப்படை. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல், இன்னா செய்யாமை, மக்களிடையே உயர்வு தாழ்வு கருதாமை, தன்னலம் கருதாது பொதுநலம் பேணுதல் முதலிய அறநெறிகள் சமய நெறிகளாகவும் இப்பொழுது கருதப் பெறுகின்றன.

திருவள்ளுவர் "பொய்தீர் ஒழுக்க நெறியே சமய நெறி" என்று வலியுறுத்துவதால் சமுதாயத்தில் வாய்மை தனிச்சிறப்புப் பெறுகின்றது.

சமயம், உயர்ந்த உணர்வு வாழ்க்கையாகிய மெய் வாழ்க்கைக்குத் துணை நிற்பது. சமயம் ஆன்மாவைத் தூய்மை செய்கின்றது. "நான்" என்ற ஆணவத்தை அடக்கி நல்வாழ்வு காட்டுகிறது.

### IV. சமயம்

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் உறுதிப் பொருள்கள் ஆகும். இந்நான்கில் இன்பம் ஒன்று நீங்கலாக ஏனை மூன்றையும் நம் முன்னோர் புறப்பொருள் என்றனர். இதன் வழி நாம் அறிவது என்ன? இன்பம் அகம் என்றும், பொருள் புறம் என்றும் கூறிவிடலாம். "பொருளை ஒழுங்காகப் பயன்படுத்துவதனால், பொருளை நுகரும் இன்பத்திலும் சிறந்த பேரின்பமாகிய வீடுபேறு உண்டாதலின் ஒழுங்கு முறை என்றும் அறமும் அதன் பயனாகிய வீடும் பொருளோடு சேர்த்துப் புறப்பொருள் எனப்பட்டன"[14] என்பார் கூற்று இங்கு நினையத்தக்கது.

"இன்பம்" என்பது வெறும் பொருளை மட்டும் நுகரும் இன்பமாக இருப்பின் அதுவும் புறப்பொருள் என்றே வழங்கும். புறநானூற்றுப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர், இந்நூல் அறநிலை, பொருள் நிலை, இன்பநிலை என்னும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப் பெற்றிருக்க வேண்டும் என்பது ஊகித்தறியப்படுகின்றது"[15] என்று எழுதியிருப்பது மேற்கூறிய விளக்கத்திற்குப் பொருத்தமாக இருக்கிறது. அகப்பொருள் என்று கூறப்படும் இன்பம் என்பது உயிரறிவின் அன்பை நுகரும் இன்பமாதலின் அது தனியாக "அகம்" என்றே வழங்கப்படுவதாயிற்று.

"வீடு" என்னும் நிலை, சொல்லுக்கும் பொது. உணர்வுக்கும் எட்டாத உணர்விறந்த சிறப்பு உணர்வு நிலையாகக் கருதப்படுகின்றது. மேலும் அது அற ஒழுக்கத்தின் பயனாய் உண்டாவதாயுள்ளது. ஆதலால் அதனை அறம் என்பதிலேயே அடக்கினர். எனவே நூல்களால் விளக்கிப் பேசக்கூடிய உறுதிப்பொருள்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று மட்டுமே என்க. இந்நிலையில் புறப்பொருளை உணர்த்தும் புறநானூறு என்பது பொருள்நிலை, அறநிலை, வீட்டுநிலை என்பவற்றோடு, பொருள்களைப் பற்றி நுகரும் இன்பநிலை என்னும் புறப்பகுதியையும் சேர்த்து வாழ்க்கையின் நிலைகள் பலவற்றை விளக்கிச் செல்கிறது.

அறநிலைகள் வாழ்க்கை ஒழுக்கங்களாகச் செயற்படும் போது அவை உணர்வு நிலை எனப்பட்டுப் பேராற்றல் பெறுகின்றன. இவ் உணர்வுக்களம் அருட்களம் அல்லது சமய வாழ்க்கை எனப்படுகிறது.

உணர்வுநிலை அல்லது வாழ்க்கை நிலை என்பதே இல்லறநிலை. இல்லற நிலையின் உயர்ந்த படிஞானநிலை அல்லது அருள்நிலை, சமயநிலையே. இத்தகைய ஞானநிலையை ஏற்படுத்துவதால் அது உறுதியாக வீடுபேற்றிற்குத் துணை செய்கின்றது.

தொல்காப்பியருங் கூட,

***இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு***
***அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்***
***காமக் கூட்டம் காணுங்காலை*** [16]

என அறம், பொருள், இன்பம் என்னும் இவ் உறுதிப் பொருள்களின் குறிக்கோளை விரித்தோதியுள்ளார்.

சோழன் நலங்கிள்ளிக்கு, முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர், வாழ்க்கை அறம், பொருள், இன்பம் என்னும் குறிக்கோள் வகையில் நிகழ வேண்டும் என்பதை

***அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்***
***ஆற்றும் பெரும நின்செல்வம்***
***ஆற்றாமை நிற்போற்றாமையே*** [17]

என எடுத்துரைத்துள்ளார்.

நம் சமயக் குரவர்கள்கூடத் தொன்றுதொட்டுத் திருநெறி உண்மைகளாக அறியப்பட்டு வந்த நான்மறைப் பொருள்கள் அறம் முதலிய உறுதிப் பொருகள் நான்குமே என்று திருமுறைகளில் கூறியுள்ளனர் என்பது இங்கு நினையத் தகும்.

## V. தொல்காப்பியச் சமயச் சிந்தனைகள்

"கடவுள் உணர்வும் கடவுள் நம்பிக்கையும் பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்தனர் என்பது சங்க இலக்கியங்களிலிருந்து தெரிகிறது. எனினும் சங்க இலக்கியத்தில் கடவுள் நம்பிக்கை குறிப்பிட்ட சமயப் பற்றாக உருவாகவில்லை எனக் கொள்ளலாம்"[18] என்பர்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களில் "சமயம்" என்ற சொல்லே இல்லை. அதற்குப் பிற்பட்ட நூல்களில்தான், சமயம், மதம் என்ற சொற்கள் காணப்படுகின்றன. எனவே சங்க காலத்தில் மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பினும், அவர்கள் சிவன், திருமால் போன்ற கடவுளர்களை வழிப்பட்டாலும் சைவ சமயம், வைணவ சமயம் போன்ற சமயப்பற்று வேரூன்றவில்லை என்பது தெரிகின்றது. சமயம் அல்லது மதம் என்பது வடநாட்டிலிருந்து சமணர்களாலும், பௌத்தர்களாலும் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்பு தமிழகத்தில் குறிப்பிட்ட மதமோ சமயமோ இல்லை எனலாம்"[19] என்பார் கூற்றுச் சிந்திக்கத்தக்கது.

புறநானூற்றுப் புலவர்களின் சமயச் சிந்தனையை அறிதற்கு, சங்ககாலத்திற்கு முற்பட் தொல்காப்பியச் சமயச் சிந்தனை பெரிதும் நலம் பயக்கும்.

### V. 1. தொல்காப்பிய – தெய்வக் குறிப்பு

தொல்காப்பியர் தமிழக நிலப் பகுதியை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்காகப் பகுத்து, அவற்றிற்கு முறையே திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகியோர் தெய்வங்கள் என்றும், "மாயோன் மேய காடுறை உலகமும்"[20] என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

"தொல்காப்பியத்துள் 'தெய்வம்' ஒன்பது இடங்களிலும், 'கடவுள்' மூன்று இடங்களிலும் இடம் பெற்றுள்ளன என்றும் தெய்வம் என்பது அந்தந்த நிலக்டவுளைக் குறிப்பதென்றும், கடவுள்

என்பது பொதுவாக இறைவனைக் குறிப்பதென்றும்" [21] உரைப்பர் தா. ஏ. ஞானமூர்த்தி.

***வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்***
***பழிதீர் செல்வ மொடு வழி வழி சிறந்து***
***பொலிமின் என்னும் புறநிலை வாழ்ந்தே*** [22]

என்ற தொல்காப்பிய நுற்பாவில் "வழிபடு தெய்வம்" என்ற தொடர் காணப்பெறுவதால் அந்தந்த நிலமக்கள் வழிபடுவதற்கென்று குறிப்பிட்ட தெய்வம் இருந்தது என்று தெளியலாம்.

நிலங்களுக்குரிய கருப்பொருள்களைத் ***"தெய்வம் உணாவே மா மரம் புட்பறை"*** [23] என்று தொடங்கும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார். கருப்பொருள்களில் முதன்மையாகத் தெய்வத்தைச் சுட்டுவது அக்கால மக்களுக்கு இருந்த உறுதியான தெய்வ நம்பிக்கையைச் சுட்டுகின்றது.

தொல்காப்பியர் "பூவைநிலை" பற்றிப் பேசுமிடத்து மாயோனைக் குறிப்பிடுகின்றார். வேலன் வெறியாடலும், கொற்றவை குறித்த நிகழ்ச்சிகளும் காணப்படுகின்றன. போரின் சிறந்த வீரனுக்குக் கல் நட்டு வழிபடும் வழக்கமும் தெரிய வருகின்றது. "தெய்வத்திற்கு அவர் கோயில் இயற்றி உருவம் சமைத்து வழிபட்டுப் பழகி வந்த மனப்பான்மையே ஒரு வீரனுக்குக் கல் நட்டு வழிபடும் எண்ணத்தை உண்டாக்கியிருக்க வேண்டும் என்பார் கூற்று இங்கு நினைக்க வேண்டிய ஒன்றாகும்.

தெய்வத்திருக்கோயில் முதலிய அறநிலையங்களைப் பாதுகாத்தற்கு அரசன் தலைவியைப் பிரிந்து சேரலுண்டு என்பதை,

***"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய"*** [24] என்று தொடங்கும் நூற்பாவில் குறிப்பிடுகிறார். இந்நூற்பா உரையில் "ஏனோர் படிமைய" என்பதற்கு மக்களையல்லாத தேவரது பூசையும் விழாவும் முதலாயினவும் ... மக்கள் முறை தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும் பிரிவு உளதாம் என்று குறிப்பிடப்படுகிறது. இதிலிருந்து கோயிலில் திரு உருவம் வைத்து வழிபட்டமை தெரியவரும்.

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்தோடு கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் வாழ்த்தப்படும் என்றலின் இம்மூன்றும் கடவுளைப் போல வணங்கப்பட்டன என்று எண்ணலாம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் *காலம் உலகம்*[25] என்ற நூற்பாவில் சேனாவரையர் வேறுசிலவற்றைத் தெய்வம் என்று குறிப்பிடுகின்றார். அவையாவன: காலம்-காலக்கடவுள்; பால்வரை தெய்வம்-இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுக்கும் தெய்வம்; வினை-அறத் தெய்வம்; நாமகளாகிய தெய்வம்.

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் தொல்காப்பியரைப் *பல்புகழ் நிறுத்த படிமையோன்* எனக் குறிப்பிடுகின்றது. தவத்தினரைப் படிமையோன் என்று கூறுவது சைன நூல் வழக்கு, மரபியலில் உயிரை ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாகப் பகுத்துக் காட்டியதும் சைன நூல் வழக்கே யென்றும். இதனால் தொல்காப்பியர் சமணராயிருக்கலாம் என்றும் சிலர் கருதுவர். இதனைக் கருத்தில் கொண்டால் அவர் காலத்திலேயே சமணம் தமிழகத்தில் இருந்திருக்கலாம் என்று துணிய இடமுண்டு.

தொல்காப்பியர் காஞ்சித் திணையில் பல்வகை நிலையாமைகளை எடுத்துக் கூறுவதையும் சிந்திக்க வேண்டும். நிலையாமையைப் பெரிதும் வலியுறுத்தித் துறவறத்தைப் போற்றுவதும் சமணமே.

தொல்காப்பியர் தவத்தின் இயல்பு பற்றியும் கூறுகிறார். அக்காலத்தில் துறவறங் காத்த முறையை,

> ***காமஞ் சான்ற கடைகோட் காலை***
> ***ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி***
> ***அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்***
> ***சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே***[26]

என்ற நூற்பா விளக்குகிறது. இங்ஙனம் பல்வேறு நிலைகளில் தொல்காப்பியர் காலச் சமயச் சிந்தனைகளை அறியலாம்.

## VI. புறநானூற்றில் சமயச் சிந்தனை

புறநானூற்றுக் காலத்திலேயே ஆரியக் கொள்கைகள் தமிழரிடையே கலந்துவிட்டன. வேள்வி இயற்றுதல், வேதம் ஓதுதல் முதலிய ஆரியர் செயற்பாடுகளைத் தமிழரும் ஏற்றுப் போற்றினர். வேள்வி செய்தல் சிறந்ததாகக் கருதப் பெற்றமையால் மன்னர்கள் வேள்வி இயற்றினர்.

### VI. 1. வேதவேள்வி - அந்தணர்

புறநானூற்றுப் புலவர்கள் வேதநெறி, பக்திநெறி என்ற இரண்டு குறித்தும் சிந்தித்துள்ளனர். அங்கம் ஆறினால் உணரப்பட்ட வேதம் நான்கும் பழைய நூல் என்றும், சிவபெருமாள் வாக்கைவிட்டு அது நீங்காதது என்றும் குறிக்கப்படுகிறது.

வேதத்தை அந்தணர்கள் நன்கு பயின்றனர். அதனால் மறைநவில் அந்தணர், நான்மறை முதல்வர் என்று சிறப்பிக்கப் பெற்றனர். அறுவகைத் தொழில்களைச் செய்தனர் என்றும் கூறப்பெற்றனர். வேள்வியைப் பற்றித் தரும நூல்களும் நால்வேதமும் சிறப்பாக எடுத்துரைத்துள்ளன.

### VI.2. வேதவேள்வி - அரசர்

அரசர்கள் நான்மறை முதல்வர்களைச் சுற்றமாகக் கொண்டு பெருவேள்வி செய்தனர்.

சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைச் சிறப்பிக்கும் புலவர்,

***அறுதொழில் அந்தணர் அறம் புரிந்தெடுத்த***
***தீயாடு விளங்கும் நாடன்*** [27]

என்று பாராட்டுகிறார். அவன் நாட்டில் எங்கும் வேள்வி வேட்டடல் நடைபெற்றதை இதன் வழி அறிகிறோம்.

பாண்டிய அரசன் பல்யாகசாலைகள் அமைத்து வேள்வியைப் போற்றினான். இதனால் அவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று பெயர் பெற்றான். இவனைப்பாடிய புலவர்.

***வீயாச் சிறப்பின் வேள்விமுற்றி***
***யூபம் நட்ட வியன்களம் பலகொல்*** [28]

என்று குறிப்பிடுவர். யூபம் என்பது வேள்வித்தூண்.

சோழர்களில் சிறந்த பேரரசனாகிய கரிகால் பெருவளத்தானும் வேள்விப் பயனை நன்கு உணர்ந்து ஒரு பெரு வேள்வி செய்தான் என்று தெரிகிறது. அவன் இறந்தபின் கையறுநிலை பாடும் கருங்குழல் ஆதனார் அவன் செய்த நற்செயல்களில் வேள்வியை ஒன்றாக வைத்து "வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம்"[29] என்று இரங்கிப் பாடுகின்றார்.

மற்றொரு சோழன் இராசசூயம் என்னும் யாகம் செய்து இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று பெரும் பெயர் பெற்றான்.

புறநானூற்றில் ஆவூர் மூலங்கிழார் பாடிய 166 ஆம் செய்யுளில் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் செய்த வேள்வி சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இச்செய்யுளில் வேள்வி செய்யும் முறைகள் விரித்துக் கூறப்பெற்றுள்ளன. விண்ணந்தாயன் தன் மனைவியுடன் சேர்ந்து வேள்விக்குரிய தோலாடை அணிந்து மகளிர் துணைபுரிய வேள்வி செய்தான். அவ்வேள்வியில் நீர் நாணும்படி நெய் சொரியப் பெற்றது; வேள்வி முடிவில் பெரு விருந்து செய்தான். இவன் செய்தவேள்விகள் எண்ணிலடங்காதவை. எனவே புலவர்,

**எண்ணாணப் பலவேட்டும்**
*மண்ணாணப் புகழ்பரப்பியும்*[30]

என்று பாராட்டுகிறார்.

### VI.3. இறையும் - இறைவழிபாடும்

புறநானூற்றில் பெருந் தெய்வங்களாகவும் சிறு தெய்வங்களாகவும் குறிக்கப்பட்டன பல. இந்நூலில் சிறப்பாகச் சிவன், திருமால், முருகன், பலதேவன், பிரமன் முதலிய தெய்வங்கள் குறிக்கப்பட்டு உள்ளனர். இத்தெய்வங்களுக்கு அக்கால மக்கள் கோயில் அமைத்து வழிபட்டுள்ளனர். இத்தெய்வங்களுக்கு அமைக்கப்பட்ட கோயில்கள் முக்கட் செல்வன் நகர், முருகன் கோட்டம், வச்சிரத் தடக்கை நெடியோன் கோயில், அணங்குடைத்தேவி முன்றில் என்ற தொடர்களால் குறிக்கப் பெற்றுள்ளன. கோயிலில் அவரவர் தத்தம் தெய்வ உருச் சமைத்து வணங்கினர். புலவர்கள் தத்தம் பாடல்களில் இறைவனின் திருவுருவத்தை வருணித்துள்ளனர்.

### VI.3.1. சிவன்

புறநானூற்றில் காப்புச் செய்யுளாகப் பெருந்தேவனார் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் சிவபெருமானை நீர் அறாத கமண்டலத்தொடும் தாழ்ந்த சடையோடும் விளங்கும் தவசி என்று குறிப்பிடுகின்றார். அவர் தம் உருவைப் "பெண்ணுரு ஒரு

திறனாகின்று" என்று உமாதேவியுடன் கூடியிருக்கும் உருவத்தைச் சுட்டுகிறார். சிவபெருமான் கொன்றைக் குறுங்கண்ணி சூடி, மார்பில் கொன்றை மாலை அணிந்து நிற்கிறான். இடபத்தை ஊர்தியாக உடைய அவன் அதனைக் கொடியாகவும் உயர்த்தி உள்ளான். பிறைச்சந்திரன் நுதலுக்கு வண்ணமாக அமைந்துள்ளது. அவன் உண்ட நஞ்சு அவன் கண்டத்திற்கு அழகு செய்கிறது. நஞ்சும் பிறையும் அவன் அடியாரிடத்துச் செய்த கருணையைக் காட்டுவன.

மற்றொரு புலவர் சிவபெருமானை "முக்கட் செல்வன்" என்று குறிக்கின்றார். மற்றொரு புலவர் அவன் நுதற்கண்ணை ஓர் அரசனுக்கு ஒப்பிடுகின்றார். சிவபெருமானை மழுப்படையேந்திய கையுடையான் என்றும், ஆலமர் கடவுள் என்றும் குறித்துள்ளனர். வேதம் அருளிய நாதன், அசுரர்களை ஒடுக்கி அமரர்களுக்கு வென்றி தந்தோன், தேவர் பொருட்டு நஞ்சுண்டோன் எல்லா உயிர்க்கும் பாதுகாவலன் என்று அவன் புகழ் கூறப் பெறுகின்றது.

### VI. 3. 2. திருமால்

நீலமணியை ஒத்த திருமேனியன். அஞ்சன மேனியன் என்று புகழப்படுபவன். திருமால் கருடக் கொடியை உயர்த்தியவன், புலவர்கள் புகழுக்கும் செல்வத்திற்கும் திருமாலையே ஒப்பிடுவர். திருமால் சக்கரப்படை கொண்ட நேமியன் எனப்பட்டான். "தாலி களைந்தன்றுமிலன்" (77.7) என்ற தொடரிலிருந்து அவன் பஞ்சாயுதங்களைப் படைத்திருப்போன் என்று ஊகிக்கலாம்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கிருந்த நிலையை

***பானிற உருவிற் பனைக்கொடி யோனும்***
***நீனிற உருவின் நேமி யோனுமென்று***
***இருபெருந் தெய்வ முடனின் றாங்கு***
***உருகெழு தோற்றமோ டுட்குவர விளங்கி***[31]

என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் குறிப்பிடுகின்றார். இங்குப் பலதேவரோடு நேமியான் எனக் குறித்தது கண்ணனை எனலாம்.

### VI. 3.3. பலதேவன்

*பலதேவன் கண்ணனுடன் பிறந்தவன். சங்கு போன்ற வெண்ணிறம் உடையவன். இதனால் வாலியோன் என்று அழைக்கப்பட்டான். இவனுக்குக் கோயில் இருந்ததாகச் சிலப்பதிகாரம் நுவலுகின்றது. ஆனால் இவன் கோயில் இப்பொழுது இல்லை. இவன் பனைக் கொடி உடையான்; நாஞ்சிற் படையுடையான்; வலிமையில் சிறந்தவன். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் பாடிய போது வலியொத்தீயே வாலியோனை (56.12) என்பர்.*

### VI. 3. 4. பிரமன்

*பலதேவனைப் போலப் பிரமனுக்கும் இக்காலத்தில் கோயில் இல்லை. பிரமன் படைப்புக் கடவுள். இவன் படைப்பில் இன்ப, துன்பங்கள் கலந்திருப்பன. இவன் படைப்பில் இன்னாமையை மிகுவிப்பதைக் கண்ட பக்குடுக்கை நண்கணியார் என்ற புலவர் "**படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்**" (194.5) என்று பிரமனைப் பழிக்கின்றார்.*

### VI. 3.5. முருகன்

*பழந்தமிழ் நூல்களில் காணப்படும் தெய்வங்களில் முதன்மையானவன் முருகக்கடவுளே. மயில் ஊர்தியில் மயிற்கொடி ஏந்தி விளங்குபவன்; கடப்பமாலை அணிந்தவன்; எண்ணியதை முடிக்கும் ஆற்றலன்; அரசர்களின் வீரத்திற்கு ஒப்பிடப்படுபவன். இவன் கோயில் கொண்டுள்ள அறுபடை வீடுகளில் ஒன்றாகிய செந்திலம்பதியை "**வெண்டலைப் புணரியலைக்கும் செந்தில் நெடுவேள் நிலைஇய**" (56. 18-19) என்று மருதனிளநாகனார் என்ற புலவர் குறிப்பிடுகிறார்.*

*முருகன் நினைத்ததை முடிப்பவன் ஆதலால் "**முருகொத்தீயே முன்னியது முடித்தலின்**" (56.14) என்று நக்கீரர் குறிப்பிடுகின்றார்.*

### VI. 3.6. இந்திரன்

*இந்திரனுடைய கோயிலும் இன்று தமிழகத்தில் இல்லை. இவன் வச்சிரப் படையை உடையவன். இதனை நினைவுபடுத்தும்*

வகையில் புறநானூற்றில் புலவர் ஒருவர் "**வச்சிரத் தடக்கை நெடியோன்**" (241) என்று குறிப்பிடுகிறார்.

### VI. 3. 7. தேவி

புறநானூறு 247 ஆம் செய்யுளில் தேவியின் முற்றம் சிறப்பிக்கப்படுகிறது. யானைகள் காய்ந்த விறகுகளைக் கொண்டு வந்து வேடுவர்களுக்குக் கொடுக்கின்றன. அதனால் அவர்கள் தீமுட்டினர். அவ்விளக்கொளியில் மடப்பமுடைய மான்கள் தூங்குகின்றன. மந்திகள் அம்முன்றிலைச் சீய்த்துச சுத்தம் செய்கின்றன. இத்தகைய காட்சிகளை உடையது தேவியின் முன்றில் என்று அச்செய்யுளில் கூறப்பட்டுள்ளது.

### VII. சிறுதெய்வங்கள்

புறநானூற்றுக் காலத்தில் சிறுதெய்வ வழிபாடு இருந்துள்ளது. மலையிலும், நீரிலும், மரங்களிலும் தெய்வம் உறைவதாக மக்கள் நம்பினர். மலையைச் சிறப்பிக்கும் போது அணங்குடை நெடுங்கோடு, அணங்குசால் அடுக்கம், அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமையம் என்று கூறப்பட்டிருக்கின்றது. தெய்வம் உறைந்த ஓர் ஆலமரத்தைக் "கடவுள் ஆலம்" (196) என்று ஒரு புலவர் அழைக்கின்றார். கள்ளி நிழலில் உள்ள ஒரு தெய்வத்தைப் பாணன் தொழுது வருவதாக ஒரு புலவர் சிறப்பிக்கின்றார் (260).

கள்ளி நிழல் தெய்வம் நடுகல் வழிபாடாக இருக்கலாம். எனக் கருதுகின்றனர். போரில் அஞ்சாது போரிட்டு மாய்ந்த மாவீரனுக்கு நடுகல் எடுத்து வழிபட்டுள்ளனர்.

**கல்லா இளையர் நீங்கான்**
**வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்**
**கொல்புனற் சிறையின் விளங்கியோன் கல்லே**[32]

என்ற புறநானூற்றுத் தொடர்கள் நடுகற்குரிய வீரன் சிறப்பை விளக்குகின்றன. கல்லில் மயிற் பீலி சூட்டி, கள்ளினைப் படைத்து வாழ்த்துவர். வேங்கைப்பூ முதலிய பூக்களும் கல்லிற்கு அணிதல் உண்டு.

நீர்த்தெய்வம் பற்றிய குறிப்பும் புறநானூற்றில் காணப்படுகிறது. "**முந்நீர் விழவின் நெடியோன்**" (9) என்ற தொடரின் உரையில்

உரையாசிரியர் கடற் தெய்வத்திற்குச் செய்த விழவு என்று உரை எழுதுகிறார், முந்நீர்-கடல்.

பேயும் சிறுதெய்வமாகக் கருதப்பட்டது. இவை இறந்த வீரர் புண்ணைக் குடைந்து ஊறு விளைவிக்கும் என எண்ணினர். பேய் அணுகாமல் காக்க மக்கள் இரவு, வேம்பு ஆகிய மரங்களின் தழையை வீட்டு முன்றிலில் செருகி வைத்தனர். யாழிசைத்தல், மையிடல், வெண் சிறுகடுகு சிதறுதல், மணி அடித்தல், காஞ்சிப்பண் பாடுதல் முதலியன செய்தனர். பேய்களைப் போலப் பூதங்களும் போர்க்களத்தில் இறந்த வீரர்களைத் துன்புறுத்தும் என்று கருதினர்.

## VIII. வழிபாடு

குறவர்கள் மழை வேண்டித் தெய்வத்தை வழிபட்டனர். விடாத மழையைத் தடுக்கவும் அவர்கள் தெய்வத்தை வணங்கியுள்ளனர். அவர்கள் உயர்ந்த பலிதூவி வணங்கினர்; நெல், பூ முதலியவற்றைச் சொரிந்து வழிபடுதல் உண்டு என்று தெரியவருகின்றது.

*நெல்லுகுத்துப் பரவுங் கடவுளும் (335)* என்ற தொடரிலிருந்து நாம் இதனை அறியலாம்.

## IV. திருவிழா

விழா, விழவு, சாறு என்பன தமிழில் திருவிழாவைக் குறிக்கும் சொற்கள்.

அரசர்கள் தங்கள் போர் வெற்றிக்குப் பின் வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தல், தம் பிறந்த நாளைக் கொண்டாடுதல் ஆகியவற்றைப் பெரும் விழாவாகவே கொண்டாடினர். மக்கள் சோலைகளில் சென்று மகிழ்வாகச் சிறு சோறு சமைத்து உண்டு மகிழ்வர். இது சிறு சோற்று விழா எனப்படும்.

தெய்வத் திருவிழாக்கள் அடிக்கடி நடக்கும் விழாவில் மக்களுக்கு உணவளிப்பது வழக்கம். அதியமான் பொகுட்டெழினியை ஔவையார் பாடிய பாட்டில் விழவின் றாயினும் படுபதம் பிழையாது" (96) என்ற தொடர் இதற்குச் சான்றாகும்.

***"முந்நீர் விழவு"*** எனப் புறநானூறு 9 ஆம் பாட்டில் குறிக்கப் பெற்றுள்ளது. இது கடல் தெய்வத்திற்குச் செய்த திருவிழாவைக் குறிக்கும் என்பது உரைகாரர் கருத்து. சங்க இலக்கியம் முழுவதையும் ஒப்பிட்டு நோக்கினால் அக்கால மக்கள் தெய்வங்களுக்கு எடுத்த விழாவினைச் சிறப்பாகக் காணலாம்.

அன்பையும், அருளையும் எல்லா உயிர்களிடத்தும் செலுத்துவதே சமயம், தமிழர் 'அன்பு நெறியே சமயநெறி' எனக் கொள்வர்.

சமய உணர்ச்சி அநாதியாகவே தோன்றி இன்று வரையிலும் பயின்று வந்துள்ளது. எல்லாவற்றையும் மறந்து அருள் உணர்வு நிலையில் இறைவனோடு திளைத்து நிற்பதே சமயநிலை.

சங்க கால மக்கள் சமய உணர்வை வெறுஞ்சுவையாகக் கருதாமல் வாழ்க்கை உணர்வாய் உணர்ந்து அருள் வாழ்க்கை வாழ்ந்தனர்.

சமயம் மக்களுக்குத் தொண்டு செய்வதிலும் நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தை வலியுறுத்துவதிலும் நன்னெறி காட்டுகிறது.

வீடுபேறு என்னும் நிலை, சொல்லுக்கும் பொது உணர்வுக்கும் எட்டாத உணர்விறந்த சிறப்பு உணர்வு நிலையாகக் கருதப்படுகிறது.

சமயநிலையாகிய அருள்நிலை ஞானநிலையை ஏற்படுத்துவதால் அது உறுதியாக வீடுபேற்றிற்குத் துணை செய்கிறது.

தொல்காப்பியர், வாழும் நிலப்பகுதியை நான்காகப் பகுத்து அவற்றிற்குத் திருமால், முருகன், இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களைக் குறிப்பிட்டுள்ளார். நிலங்களுக்குரிய கருப்பொருளில் தெய்வத்திற்கே முதன்மை அளித்துள்ளார். கோயிலில் திருஉருவம் வைத்து வழிப்பட்டதும் தெரிய வருகிறது. நடுகல் வழிபாடும் தொல்காப்பியர் காலத்தில் இருந்துள்ளது.

புறநானூற்றுப் புலவர்கள் காலத்திலேயே ஆரியக் கொள்கைகள் தமிழரிடையே கலந்துவிட்டன. அந்தணர்களும் அரசர்களும் வேள்வியைப் பெரிதும் மதித்து உள்ளனர். புறநானூற்றில் பெருந்தெய்வங்களும் சிறு தெய்வங்களும்

குறிக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கும் கோயில் அமைத்து உருவ வழிபாடு செய்து, விழாக் கொண்டாடியுள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1. ஞானசம்பந்தன், அ.ச. உ.த.மா.வி. மலர் *தமிழும் சமயமும்* பக். 1-2
2. மறைமலையடிகள், *சைவசித்தாந்த ஞானபோதம்* பக். 89.
3. திரவியம், கா. (தொ.ஆ) *சிந்தனைச் சுரங்கம்* தொகுதி- 2 (எட்பீனட்பர்க்) பக். 17.
4. திரவியம், கா. (தொ.ஆ) *சிந்தனைச் சுரங்கம்* (கௌதம புத்தர்) பக். 18.
5. திரவியம், கா. (தொ.ஆ) *சிந்தனைச் சுரங்கம்* (சுவாமி விவேகானந்தர்) பக். 18.
6. இளவழகனார், *புறநானூற்றுச் சொற்பொழிவுகள்* சமயம் பக். 248.
7. காமாட்சி, பி. *பெரிய புராணம் காட்டும் சமுதாயநிலை* பக். 6.
8. திருமூலர், *திருமந்திரம்,* பகுதி 1, 1 ஆம் தந்திரம், 1 அன்புடைமை பக். 25.
9. சண்முகம் பிள்ளை, மு. *புறநானூறும் தமிழரும்* சமயம் பக் . 50.
10. குறள்; 754.
11. புறம்; 28 : 15-16
12. இளவழகனார், க.ஆ. *புறநானூற்றுச் சொற்பொழிவுகள்* - சமயம் பக். 274-275.
13. தாயுமானவர், தாயுமான சுவாமிகள் திருப்பாடல்கள், *பராபரக்கண்ணி* பக். 221.
14. இளவழகனார், க.ஆ. *புறநானூற்றுச் சொற்பொழிவுகள்* - சமயம் பக். 246.

15. சாமிநாதையர், உ.வே. புறநானூற்றுப் பதிப்பு, ஆராய்ச்சி முன்னுரை.
16. தொல், பொருள், இளம் நூ.
17. புறம், 28. 15-17.
18. பழனிச்சாம, செ. *புறநானூற்றில் தமிழர் பண்பாடு*, பக். 169.
19. ஞானமூர்த்தி, தா.ஏ. *சங்ககாலச் சமுதாயம்* முத்துக்கோவை. பக். 353.
20. தொல் - பொருள் அகத் இளம் நு. 5.
21. ஞானமூர்த்தி, தா.ஏ. *சங்ககாலச் சமயம்* (கட்டுரை) முத்துக்கோவை பக். 356.
22. தொல் - பொருள் - அகத் இளம் நூ.
23. தொல் - பொருள் - அகத் இளம் நூ. 18 : 1
24. தொல் - பொருள் - அகத் இளம் நூ. 30
25. தொல் - சொல் - சேனா : நூ. 57
26. தொல் - பொருள் - கற்பு இளம் நூ. 51
27. புறம், 297
28. புறம், 15 : 21-22
29. புறம், 224
30. புறம், 166 : 22-23
31. புறம், 53 : 14-17
32. புறம், 263

# 4

## கல்விச் சிந்தனை

*"குழந்தையிடமிருந்தும் சரி, மனிதனிடமிருந்தும் சரி உடல், உள்ளம், ஆன்ம உணர்வு ஆகியவற்றில் சிறந்தவற்றை ஒருங்கே வெளிக்கொணர்வதுதான் கல்வி என்று நான் நம்புகிறேன்"[1] என்பர் அண்ணல் காந்தியடிகள். "வாழ்வின் அணியாகவும் தாழ்வில் துணையாகவும் விளங்குவது கல்வி"[2] என்று கல்வியின் சிறப்புரைப்பர் அரிஸ்டாட்டில்.*

*மனித வாழ்வின் மேம்பாட்டிற்குத் தோன்றாத் துணையாகத் திகழும் சிறப்புமிக்க இக்கல்வி தமிழகத்தில் வளர்ந்த வரலாற்றினை ஆராய்ந்து அறிவது இக்கட்டுரை.*

*இக்கட்டுரை தமிழ் இலக்கியச் சான்றுகளுடன், குறிப்பாகப் புறநானூற்றுச் சான்றுகளை மையமிட்டு அமைந்துள்ளது.*

*இவ்வாய்வுக் கட்டுரை தமிழகக் கல்வி வரலாறு, பள்ளிகள் நூல்கள், ஆசிரியர்-மாணாக்கர், கல்வியின் சிறப்பு, கல்லாமையின் இழிவு, கேள்விக்கல்வி, கல்வியின் பயன்கள் என்று பகுக்கப் பெற்றுள்ளது.*

### I. தமிழ்க் கல்வி

*"நமக்கு முன்னால் படித்து உயர்ந்த நல்லோர் தம் நெறிகளை நாம் அறிந்தால் பயன் பெறலாம்"[3] என்பது ஆன்றோர் அறிவுரை இவ்வுரைக்கு ஏற்பவே தமிழகத்தின் கல்வி வரலாறு இங்கு முன் வைக்கப் பெறுகிறது.*

இந்தியக் கல்வியின் வரலாறு வேத காலத்திலிருந்தே தொடங்குகின்றது. அவ்வேதக் கல்வியை "பிராமணக் கல்வி முறை" எனவும் "குருகுலக் கல்வி முறை" எனவும் கூறுவர்.

"தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மற்றும் நன்னூல் போன்ற நூல்கள் மூலம் அக்காலத்திய தமிழகக் கல்விமுறையைப் பற்றி அறிகிறோம். அக்காலக் கல்வித் திட்டத்தில் எண், எழுத்து என்னும் இருபிரிவுகள் இடம் பெற்றிருந்தன. கணக்காயரின் இல்லம் பள்ளியாகச் செயற்பட்டதையும், தொடக்கக் காலத்தில் கல்வி வாய் மொழியாகக் கற்பிக்கப் பெற்றதையும், பல்கலைக் கழகங்களுக்கு இணையாக முச்சங்கங்கள் இயங்கி வந்ததையும் சோழர் காலத்தில் நாலந்தாப் பல்கலைக் கழகம் போன்று எண்ணாயிரம் என்னும் இடத்தில் கல்வியகம் இருந்ததையும், ஏறத்தாழ இன்றைய கல்வி முறையையொட்டி அவை இருந்தமையையும் அறிகின்றோம்"[4] என்பர்.

## I. 1. உழவுத் தொழில் கற்றல்

எழுத்தறியாமலும் ஏடறியாமலும் இருந்த பழங்கால மனித இனம் இயற்கையோடு நெருங்கிய உறவு கொண்ட முறையிலேயே கல்வியைக் கற்றனர்.

மனித இனம் நெருப்பின் பயனை உணரத் தலைப்படுவதற்கு முன் விலங்குகளைக் கொல்லக் கற்களையே ஆயுதங்களாகப் பயன்படுத்தக் கற்றனது. ஆயுதங்களில் முன்னேற்றம் ஏற்பட்டது போல் வாழ்க்கை முறையிலும் உயர்வு ஏற்பட்டது. "தொடக்க கால மனிதன் உணவின் பொருட்டு இடங்கள் தோறும் அலைந்து திரியும் வேடனாக இருந்தான். பின்பு காட்டில் வாழ்ந்த ஆடு, மாடு, பன்றி முதலியவைகளைப் பழக்கி வளர்த்து அவை கொடுக்கும் பிரயோசனங்களை உண்டு வாழும் இடையனாக இருந்தான். அடுத்தபடியில் ஓரிடத்தில் தங்கிப் பயிரிட்டுத் தானியங்களை விளைவித்து அவற்றை உண்டு வாழும் உழவனானான். பின்பு நாடு நகரங்களும் இராச்சியங்களும் ஏற்பட்டன"[5] என்பார் கூற்றிற் கேற்ப மனிதன் முதல் முதல் கற்றது உழவியல் தான்.

## I. 2. மொழிப் பயன்பாடு

காட்டுமிராண்டியான மனிதன் விலங்குகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எழுப்பிய ஒலி கருத்துடன் கூடியதல்ல. இந்நிலையில் மற்றவர்களின் துணையை நாடியபோது கூடி வாழும் நிலை ஏற்பட்டது. அப்போதுதான் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொள்ள மொழிப் பயன்பாடு அவர்களுக்கு இன்றியமையாததாயிற்று.

இயற்கையை எதிர்த்து வாழ வேண்டிய மனிதனுக்குக் கூரிய அறிவும் சீரிய உணர்வும் மிகுந்த தேவையாயின. எனவே அவன் தனக்கு வேண்டிய அறிவை இயற்கையிடமிருந்தே கற்றான். எனவே மாந்தனின் முதல் ஆசிரியர் இயற்கையே. இதனால் தான் வள்ளுவர்.

***எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை***
***அதிர வருவதோர் நோய்***[6]

என்றார். பின்வருவனவற்றை முன் அறிந்து காத்துக் கொள்ள உதவுவது அறிவேயாகும்.

ஏடும் எழுத்தாணியும் இல்லாக் காலத்தில் தாம் கற்ற கல்வியைத் தம் வழி முறையினரும் பயன் கொள்ள வாய் மொழியாகச் சொல்லையே அவர்கள் மனத்தில் பதியச் செய்தனர். வாய்மொழிக் கல்வி படிப்புக் கல்விக்கு முன்னோடியாகும்.

வாய்மொழியாக மனத்தில் பதிந்த கல்வியே பிற்காலத்தில் மந்திரம் என வழங்கப் பெற்றது. இதனையே தொல்காப்பியர்.

***நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறைமொழிதானே மந்திரம் என்ப***[7]

என்றார்.

கற்பது என்பது ஒன்றைப் பார்த்தும் கற்கலாம், படித்தும் கேட்டும் கற்கலாம், ஒன்றைப் பார்த்துக் கற்க மொழியறிவு தேவையில்லை. படித்தும் கேட்டும் கற்க மொழி இன்றியமையாதது. இக்கல்வியினால்தான் விரைந்த நிலையில் நிறைந்த கல்வி அறிவு பெற இயலும்.

ஒருவர் தாம் கற்ற கல்வியை அடுத்த தலைமுறையினரும் எளிதில் கற்க வரிவடிம் ஒலிவடிவம் கொண்டு நெஞ்சில் படிய வைக்கும் கல்வியே படிப்புக் கல்வி.

தாளின் பயனை அறியார் சுவடிகளின் வாயிலாகக் கற்றனர். அதன் பின்னர் ஆசிரியர்கள் மாணவர்களை மணலிலோ நெல்லிலோ எழுதப் பழக்கினர்.

## I. 3. புலவர்கள் கல்விக் கூடம்

சங்கப் பாடல்களை இயற்றிய புலவர்கள் அனைவரும் புலமை பெற்றவர்களாகவே திகழ்கின்றனர். ஆனால் அவர்கள் எங்கு எவ்வாறு கற்றுத் தேர்ந்தனர் என்பது வியப்பாகவே உள்ளது. இவர்கள் கல்வி கற்ற இடம் முச்சங்கங்கள் என ஒருவாறு அறுதியிடலாம். உயர்நிலையில் கற்று ஆராய்ந்த அறிஞர்கள் நிறைந்த அவைகளாகவே முச்சங்கங்கள் திகழ்ந்தன. இச்சங்கங்கள் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் பரந்து காணப்படுகின்றன.

இவர்கள் இலக்கியப் பயிற்சியுடன் வணிகம், ஓவியம், சிற்பம், மருத்துவம் போன்ற பிற துறைகளிலும் பயிற்சி பெற்றிருந்தனர். சங்கப் புலவர்களின் பெயர் கொண்டே இதனை அறியலாம்.

இவர்கள் படைத் தலைவர்களாகவும், செய்தி அறிவிக்கும் கருமத் தலைவர்களாகவும், ஆசிரியர்களாகவும்,வணிகர்களாகவும், குயவர்களாகவும், மருத்துவர்களாகவும், பாணர்களாகவும் விளங்கியுள்ளனர்.

செய்யுந்தொழிலால் வேறுபட்ட இவர்கள் தமிழால் ஒருங்கிணைந்தனர்.

கல்வி ஏகபோக ஆதிக்கத்திற்கு உட்படாமல் அனைவர்க்கும் கிடைக்கும் வண்ணம் அமையப் பெற்றிருந்தது.

“எக்குலத்தைச் சார்ந்தவர்களும் செல்வர்களும், வறியோரும் மன்னரும் எளிய குடிமக்களும் ஆகிய ஆண்களும் பெண்களும் கல்வியைத் தேடிப் பெற்றனர்”[8] என்று அறிகிறோம். சங்க காலத்தில் கல்வித் தாகம் உடையவர்கள் திருமணம் ஆன பிறகும் மனைவியைப் பிரிந்து படித்துள்ளனர். தக்க அறிஞர்களைத் தேடிச் சென்றும் கல்வி பெற்றுள்ளனர்.

தொல்காப்பியர் பிரிவு வகைகளில் ஒன்றாக ஓதலைக் குறிப்பிடுகின்றார்.

*ஓதல் பகையே தூதிவை பிரிவே*[9] என்பது தொல்காப்பிய நூற்பா.

இப்பிரிவின் உச்சக்கட்டக் காலம் மூன்று ஆண்டுகளே என்பதை,

*வேண்டிய கல்வியாண்டு மூன்றிற வாது*$_{10}$ என்றும் குறிப்பிடுகிறார்.

## I. 4. கல்விச் சிறப்பு

கடைச் சங்க காலத்தை அடுத்துத் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நடைபெற்றது (கி.பி. 3-6). இவர்கள் வேற்றுமொழியினர் வேற்றுச் சமயத்தவர் ஆதலால் தமிழகத்தில புத்த சமண மதங்கள் பரவத் தொடங்கின. இதனால் சங்க காலக் கல்வி நிலையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது, சீரழிவு ஏற்பட்டது.

களப்பிரர் காலத்தில் சீரழிவு ஏற்பட்ட நிலை பல்லவர் காலத்தில் மாற்றம் பெற்று உச்சநிலை பெற்றது என்று கூடக் கூறலாம்.

பல்லவர் காலத்தில் கோயில் நகரம் எனப் புகழ் பெற்ற காஞ்சி நகரில் கல்விக் கோயில்களும் சிறந்து விளங்கின. பலமதத் தலைவர்களின் கொள்கை கோட்பாடுகளை அந் நகரம் பெற்றிருந்தது.

கற்றவர்கள் கேள்வி அறிவு மிக்கவர்கள், இலக்கணப் புலவர்கள், நால்வகைக் கவிஞர்கள் நூல்களை ஆய்வு செய்யும் குழுக்கள் என எங்கும் கல்வி என்ற பேச்சே நிலைபெற்றன. பல்லவர்கள் காலத்தில் வடமொழி ஏற்றம் பெற்றிருந்தது எனினும் நாளடைவில் தமிழையும் ஆட்சி மொழியாகக் கொண்டனர்.

பல்லவர் காலத்தை அடுத்த சோழர் காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எனப் போற்றப்பெற்றது. இக்காலக் கட்டத்தில் காப்பியங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள், சைவ சித்தாந்த நூல்கள் பல தோன்றின.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை தமிழகக் கல்வியில் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் பல நிகழ்ந்துள்ளன. இலக்கண உரையாசிரியர்கள் பலர் தோன்றித் தமிழை வளப்படுத்தியுள்ளனர். கி.பி. 15 இல் சைவ சமய இலக்கியம் பெரு வளர்ச்சியுற்றது. சோதிடம், மருத்துவம் பற்றிய நூல்களும் எழுந்தன.

தமிழகத்தில் சோழர் காலத்தில் மடங்கள் பல ஏற்படுத்தப் பெற்று அவற்றின் வாயிலாகச் சமயக் கல்வி வளர்க்கப் பெற்றது. விக்கிரமசிங்கன் காலத்தில் திருவாவடுதுறை மடத்தில் பிராமணர் களுக்கும் தவசிகளுக்கும் உணவு வழங்கி இலக்கண இலக்கியக் கல்வி அளிக்கப் பெற்றுள்ளது. தருமபுரம், திருப்பனந்தாள் மடங்கள் தமிழ் நூல்கள் வெளியிட்டும், தமிழ்க் கல்வி பயிற்றுவித்தும் தமிழ்த் தொண்டாற்றியுள்ளன.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் தமிழகத்தில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டது. *2.2.1835* இல் வெளியிட்ட மெக்காலே குறிப்புகளின்படி மேல்நாட்டு அறிவு ஆங்கில மொழிவாயிலாக இந்தியர்களிடையே பரப்பப் பெற்றது.

விடுதலைக்குப் பின்னர் கல்வித்துறையில் பெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது. குழந்தைக் கல்வி (Nursery Education) முதியோர் கல்வி (Adult Education) மக்கள் தொகைக் கல்வி (Population Education) பெண்கல்வி (Woman Education) என்று தனித்தனிப் பிரிவுகளில் கல்வி வளம் பெற்று வருகிறது. முறையான பல்கலைக் கழகங்களுடன் தொலைதூரக் கல்வி இயக்ககம் (Directorate of Distance Education) திறந்த வெளிப் பல்கலைக் கழகம் (Open University) எனப்பல அமைப்புகள் ஏற்பட்டுக் கல்வி அனைவருக்கும் பரவலாக்கப் பெற்றுள்ளது.

### II. பள்ளிகள் - நூல்கள்

தமிழகத்தில் காலந்தோறும் நிலவிய கல்விச் சூழல் பொது நோக்கில் சற்று விரித்துக் கூறப்பட்டது. இனி வரும் உட்பிரிவுகள் ஆய்வுத் தலைப்பின் எல்லைக் கேற்பவே எடுத்துக் கூறப்பெறும்.

இன்றைய நிலையில் காணப்பெறும் பள்ளிக் கூடங்கள் போன்ற ஒருமையான அமைப்பு அந்நாளில் இல்லை எனலாம்.

### II. 1. பள்ளி - சொல்லாய்வு

தொல்காப்பியத்தின் "***சொல்லிய பள்ளி***" என்ற தொடரில் பள்ளி என்பது இடம் என்ற பொருளில் அமைந்துள்ளது.

***..... தச்சன்***
***வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்***
***சினமால் பொருத களத்து***[12]

என்ற பொய்கையார். பாடலிலும் பள்ளி "இடம்" என்ற பொருளிலேயே எடுத்தாளப் பெற்றுள்ளது.

திருவள்ளுவர்,

***கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்***
***குழாஅத்துப் பேதை புகல்*** [13]

என்ற குறட்பாவில் பள்ளி - தவப் பள்ளி (படுக்கை) என்ற பொருளில் கையாண்டு உள்ளார்.

இவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது அந்நாளில் பள்ளி - பள்ளிக்கூடம் என்னும் பொருளில் வழங்கப் பெறவில்லை. தொடக்கக் காலத்தில் குழந்தைகளுக்குப் பெற்றோர்களால் இல்லச் சூழ்நிலைக்கல்வியே வழங்கப் பெற்றது. காலப் போக்கிலேயே பெற்றோர்களால் அளிக்கப் பெறும் அறிவினும் ஆசிரியரால் அளிக்கப் பெறும் அறிவே சிறந்ததெனவும், குருவிலா வித்தை பாழாகும் எனவும் உணர்ந்திருக்கக் கூடும்.

### II. 2. மன்றங்கள் - பள்ளிகள்

சங்க காலத்தில் கல்வி நிறுவனங்கள் பள்ளிகள் என்னும் பெயரில் எந்த இலக்கியத்திலும் குறிக்கப் பெறவில்லை. அதற்கு இணையாக "மன்றம்" என்ற பெயரில் இயங்கி வந்தன என்பதை

***அன்னாய் யிவனோ ரிளமா ணாக்கன்***
***தன்னூர் மன்றத் தென்னன், கொல்லோ***
***விருந்தின் ஊரினும் பெருஞ்செம் மலனே*** [14]

என்று கூறுமிடத்து மாணவர்கள் மன்றத்திடை இருந்து கல்வி பயின்றதனைக் குறிப்பால் அறியலாம்.

சங்க காலத்தில் ஊர்ப் பொது மன்றங்களில் தான் அனைத்தும் நடைபெற்றன. பொது மன்றங்களில் பலா, வேம்பு முதலிய மரங்களின் நிழலில் பாணர், பொருநர் முதலிய இரவலர்கள் வந்து தங்குதலும், அங்குள்ள மரங்களில் தம் இசைக் கருவிகளைத் தொங்கவிடுதலும் மரபாகும். இச்செய்தியினை

***மன்றப் பலவின் மாச்சினை மந்தி***
***இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்*** [15]

***மன்றப் பலவின் மால்வரை பொருந்தியென்*** [16]

***மன்ற வேம்பின் மாச்சினை ஒண்டளிர்*** [17]

***மன்ற வேம்பின் ஒண்குழை மலைந்து*** [18]

***மன்ற வேம்பின் ஒண் பூ வுறைப்ப*** [19]

*என்னும் புறநானூற்று அடிகள் மூலம் அறியலாம். இங்ஙனம் ஊர்ப்பொது மன்றங்கள் பலர் கூடி வாதிடவும் கல்வி கற்கவும் பயன்படுத்தப் பெற்றிருந்தன என்பதை ஊகிக்க முடிகின்றது.*

## II. 3. திண்ணைப் பள்ளிகள்

*சங்க காலத்தில் ஆசிரியர்களின் இல்லத் திண்ணைகளே பள்ளிகளாகத் திகழ்ந்திருக்கலாம், ஆனால் அப்பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் பயின்றார்கள் என்பது தெரியவில்லை.*

*தொன்மைக் காலத்தில் முனிவர்களே ஆசிரியத் தொண்டாற்றியுள்ளனர். அரச குடும்பங்களில் கல்வி கற்பித்த முனிவர் அரசகுரு என அழைக்கப்படுகின்றார். அவர் அரசரை வழி நடத்துபவராகவும் திகழ்ந்துள்ளார். முனிவரிடம் கல்வி கற்ற ஒருவன் மணமான நிலையிலும் பிரிந்து சென்று பிற இடங்களில் தகுதி மிக்காரை அணுகி அறிவை மேம்படுத்திக் கொண்டனர் என்று கருதலாம். "ஆசிரியர்களை நாடிச் சென்ற நிலையில் அவர்கள் இல்லமே பள்ளிகளாகத் திகழ்ந்திருக்க முடியும் எனலாம். இல்லம் இல்லையேல் மன்றம் எனும் நிலையில்தான் அக்காலத்தில் பள்ளிகள் இயங்கி வந்தன"* [20] *என்பர்.*

## II. 4. குருகுலக் கல்வி

*குருகுலக் கல்வியும் தமிழகத்தில் இருந்துள்ளது இக்காலத்திலும் பள்ளிகள் காணப் பெறவில்லை. குருகுலப் பள்ளிகள் அமைதியான இயற்கைச் சூழலில், மர நிழலில், படிப்பு ஆர்வத்தைத் தூண்டும் நிலையில் அமைந்திருந்தன.*

*இன்று வழங்கப் பெறும் பள்ளிக்கூடம் எனும் சொல் சமணர் களிடமிருந்தே வரப்பெற்றிருக்கலாம் எனக் கருதப் பெறுகிறது. அவர்கள் தங்கள் ஆசிரம பள்ளிகளில் ஓய்வெடுத்தவாறே மக்களுக்கு அறிவுரை வழங்கினர். இக்காரணத்தால் அவர்கள் தங்கியிருந்த இடம் சமண அறவோர் ஆசிரமப் பள்ளி எனப் பெயராகிப் பின்னர் கல்விக் கூடங்களுக்கு வழங்கப் பெற்றது என ஆன்றோர் கருதுகின்றனர்.*

பள்ளி என்பது பள்ளிக் கூடங்களையும் சமண மடங்களையும் பொதுவாகக் குறிக்கும். முகமதியர் இறைவழிபாடு செய்யும் இடம் பள்ளி வாசல் என்று அழைக்கப்பெறுகிறது.

முதன் முதலாகப் பள்ளி என்னும் சொல் மாணவர் பயிலும் பள்ளி என்னும் பொருளில் திரிகடுகத்தில் தான் வழங்கப் பெறுகிறது.

இதனைப்

***..... பள்ளி இம்மூன்றும்***
***குறுகார் அறிவுடையார்*** [21]

என நல்லாதனார் காட்டுவதன் வழி அறியலாம்.

திரிகடுகம் நல்லாதனார் கருத்தை நன்குணர்ந்த பாரதியார், வீதிகள் தோறும் பள்ளிகள் அமைக்க வேண்டும் என விழைகிறார். தொடக்கக் கல்வியில் பாரதியார் மிகுந்த நாட்டம் கொண்டிருந்தார். நாட்டிலே பல பள்ளிகள் உருவாக வேண்டும் என விழைந்து

***வீடுதோறும் கலையின் விளக்கம்***
***வீதிதோறும் இரண்டொரு பள்ளி***
***நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்***
***நகர்களெங்கும் பல பல பள்ளி*** [22]

எனப் பாடியுள்ளார்.

## II. 5. நூல்கள்

தொல்காப்பியரும் நன்னூலாரும் நூல்கள் குறித்துப் பல்வகைச் செய்திகளைக் கூறியுள்ளனர்.

“பஞ்சைத் தன்கைகளால் இழையாக்கி நூற்கின்ற பெண்ணைப் போலக் கற்றறிந்த புலவன் தன் அறிவின் திறன் கொண்டு செய்யுளால் நூலை ஆககுதலால் நூல் எனப் பெயராயிற்று” [23] என்பர் நன்னூலார்.

நூலிற்குப் பெயரிடும் முறையையும் அவர் கூறியுள்ளார். முதல் நூலாலும், நூலைச் செய்தவன் பெயராலும், நூற் பொருளாலும், நூலில் மிகுதியாகப் பேசப் பெறும் பொருளாலும், நூலிற்குப் பொருள் உதவி ஈந்தார் பெயராலும், நூலின் குணத்தாலும், இடுகுறி, காரணங்களாலும் நூலிற்குப் பெயரிடப் பெறும்” [24] என்பர் பவணந்தியார்.

மாந்தர்களின் மனக்கோட்டத்தை நீக்குவது நூலேயாகும். ஒரு நல்ல நூலுக்கு மரபு மிகவும் இன்றியமையாதது. மரபு மாறாமல் உரைக்கப் பெறும் நூல் முதல் நூல், வழி நூல் என இருவகைப்படும், இதனை

***மரபுநிலை திரியா மாட்சிய வாகி***
***உரைபடு நூல் தாம் இருவகை நிலைய***
***முதலும் வழியுமென நுதலிய நெறியின***[25]

என்பர் தொல்காப்பியர், இவையேயன்றி "சார்பு நூல்" என்று ஒரு வகை கூறி, நன்னூலார் நூலை மூன்றாக வகைப்படுத்துவார்.

இறையனார் அகப்பொருள் ஆசிரியர்

***தன் கோள் நிறீஇப் பிறன் கோள் மறுப்ப***
***தெதிர் நூலென்ப ஒரு சா ராரே***[26]

என நூல் வகையை மேலும் பெருக்குகிறார்.

தொல்காப்பியர் கருத்துப்படி அறிவுடைய ஆசிரியனால் உண்டாக்கப் பெறுவதே முதல் நூலாகும். முதல் நூலை வழியொற்றிச் செய்யப் பெறுவது வழிநூலாகும்.

***வினையின் நீங்கி விளங்கிய அறிவின்***
***முனைவன் கண்டது முதனூலாகும்***[27]
***வழியெனப் படுவது அதன் வழித்தாகும்***[28]

தொல்காப்பியர் இவ்வாறு கூற, நன்னூலார் முந்து நூலில் கூறப்பெற்ற செய்திகளைத் தழுவி, வேறு நூலைத் தான் செய்வதற்கான காரணத்தையும் வேறுபாடுகளையும் உடன் சொல்லி, அவ்வேறுபாடுகளை அறிஞர்கள் ஏற்குமாறு செய்வதே வழிநூல் என்பர்.

சார்பு நூலைப் பற்றித் தொல்காப்பியர் கூறா திருப்பப் பவணந்தியார் கூறுகிறார்.

பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் கொண்டு காண்டிகை யானும் பொருள் மேற்கூறிய வகையுடைத்தாகிப் பத்துக் குற்றமுமின்றி, முப்பத்திரண்டு உத்திகளோடு அமைக்கப் பெறுவதே சிறப்பமை நூலாகும்[29] என்பர் தொல்காப்பியர்.

நூலிற்கு மரபியலில் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் செய்யுளியலிலும்

***நூலெனப்படுவது நுவலுங் காலை***
***முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்***
***தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி***
***உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து***
***நுண்ணிதின் விளக்கம் அதுவதன் பண்பே***[30]

என விளக்குவர்.

தொல்காப்பியர் கூறிய இலக்கணங்களுடன் உறுதிப் பொருள் நான்கினோடு எழுவகை மதம், பத்தழகுகள் ஆகியவற்றைச் சேர்த்து நூல் அமைய வேண்டும்[31] என்பர்.

மேற்கூறிய இலக்கணங்கள் அமையப் பெற்ற நூல் சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் என்ற நான்கு வகைகளுள் ஒன்றாய் அமைய வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

## III. ஆசிரியர் - மாணாக்கர்

மன்றத்தின் கண்ணும் இல்லத்தின் கண்ணும் கல்வி கற்பித்தவர்கள் அந்தணர்களாவே இருந்துள்ளனர். ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன அந்தணர்க்குரிய அறுவகைத் தொழிலாகும் என்பதை

***அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்***
***ஐவகைமரபின் அரசர் பக்கமும்***
***இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்***[32]

எனத் தொல்காப்பியர் கூறுவதினின்று ஓதுவித்தல் தொழிலில் அந்தணரே பண்டிருந்தமை புலனாம்.

குலத்தாலும், ஒழுக்கத்தாலும் நிறைந்து சிறந்து விளங்கும் அந்தணரைத் தம் குரவரைப் போல எண்ணி ஒழுக வேண்டும் என்பதை

***வரன் முறையான் வந்தநான் மறையாளரை***
***மேன் முறைப்பால் தங்குரவரைப் போல் ஒழுகல்***
***நூல் முறையாளர் துணிவு***[33]

எனப் பெருவாயின் முள்ளியார் எடுத்துக் கூறுவார்.

பண்டு அறிவு சான்ற குருவினைத் தேடி நாடிச் சென்று மாணவர்கள் கல்வி கற்றனர். தொல்காப்பியர் அகத்தியரிடத்துக் கல்வி கற்றார் என்பதைத் "தொல்காப்பியர் உரையாலும் சீகண்டியார் உரையாலும் அறியலாம்"[34] என்பர்.

வள்ளுவர் காலத்தும் ஆசிரியர்கள் செயற்பட்டனர் என்பதற்குத் திருவள்ளுவர் வகுத்த "கேள்வி" என்னும் அதிகாரமே சான்றாகும். கேள்விக்கு விளக்கம் தந்த பரிமேலழகர் *கேட்கப்படும் நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்*[35] என விளக்குவர்.

ஆசிரியர் நிலையினின்று கற்றதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும் பெருமை உடையவர்கள் ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை *ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்*[36] என்று கூறுவதன் வழி அறியலாம். இவ்வாறு கூறும் வள்ளுவர் ஆசிரியர் இலக்கணம் பற்றியோ குண இயல்புகள் குறித்தோ தனித்து எதனையும் கூறவில்லை.

### III. 1. சங்கப் புலவர்கள்

சங்க காலப் புலவர்கள் பலர் ஆசிரியர்களாக விளங்கியுள்ளனர் என்பதை ஆசிரியன் பெருங்கண்ணன், குலபதி நக்கண்ணனார், மதுரை ஆசிரியர் கோடங் கொற்றனார், மதுரை இளம்பாலாசிரியன் முதலிய பெயர்களைக் கொண்டே அறியலாம். புறநானூற்றில் ***"அடைநெடுங்கல்வி யார்"***[37] என்னும் புலவர் ஒருவர் பெயர் காணப்படுகிறது. இப்பெயர் கல்வியால் பெற்ற சிறப்புப் பெயராகும்.

### III. 2. ஆசிரியர் மரியாதை

ஆசிரியர்களை அக்காலச் சமுதாயம் நன்கு மதித்துப் போற்றியது. கணக்காயர்களும் மக்கள் மதிக்க வாழ்ந்திருந்தனர் என்பதை அவர்களின் பெயர்களைக் கொண்டே அறிய முடியும். நக்கீரரின் தந்தை ஒரு கணக்காயராக விளங்கியதோடு அவர் இயற்பெயர் கூறாமல் *மதுரைக் கணக்காயனார்*[38] என்றே அழைக்கும் அளவிற்குப் பெயரோடும் புகழோடும் வாழ்ந்திருக்கிறார். ஆசிரியரைப் பெயரிட்டு அழைக்காமையை ஒழுக்க நெறியாகவே கருதி வந்துள்ளனர்.

தொல்காப்பியர் ஆசிரியர்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லை எனினும் உரை ஆசிரியராகிய நச்சினார்க்கினியர் நூல் மரபில் ஆசிரியர் ஆசிரியராகார் பண்புகளை எடுத்துக் கூறியுள்ளார்.

நிலத்தின் இயல்பும், மலையின் மாண்பும்,

நிறைகோல் தன்மையும், மலரின் மென்மையும்

நல்லாசிரியன் பெற்றிருக்க வேண்டும் என்பதை

**மலை, நிலம், பூவே துலாக் கோலென்றின்னர்**
**உலைவில் உணர்வுடையோர்** [39]

என்பதன் வழி எடுத்துக்காட்டுதல் எண்ணத் தக்கது.

இவருக்குப் பின் வந்த நன்னூல் ஆசிரியரும் நல்லாசிரியர் இலக்கணத்தை மொழிந்துள்ளார். ஆசிரியருக்குத் தற்பெருமை சிறிதும் கூடாது. சினமுடையோர், சூதாடுவோர், குடிப்பழக்கம் உடையோர் ஆசிரியராகார்.

### III. 3. ஆசிரியர் ஊதியம்

ஊதியமில்லாக் கல்வி உருப்படாது என்பது பழமொழி இலவசக் கல்வி நடைபெறும் இந்நாள் போலில்லாது அந்நாளில் ஆசிரியருக்குப் பெரும் பொருள் கொடுத்தும், வேண்டிய உதவிகளைச் செய்தும் அவர் சினங் கொள்ளாத வகையில் இரு என இருந்து, சொல்லெனச் சொல்லி அடக்கத்துடன் கல்வி கற்றனர் என்பதை

**உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே** [40]

என்னும் புறநானூற்றுத் தொடர்களால் அறியலாம்.

### III. 4. மாணாக்கர்

மாண்பினை ஆக்குபவர்கள் மாணாக்கர் எனப்பட்டனர். மாணாக்கர்களுக்கெனச் சில இலக்கணங்கள் முன்னோரால் வகுக்கப்பட்டுள்ளன.

**தன்மகன் ஆசான் மகனே மன்மகன்**
**பொருள்நனி கொடுப்போன் வழிபடுவோனே**
**உரைகோளாள னோடிவரென மொழிப** [41]

என வகுத்திருப்பதிலிருந்து மாணாக்கர் தகுதிகளை அறிந்து கொள்ளலாம். இதனையே பவணந்தியாரும் குறிப்பிட்டுள்ளார்.[42]

### III. 5. மாணாக்கரின் வகைகள்

நிலையால் அறுவகைப்படுத்திய மாணாக்கர்களைத் தரத்தால் முதல், இடை, கடை மாணாக்கர்கள் என வகைப்படுத்தியுள்ளனர்.

***அன்னமாவே மண்ணொடு கிளியே***
***இல்லிக் குடமா டெருமை நெய்யரி***
***அன்னர் தலையிடை கடை மாணாக்கர்***[43]

என்பர் நன்னூலார்

***அன்னங் கிளியே நன்னிறம் நெய்யரி***
***யானை யானே றென்றிவை போலக்***
***கூறிக் கொள்ப குணமான் டோரே***[44]

எனத் தொல்காப்பியர் பொதுப்பாயிரம் சுட்டும். ஆசிரியர் கற்பித்ததை அலசி ஆராய்ந்து நல்லவனவற்றை எடுத்துக் கொள்பவர் தலை மாணாக்கர்கள்; ஆசிரியர் கற்பித்ததன்றி வேறு ஒரு பொருளையும் சொல்லமாட்டர் இடைமாணாக்கர். கற்பித்ததை மறப்பவர் கடைமாணாக்கர்.

மாணாக்கர் ஆகாதோர் இலக்கணத்தையும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

நன்னூலார், கள்ளுண்டுகளிப்பவன், சோம்பேறி, அகந்தையுடையவன், காமமுடையவன், திருடன், நோயாளன், அறிவில்லாதவன், மாறுபாடுடையவன், சினமுடையவன், மிகு தூக்கமுடையவன், மதிநுட்பம் இல்லாதவன், நூற்களின் அளவு கண்டு அஞ்சுபவன், அஞ்சுவதற்கு அஞ்சாதவன், பாவம் செய்பவன், பொய் கூறுபவன் ஆகிய குற்றம் உடையோர்க்கும் பாடஞ்சொல்லலாகாது[45] என்பர்.

### IV. கல்வியின் சிறப்பு

கல்வியின் சிறப்புக் குறித்துத் தமிழ் நூல்கள் பரக்கப் பேசுகின்றன.

***எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு***[46]

என்பர் வள்ளுவர்.

***எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்***[47]

*என்பர் ஔவையார்.*

***எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்***
***மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் - மொழித்திறத்தின்***
***முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து***
***கட்டறுத்து வீடு பெறும்***

*என்பது பழம் பாடல்.*

### IV. 1. கற்றோர்க்கு எங்கும் சிறப்பு

*கற்றவர்க்குத் தம் நாடும் ஊருமேயன்றி அனைத்து நாடுகளும், ஊர்களும் சொந்தமானவையாகும். அதனால் ஒருவன் இறக்கும் வரையில் கல்லாமல் வீண்காலம் கழிக்கக் கூடாது என்பர் வள்ளுவர்.*

***யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன்***
***சாந்துணையும் கல்லாத வாறு***[48]

*கற்றவர்க்கு,*

***யாதுமூரே யாவரும் கேளிர்***[49]

*என விளக்குவர் கணியன் பூங்குன்றனார்.*

***மரங்கொஃறச்சன் கைவல் சிறாஅர்***
***மழுவுடைக் காட்டகத் தற்றே***
***எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"***[50]

*என்பர் ஔவையார்.*

***ஆற்றவுங் கற்றார் அறிவுடையார்***[51]

*என்பர் முன்றுறையரையனார்.*

### IV. 2. கல்வி எழுமைக்கும் ஏமாப்பு

*கற்ற கல்வியே ஒருவனுக்குச் சிறந்த பாதுகாப்பு; ஒரு பிறவிக்கு மட்டுமல்ல எழுபிறவிக்கும் அஃது ஏமமாகும். இதனை,*

***ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்***
***கெழுமையும் ஏமாப் புடைத்து***[52]

*என்பர் வள்ளுவர்.*

எழு பிறவியினும் தேடி வரும் கல்வியையே மக்கட்குத் தேடி வைக்க வேண்டும். தேடி வைக்க வேண்டிய செல்வம் கல்விச் செல்வமே. பிற செல்வம் அழிந்து விடும். கல்வி அழியாது.

***வைப்புழிக் கோட்படா வாய்த் தீயிற் கேடில்லை***
***மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்***
***எச்சம் என வொருவன் மக்கட்குச் செய்வன***
***விச்சை மற்றல்ல பிற*** [53]

எனச் சமண முனிவர்கள் கூறுவர்.

## IV. 3. அரசரும் ஒப்பாகார்

புவியாளும் மன்னவனினும் கவியாளும் புலவனே சிறப்புடையவன் என்பது ஔவையார் வாக்கு. அணிகலன்களைப் பூட்டி அழகு பெறும் அவயங்கள் அனைத்தும் கண்களுக்கு ஈடாகாத் தன்மை போல ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளும் அரசர்கள் அவற்றை அணியாத கல்வியணியுடன் விளங்கும் அறிஞர்களுக்கு ஒப்பாகமாட்டார். இதனை

***பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி***
***மன்னும் அறிஞரைத் தாம் மற்றொவ்வார் - மின்னுமணி***
***பூணும் பிறவுறுப்புப் பொன்னே அது புனையாக்***
***காணுங்கண் ஒன்றுமோ காண்*** [54]

எனச் சிவப்பிரகாசர் அறிவுறுத்துவர்.

## IV. 4. பெற்றோர் பெருமை

குழந்தைகளைப் பெற்றெடுத்த அன்னை தான் பெற்ற பிள்ளைகள் அனைவரிடமும் பாசமிக்கவள்தான். இதனாலன்றோ தாயன்பு தலைசிறந்த அன்பாக மதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பாசம் மிக்க தாயும், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் மகனையே பெரிதும் விரும்புவாள். இதனை,

***பிறப்போரன்ன வுடன் வயிற்றுள்ளும்***
***சிறப்பின் பாலால் தாயுமனந் திரியும்*** [55]

என்று புறநானூற்றில் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூற்றின் வழி அறியலாம்.

***ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்***
***சான்றோன் எனக்கேட்ட தாய்*** [56]

என்ற திருவள்ளுவர் வாக்கும் இக்கூற்றை அணி செய்கின்றது.

பெற்றோரைப் பெருமைப்படுத்தும் நிலை கல்விக்குண்டு. எனவே பிச்சை எடுக்கும் இழிநிலையிலுங்கூட ஒருவன் கற்க வேண்டும் என்கிறார். அதிவீரராமபாண்டியர்.

***கற்கை நன்றே கற்கை நன்றே***
***பிச்சை புகினும் கற்கை நன்றே*** [57]

என்றார்.

## IV. 5. கொடுக்கக் குறையாத செல்வம்

பொருட் செல்வம் பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்விச் செல்வத்தை வெள்ளம் அழிக்க இயலாது; நெருப்பினால் வேகாது; எடுத்துக் கொடுத்தாலும் குறையாது; திருடர்களால் களவாட முடியாது; மம்மர் அறுக்கும் மருந்தாகும் சிறப்புடையது கல்வி [58] என்பது விவேக சிந்தாமணி தரும் செய்தி.

கல்வியின் சிறப்பு சொல்லச் சொல்ல விரியும், கற்றவரே கண்ணுடையவர் என்றும், கல்லாதவர் முகத்திரண்டு புண்ணுடையார் என்றும், கல்வியைக் கண்ணைப் போலக் கருதுதல் வேண்டும் என்றும், கற்றவரே தெய்வம் என்றும் இலக்கியங்கள் பலபடப் பாராட்டுகின்றன.

ஒரு நாட்டின் வளம் நிலவளத்தால் மட்டும் அமைவதன்று, கற்றறிந்த சான்றோராலே நாடு மதிக்கப்படுகின்றது. இதனை,

***நாடா கொன்றோ காடா கொன்றோ***
***அவலா கொன்றோ மிசையா கொன்றோ***
***எவ்வழி நல்லவ ராடவர்***
***அவ்வழி நல்லை வாழிய நிலனே*** [59]

என்ற ஔவையார் வாக்கு வலியுறுத்துகின்றது.

## IV. 6. கல்லார் இழிவு

கற்றார் பெருமை அறியக் கல்லார் இழிவும் அறிதல் வேண்டும்.

தமிழ் மக்கள் கற்றாரைப் பெருமைப்படுத்தியுள்ளதுடன் கல்லாதாரை இகழ்ந்து ஒதுக்கியுமுள்ளனர்.

நூல்கள் பல கற்றவரை மாந்தர்களாகவும் கல்லாதவரை விலங்குகளாகவும கருதுவர் திருவள்ளுவர்.

***விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்***
***கற்றாரோடேனை யவர்*** [60]

இவரினும் ஒருபடி மேலே சென்று,

***வித்தையில்லா மக்கள் விலங்கினும் கடையராவர்***
***புத்தியில்லாத மாந்தர் புல்லினும் புல்லராவர்*** [61]

என்பர் கா. நமச்சிவாய முதலியார்.

கல்வி அறிவில்லார் மாடுகள் மேய்கின்ற புல்லைவிடப் புல்லராவர் என்பர் விளம்பிநாகனார்.

***கல்லாத மூடரைக் காணவும் ஆகாது***
***கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று*** [62]

என்று அறிவுறுத்துவர் திருமூலர்.

துன்பமுற்றாலும் அறிவிலார் செல்வத்தை நினையாது நல்லறி வினையுடையாரது வறுமையைப் பெரிதாக நினைப்போம் என்கிறார் எறிச்சலூரவர் மாடலன் மதுரைக் குமரனார்.

***மிகப் பேரெவ்வ முறினு மெனைத்தும்***
***உணர்ச்சி யில்லோ ருடைமை யுள்ளேம்***
***நல்லறிவுடை யோர் நல்குர***
***வுள்ளுதும் பெருமயா முவந்து நனிபெரிதே*** [63]

**V. கேள்விக் கல்வி**

***கற்றிலன் ஆயினும் கேட்க, அஃது ஒருவற்கு***
***ஒற்கத்தின் ஊற்றாம் துணை*** [64]

என்பர் வள்ளுவர். ஒருவன் வாழ்வியலுக்கேற்ற நூல்களைப் படிக்கவில்லை என்றாலும் அவற்றைக் கற்றறிந்த பெரியவர்களிடம் கேட்க வேண்டும். அக்கேள்விச் செல்வம் வாழ்வில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல் போல் துணையாகும் என்பது இக்குறள் உணர்த்தும் பொருள்.

கேள்வி கல்வியுடன் தொடர்புடையது. படித்தறிவது கல்வி; கேட்டறிவது கேள்வி. கல்வி அறிவு இல்லையாயினும் பிறர் அறிவுரைகளைக் கேட்பானாயின் அவன் அறிவுடையவனாகவே விளங்குவான். கேள்வியறிவுடையோர் படிக்காத மேதை எனப் போற்றப் பெறுகின்றனர்.

கற்றலின் தொடக்கமே கேள்விதான். வாய்மொழிப் பயிற்சியால் மொழியறிவை வளர்த்துப் பின் படிப்படியாகப் படிக்கும் ஆற்றலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

கேள்விக் கல்வி என்பது கல்விக்கு முன்னர்த் தொடக்க நிலையிலேயே தொடங்கப் பெறல் வேண்டும். குறைந்த கால அளவில் நிறைந்த செய்திகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பாக இருப்பது கேள்விக் கல்வியே.

நாள் முழுவதும் படிப்பதால் ஒருவருக்கு வெறுப்பு ஏற்படும். அதனால் பிறர் கூறக்கேட்பதே இனிமை பயக்கும்$_{65}$ என்பர் முன்றுரை அரையனார்.

### V. 1. கேள்வியின் சிறப்பு

ஒருவனுக்குச் சிறப்பான செல்வம் கேள்வியால் வரும் செல்வமாகும். அச்செல்வம் பிற செல்வங்கள் அனைத்திலும் தலைசிறந்த ஒன்றாகும்$_{66}$ என்பர் வள்ளுவர்.

கேள்வியைச் செவி உணவாகக் கருதும் வள்ளுவர்

***செவிக் குணவில்லாத போழ்து சிறிது***
***வயிற்றுக்கும் ஈயப் படும்***$_{67}$ என்றார்.

### V. 2. கேள்வியால் வரும் நன்மை

ஒருவன் சிறிதளவாயினும் கற்றவரிடமிருந்து கேட்க வேண்டும். அக்கேள்வி அறிவு நிறைந்த பெருமையைத் தரும் என்பது வள்ளுவர் கருத்து.

***பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்***
***நால் வேதநெறி திரியினும்***
***திரியாச் சுற்றம்***$_{68}$

என முரஞ்சியூர் முடிநாகராயர் இக்கருத்திற்கு வலிமை சேர்க்கிறார்.

சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகராயர் வாழ்த்துகிறார். பால் தன் இனிமை ஒழிந்து புளிப்பினும், ஞாயிறு இருளினும், நான்கு வேதத்தின் ஒழுக்கம் வேறுபடினும் சூழ்ச்சியையுடைய மந்திரிச் சுற்றத்தோடு நடுக்கமின்றி நிற்பாயாக என வாழ்த்துகிறார். அமைச்சுச் சுற்றம் என்பதனால் அவர்கள் கேள்விச் செல்வம் இன்றியமையாது நன்மை பயக்கும் என்பதாம்.

## V. 3. கேளாவழிக் குற்றம்

கேள்வி அறிவு இல்லாதோர் வீழ்ந்தால் என்ன? வாழ்ந்தால் என்ன பயன் என்பதை,

***செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்***
***அவியினும் வாழினும் என்*** $_{69}$

எனக் கேள்வி தொடுப்பார் வள்ளுவர். கேள்வியால் துளைக்கப்படாத செவியைச் செவிட்டுச் செவி என்றே வசைபாடுகிறார்.

## V. 4. கேள்வியின் வகைப்பாடு

பரஞ்சோதி முனிவர் கேள்விகளை நான்கு வகைப்படுத்துகிறார். அதை,

***நன்று தீதுணர் நூல்வகைக் கேள்வியோர்*** $_{70}$

கேள்வியானது மாசறு கேள்வி, வயங்கு கேள்வி உணர்ந்த கேள்வி, அற்றமில் கேள்வி, அறமலி கேள்வி, ஓங்கிய கேள்வி, வெறுத்த கேள்வி எனப் பல்வேறு அடைமொழி பெற்றுள்ளது.

***மறவுரை நீத்த மாசறு கேள்வி***
***அறவுரை கேட்டாங் காரிடை கழிந்து*** $_{71}$

என இளங்கோவடிகள் மாசறு கேள்வியை எடுத்துக் காட்டுகிறார். அறந்தலைப்படுதற்கும், அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச் சொல் எனும் நான்கினையும் நீக்கி மனமாசு அறுதற்கும் காரணமாக இருந்தது நூற் கேள்வி என்பதும் அறிய முடிகிறது.

நல்ல பல நூல்களைக் கேட்டு அறிவு நிரம்பிய ஒருவனை

***..... நன்பல***
***கேள்வி முற்றிய வேள்வியந்தணர்*** 72

எனப் புறநானூறு காட்டும்.

செந்நாப் புலவராகிய கபிலர் செறிவுமிக்க கேள்வியும், விளங்கிய புகழும் மிக்கவர் என்பதை,

***செறுத்த செய்யுட்செய் செந்நாவின்***
***வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்*** 73

எனப் பொருந்தில் இளங்கீரனார் குறிப்பிடுகிறார்.

## VI. கல்வியின் பயன்

கல்வியின் பயன்களை இலக்கியங்கள் தெளிவாகச் சுட்டுகின்றன. சங்க காலத்திற்குப் பின்னர்க் கல்வி என்பது சமயக் கல்வியாகத் தான் இருந்துள்ளது. சமயக் கல்வி சமய ஒழுங்கு முறைப்படி செயலாற்றுதலையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்தியது.

சமுதாயத்தில் மண்டிக் கிடக்கும் அறியாமை இருளை அகற்றி நல்வழிப்படுத்தலே கல்வியின் தலையாய பயனாகும். பிறர் நலம் நாடும் பண்பினைக் கற்ற தன் தலையாய பயன்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம்.

கற்றதன் பயன் மனிதத் தன்மையோடு வாழ்தல் என்பதை "உண்டாலம்ம இவ்வுலகம்" 74 என்று தொடங்கும் புறப்பாட்டு நன்கு எடுத்துக்காட்டுகிறது. கற்றோர் இந்திரர் அமிழ்தம் கிடைப்பதாயினும் தனித்து உண்ணார்; பிறர்க்குக் கொடுத்தே உண்பர். யாரிடமும் சினங் கொண்டு ஒதுக்க மாட்டார். பிறர் துன்பங் கண்டு தாங்களும் அஞ்சுவர்; புகழுக்காக உயிரையும் கொடுப்பர்; பழிவருமெனில் உலகமே கிடைப்பதாயினும் கொள்ளார். தனக்கென வாழாமல் பிறர்கென வாழ்வர் என்று விளக்குகிறது.

சாதிக் கொடுமை அகல, கல்வி ஒன்றே உயர்ந்த கருவி என்பதனை,

***கீழ்ப்பா லொருவன் கற்பின்***
***மேற்பா லொருவனும் அவன்கட் படுமே*** 75

என்ற புறநானூற்றுத் தொடர்கள் நன்கு வலியுறுத்துகின்றன.

*உடல், உள்ளம், ஆன்ம உணர்வு ஆகியவற்றில் சிறந்தவற்றை ஒருங்கே வெளிக்கொணர்வதுதான் கல்வி.*

*இந்தியக் கல்வி வரலாறு வேத காலத்திலிருந்து தொடங்குகிறது.*

*மனிதன் முதன் முதல் கற்றது உழவியல் தான். மக்கள் கூடி வாழ்ந்த போது கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழிப்பயன்பாடு இன்றியமையாததாயிற்று.*

*தாளின் பயன் அறியா நிலையில் சுவடிகளின் வாயிலாகத் தான் கல்வி கற்றனர்.*

*கல்வி ஏகபோக ஆதிக்கத்திற்கு உட்படாமல் அனைவர்க்கும் கிடைக்கும் வண்ணம் அமைந்திருந்தது. சங்கப் புலவர்கள் கல்வி கற்ற இடம் முச்சங்கங்களே. களப்பிரர் ஆட்சியில் கல்வியில் சீரழிவு ஏற்பட்டது.*

*பல்லவர் காலத்தில் வடமொழி ஏற்றம் பெற்றது எனினும் நாளடைவில் தமிழ் ஆட்சி மொழியாக ஏற்கப் பெற்றது.*

*கி.பி. 13 முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை தமிழகக் கல்வியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன.*

*ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் தமிழகத்தில் கல்வி மறுமலர்ச்சி ஏற்பட்டது.*

*இன்று காணப்பெறும் பள்ளிக் கூடங்கள் போன்ற ஒரு முறையான அமைப்பு அந்நாளில் இல்லை.*

*தொடக்கத்தில் பெற்றோர்களால் இல்லச் சூழ்நிலையிலேயே கல்வி வழங்கப் பெற்றது.*

*சங்க இலக்கியத்தில் கல்வி நிறுவனங்கள் பள்ளிகள் என்னும் பெயரில் எந்த இலக்கியத்திலும் குறிக்கப் பெறவில்லை. அதற்கு இணையாக "மன்றம்" என்ற பெயரில் இயங்கி வந்தன.*

*சங்க காலத்தில் மன்றங்களே பள்ளிகளாகத் திகழ்ந்தன. பின்னர் ஆசிரியர் இல்லத் திண்ணைகளே பள்ளிகளாயின. குருகுலக் கல்வியும் தமிழகத்தில் இருந்துள்ளது. இக்கல்வி இயற்கைச் சூழலில் நடைபெற்றுள்ளது.*

*பள்ளி என்னும் சொல் முதன் முதலில் மாணவர் பயிலும் பள்ளி என்னும் பொருளில் திரிகடுகத்தில்தான் காணப்படுகிறது.*

*தொல்காப்பியரும் நன்னூலாரும் நூல்கள் குறித்துப் பலவகைச் செய்திகளைக் கூறியுள்ளனர்.*

*தொடக்கத்தில் அந்தணர்களே ஆசிரியர்கள். ஆசிரியர்கள் கடமை தவறாதவர்களாகவும் சான்றோர்களாகவும் திகழ்ந்தனர்.*

*சங்க காலத்தில் சங்கப் புலவர்கள் பலர் ஆசிரியர்களாகத் திகழ்ந்துள்ளனர். சமுதாயத்தில் ஆசிரியர்கள் மிகவும் மதிக்கப் பெற்றனர். உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் மாணவர்கள் கல்வி கற்றனர்.*

*மாணாக்கர் முதல், இடை, கடையென மூவகையினர்.*

*கற்றோர் எங்கும் சிறப்புப் பெற்றனர். கல்வி எழுமைக்கும் ஏமாப்பாயிற்று. பிள்ளைகளின் கல்வி அறிவு பெற்றோரைப் பெருமைப்படுத்தியது.*

*மம்மர் அறுக்கும் மருந்தாகிய கல்வி கொடுக்கக் கொடுக்கக் குறையாதது.*

*கல்லார் இழிவுடையோராகக் கருதப்பட்டனர். கல்வியைப் போலக் கேள்விக் கல்வியும் சிறந்தது, விரைந்து கற்க அது பயன்பட்டது.*

*கற்றதன் பயன் மனிதத் தன்மையுடன் வாழ்வதே, சாதிக் கொடுமைகள் அகல, கல்வி ஒன்றே உயர்ந்த கருவி.*

## சான்றெண் விளக்கம்

1. திரவியம், கா. *சிந்தனைச் சுரங்கம்* - முதற் பாகம் (தொ.ஆ) ப. 293 (மகாத்மா காந்தியடிகள்).
2. திரவியம், கா. *சிந்தனைச் சுரங்கம்* - முதற் பாகம் ப. 292 (அரிஸ்டாட்டில்).
3. வெள்ளையாம் பட்டு சுந்தரம், *கல்விக் கனிகள்*
4. கோவிந்தராசன், மு. *தமிழ் நூல்களில் கல்வி* ப. 9.

5. கந்தையாபிள்ளை, ந.சி. *சரித்திர காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழ்*, ப. 5.

6. குறள், 429

7. தொல் - பொருள் - இளம் உரை நூ. 480

8. கே. கே. பிள்ளை *தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்*, ப. 158.

9. தொல் - பொருள் - இளம் உரை நூ. 27.

10. தொல் - பொருள் - இளம் உரை நூ. 186.

11. தொல் - எழுத்து - நச்சி உரை நூ. 100.

12. களவழிநாற்பது, 15 : 2 - 4

13. குறள் : 840

14. குறுங், 33 : 1 - 2

15. புறம், 128 : 1 - 2

16. புறம், 374 : 15

17. புறம், 76 : 4

18. புறம், 79 : 2

19. புறம், 371 : 7

20. கோவிந்தராசன், மு. *தமிழ் நூல்களில் கல்வி.*

21. திரிகடுகம், 46 : 3 - 4

22. பாரதியார் கவிதைகள், தோத்திரப்பாடல்கள், வெள்ளைத் தாமரை, 61 : 1 - 2

23. நன்னூல், நூ. 24

24. நன்னூல், நூ. 49

25. தொல் - பொருள் - இளம். உரை நூ. 639

26. களவியல் என்ற இறையனார் அகப்பொருள் ப. 13

27. தொல் - பொருள். இளம் உரை. நூ. 640

28. புறம் 15 : 20 - 21.
29. தொல். பொருள். இளம் உரை. நூ. 644
30. தொல். பொருள். இளம் உரை. நூ. 468
31. நன்னூல் காண்டிகை உரை ப. 10 - 16
32. தொல். பொருள். இளம் உரை. நூ. 74 : 1 - 3
33. ஆச்சாரக் கோவை : 61
34. தொல் - எழுத்து - நச்சி - முகவுரை ப. 19
35. பட்டுச்சாமி ஓதுவார், தி. (பதி) திருக்குறள் உரைக்கொத்து, பொருட்பால் ப. 38.
36. குறள் : 415 : 2
37. புறம் : 344
38. அகம் : 271
39. தொல் - எழுத்து - நச்சி - உரை, சிறப்புப்பாயிரம், ப. 2.
40. புறம், 183 : 1 - 2
41. தொல் - எழுத்து - நச்சி உரை, சிறப்புப்பாயிரம், ப.2.
42. நன்னூல், நூ. 37
43. நன்னூல் - நூ. 39
44. தொல் - எழுத்து - நச்சி - உரை, சிறப்புப்பாயிரம், ப. 4.
45. நன்னூல் நூ. 39
46. குறள் : 392
47. மூதுரை
48. குறள் : 397
49. புறம், 192 : 1
50. புறம், 206 : 11 - 13
51. பழமொழி நானூறு, 4

52. குறள், 398
53. நாலடியார், 134
54. நன்னெறி, 40
55. புறம், 183 : 3 - 4
56. குறள் : 69
57. வெற்றி வேற்கை : 15
58. விவேக சிந்தாமணி, 39
59. புறம், 187
60. குறள் : 410
61. தமிழ் 7 ஆம் வகுப்புப் பாட நூல் ப. 32
62. திருமந்திரம் மூவாயிரம் : 304
63. புறம், 197 : 15 - 18
64. குறள் : 414
65. பழமொழி நானூறு, 5
66. குறள் : 411
67. குறள் : 412
68. புறம், 2 : 17 - 19
69. குறள் : 419
70. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம், தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் 92 : 1
71. சிலம்பு, மதுரைக் காண்டம் 13, 34 - 35
72. புறம், 361 : 3 - 4
73. புறம், 53 : 11 - 12
74. புறம், 182
75. புறம், 183

# 5

## அறச் சிந்தனை

சங்க நூல்களில் அறம், அறன், நன்று, நன்றி, நயன் என்னும் சொற்கள் அறத்தொடு தொடர்புடையன. இவை அறக்கடவுள், மனத்தூய்மை, ஒழுகல், நன்மை, நல்வினை, நன்றி, அறநெறி, நீதி, அறப்பண்பு, அரசு முறைமை அறத்தொடுநிற்றல், இல்லறம், துறவறம், பகுத்துண்டல், வாய்மை, கொல்லாமை எனப் பல பொருள்கள் குறித்துக் கூறுகின்றன.

“அறம் என்னும் சொல் அறக்கடவுள் என்ற பொருளில் குறைந்த அளவு வருகின்றது. நற்செயல் (நல்வினை) அறநெறி, அறப்பண்பு என்ற பொருள்களில் மிகுந்து வருகின்றது. பிற பொருள்களில் அருகி வருகின்றது”[1] என்று அறுதியிட்டுரைப்பர்.

“அறம் என்ற சொல்லை அறு + அம் எனப் பிரித்துத் தீமையை அறுப்பது, நீக்குவது என்றும், அறு-அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் காண்பர்”[2] பொதுவாக நோக்குமிடத்துச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும் விதித்தன செய்தலும் அறம் எனக் கோடல் பொருத்தமாகும்.

“நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்”[3] எனக் கூறும் புறநானூற்று அடிகளும் இக்கருத்தினையே புலப்படுத்தும்.

உலகப்பொதுமறை தந்தருளிய திருவள்ளுவருங்கூட

***அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு***
***ஐந்து சால் பூன்றிய தூண்***[4]

என்னும் குறளில் கொள்ளத் தக்கனவற்றையும்,

***அழுக்காறு, அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்ற தறம்*** [5]

*என்னும் குறளில் தள்ளத்தக்கனவற்றையும் தொகுத்துரைத்தல் இங்கு நினையத்தக்கது. புறநானூற்றில் 182 - 195 வரை உள்ள 14 பாக்கள் தனியே அறங்கூறுவவையாக உள்ளன. பிறபாடல்கள் வெவ்வேறு சூழலகளில் இடைமடுத்து அறங்கூறுகின்றன.*

*"சங்கப் பாக்களில் பெரும்பாலும் அகத்திணை புறத்திணைச் செய்திகளைத் தழுவியே அறநெறிகள் காணப்பெறும். அம்முறையினால் தனியே கூறும் அறத்தினும் ஒன்றன் நிகழ்ச்சியில் சார்த்துக் கூறப்பெறும் அறம் பயில்வோர் உள்ளத்தே பசுமரத்தாணிபோற் பதியும்" என்பர்.*

*இனி புறநானூற்றால் அறியப்பெறும் அறச்சிந்தனைகள். தனிமனித அறம், அரசியல் அறம், சமுதாய அறம், போர் அறம், கொடையறம், பல்லறம் எனப் பகுக்கப் பெற்று இக்கட்டுரையில் ஆராயப் பெறுகின்றது.*

**I.1. தனிமனித அறம்**

*தனிமனிதனின் ஒழுக்க உணர்வே சமுதாயத்தை மேன்மையுறச் செய்யும். இம்மேன்மை கருதியே பல்வேறு அறங்கள் தனி மனிதர்களுக்கு வலியுறுத்தப் பெறுகின்றன. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் அறமே வலிமையுடையது. எனவேதான்*

***சிறப்புடைமரபின் பொருளும் இன்பமும்***
***அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல*** [6]

*என்றார் புறநானூற்றுப் புலவர்.*

**I. 2. வாய்மை**

*தனிமனித அறத்தில் வாய்மைக்கு மிகுந்த முதன்மையுண்டு.*

*வாழ்க்கையில் இப்படித்தான் வாழ்வது என்ற குறிக்கோளுடையவர்களும், எப்படியும் வாழலாம் என்ற தான் தோன்றிகளும் உண்டு.*

*சங்ககாலப் புலவர்களில் பலர் குறிக்கோள் வாழ்வினர். பொய்யாமையை மேற்கொண்டு வாழ்ந்தவர்கள். இதனாலன்றோ கபிலர் "பொய்யா நாவிற் கபிலர்" என்று போற்றப் பெற்றார்.*

சங்கப் புலவர்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தார்கள். வாழ்வில் நல்வாழ்விற்காகப் பொய் கூறவேண்டிய சூழ்நிலைகளிலும் பொய்யாமையைக் கடைப்பிடித்து அதனால் வாழ்விழந்து வறுமைப்பட்டு அல்லல் பல எய்தியோர் மிகப்பலர். அவர்களுள் ஒருவர் மருதன் இளநாகனார். இவர் நாஞ்சில் வள்ளுவன்பால் பரிசில் வேண்டிச் சென்ற போது அவனை வாழ்த்தி, போர் ஏற்படுமாயின் தன் சுற்றம் பசியால் அழிந்து விடும் ஆதலால் விரைந்து பொருள் செய்க என வேண்டினார். அப்போது அவர் பொய்யாமை அறத்தை நினைந்து

***வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்***
***மெய் கூறுவல்*** [7]

என மொழிந்தார்.

புலவர் மருதனிளநாகனனாரின் உயிர்நிலையாகிய இவ்வரிகள் பண்டைத் தமிழகத்தில் வறுமையுற்ற காலத்தும் புலவர் பொய் கூறுவதற்கு அஞ்சும் உயர்ந்த பண்பை எடுத்துகாட்டுவனவாகும்.

“பொய்யும் புரட்டும் இல்லாமல் மெய்யும் மேன்மையும் நாட்டில் தவழச் செய்தல் வேண்டும்” என நம்முனனோர்கள் பெரிதும் விரும்பினர் என்பதை எண்ணிப் பார்க்கின் “வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல” என்ற புலவர் மருதன் இளநாகனாரின் வாக்கின் சிறப்பையும் உண்மையையும் உணரலாம்” [8] என்பார் தரும் விளக்கமும் ஈண்டு நினையத்தகும்.

வன்பரணர் என்ற புலவர் பொய்யாகப் புனைந்து கூறிப் புகழ்ந்து பொருள் பெறுதல் தம் இயல்பு அன்று என்பதை,

***பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்***
***செய்யா கூறிக் கிளத்தல்***
***எய்யா தாகின்று எம் சிறு செந்நாவே*** [9]

என்று பெருமிதமும் பணிவும் தோன்றக் கூறினார்.

**I. 3. செய்ந்நன்றி மறவாமை**

***செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்***
***வானகமும் ஆற்றல் அரிது*** [10]

என்று செய்ந்நன்றியைச் சிறப்பிப்பர் வள்ளுவர். செய்ந்நன்றி மறத்தல் மிகக் கொடிய பாவம் என்று ஆலத்தூர் கிழார் என்ற புலவர் மிக வன்மையாக மொழிகின்றார்.

***ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென***
***அறம்பாடிற்றே ஆயிழை கணவ*** [11]

என்பது புலவர் வாக்கு.

புலவர்தம் பாட்டின் முன் அடிகளில் பசுவின் மடியை அறுத்து அதனால் பெறும் பயனைக் கெடுத்தோர், கல்வி புகட்டிய ஆசிரியரைப் பழித்துக் கொடுமை செய்தோர் ஆகியோரை மிகப்பெரிய குற்றவாளிகளாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் இவர்கள் செய்த பாவத்தைப் போக்குதற்கு வழியுண்டு. நிலம் கீழ் மேலாகப் புடைபெயரும் காலமாயினும் செய்ந்நன்றியைச் சிதைத்தோர் நரகத்தினின்று தப்ப முடியாது என்கிறார். செய்ந்நன்றி மறத்தல் மிகக் கொடிய பாவம் எனப்புலவர் வலியுறுத்துகிறார். கள்ளில் ஆத்திரையனார் என்ற புலவர் ஆதனுங்கன் என்பவனைப் பாடுங்காலை, என் நெஞ்சம் திறப்போர் நின்னைக் காண்பர் என்றும், நின்னையான் எப்பொழுதும் மறப்பேன் என்றால் என் உயிர் பிரியுங் காலையும் என்னை யான் மறக்கும் பொழுதும் என்று கூறுவது நன்றியுணர்வின் புலப்பாடாகும்.

பெருஞ்சாத்தன் என்பான் இரந்தவருக்கு இன்முகம் காட்டி இனிய சொல்கூறி, அணிகலன்களை அளவிறந்து நல்கி, அதனோடு அமையாது தன் இல்லத்திலிருந்த பொன் போன்ற மடந்தையைக் காட்டி இவரை “என் போல் போற்றுக” என்றான். இந்நற்சொற் கேட்ட புலவர் அன்று முதல் அவனை மறந்திலர்; பிறரை நினைந்திலர்; அவன் தாள் வாழ்க எனச் செய்ந்நன்றி உணர்வோடு வாழ்த்துகிறார்.

***பொன்போல மடந்தையைக் காட்டி, இவனை***
***என்போல் போற்றென் றோனே அதற்கொண்டு***
***அவன் மறவலேனே, பிறர் உள்ளலேனே*** [12]

**I. 4. பிறர்க்கென முயலுதல்**

“தன்னலத்துக்கும் பொது நலத்துக்கும் இடையில் சிக்கி, இறுதியில் பொது நலத்துக்காகத் தன்னலத்தை இழந்திட உறுதி

கொள்பவனே மனிதன்"[13] என்பார். கூற்று எத்துணைப் பொருத்த முடையது என்பதை அனைவரும் நினைவு கூர்தல் வேண்டும்.

தன்னலம் கருதாமை, தமக்கென முயலாமை என்ற அருந்தமிழ்த் தொடர்கள் சிறந்த அறத்தொடர்கள்.

கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற தமிழ் மன்னனின் அரிய சிந்தனையில் தோன்றிய பாடலே **"உண்டால் அம்ம இவ்வுலகம்"** என்று தொடங்கும் இப்புறப்பாடல், இவ்வுலகம் நிலைத் திருப்பதற்கான காரணத்தை,

> ***தமக்கென முயலா நோன் றாள்***
> ***பிறர்க்கென முயலுநர் உண்மையானே*** [14]

என்று முடித்துக் காட்டுகிறார் இளம்வழுதி.

"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழிநல்லை வாழிய நிலனே" என்பதும் இதனைத் தழுவியதே.

தமக்கென வாழாது, தன்னலத்தைத் துறந்து வாழும் சான்றோர்கள் இருப்பதாலேயே உலகம் நிலை பெற்றுள்ளது.

பிறர்க்கென வாழ்பவரின் அறப்பண்புகளை மேற்குறித்த புறப்பாடல் சுட்டுகின்றது.

இவர்கள் இந்திரர் அமிழ்தம் கிடைப்பதாயினும் அதனைத் தாம்மட்டும் உண்ணாமல் பிறர்க்கும் அளிப்பர். யாரையும் வெறுக்க மாட்டார்கள். அஞ்சத் தக்கன கண்டு அஞ்சுவர். புகழுக்குரிய செயல் எனின் அதற்காகத் தம் உயிரையும் கொடுப்பர். பழியெனின் உலகம் முழுவதையும் பெறுவதாயினும் கொள்ள மாட்டார்கள்.

தமக்கென வாழாத இப்பண்பாடே மிகச்சிறந்த அறமென்பர் வள்ளுவர்.

> ***பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்***
> ***தொகுத்தவற்றுள் எல்லாம் தலை***[15]

என்பது வள்ளுவர் வாய்மொழி.

ஈட்டிய பொருளை எல்லோருடனும் பகுத்துண்டு அதனால் பல்லுயிர்களையும் ஓம்பும் அறமே உலக அறிஞர்கள் தொகுத் துரைத்துள்ள அறங்களில் எல்லாம் தலையாய அறமாகும்.

## I.5. ஈதல்

ஈத்துவக்கும் நெஞ்சத்தால் இன்பமுடன் வாழ்ந்தனர். அக்கால மக்கள் ஈதலும் இசைபட வாழ்தலும் பண்டைய வாழ்விற்கு உரமூட்டின. தலையாய அறங்களுள் ஈகையும் ஒன்று. புறநானூற்றுப் புலவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் ஈதல் அறங்குறித்து,

> ***செல்வத்துப் பயனே ஈதல்***
> ***துய்ப்பே மெனினே தப்புந பலவே*** [16]

என்றார். ஒருவர் தாம் பெற்ற செல்வத்தைத் தேவையுள்ளோர்க்குக் கொடுத்து வாழ்தலே பயனுள்ளதாகும். செல்வத்தைத் தாமே துய்க்கக் கருதினால் தவறுவன பல ஆகும். பல என்றது அறம், பொருள், இன்பங்களாகும்.

இவர் இப்பாடலில் அறத்தைத் தெளிவுபட விளக்குகிறார். நாடாளும் பேரரசனாயினும், விலங்குகளை வேட்டையாடிப் பிழைக்கும் வேடுவனாயினும் உண்பது நாழி, உடுப்பது இரண்டேயாகும். பிற தேவைகளும் ஓரொக்கும். எனவே செல்வத்தைப் பெற்றவர்கள் அதனைத் தம்மிடமே சேமித்து வைக்கக் கருதக் கூடாது. பிறருக்கு ஈந்து வாழ்ந்தாலே பயனுள்ள வாழ்வு பெறமுடியும். இதனாலன்றோ வள்ளுவர்,

> ***ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது***
> ***ஊதியம் இல்லை உயிர்க்கு***[17]

என்றார்.

இன்று இத்தகைய அறஉணர்வு குறைவாக இருப்பதால் தான் தொழிலாளர் கிளர்ச்சியும், பொருள் முட்டுப்பாடும், வாழ்வில் நிறைவின்மையும் ஏற்படுகின்றன.

பழங்காலத்தில் ஈதல் பற்றிய எண்ணம் பரவலாக இருந்த போதும் இரத்தல் பற்றிய சிந்தனையும் இருந்துள்ளது. இரத்தல் இழிந்தது, ஈயாதிருத்தல் அதனினும் இழிவு. கொடுத்தல் உயர்ந்தது. கொள்ளேன் என்றிருத்தல் அதனினும் உயர்ந்தது. ஈதல் நன்று இரத்தல் தீது என இருநிலைக் கருத்துகளையும் எதிரெதிர் கருத்துக்களாக்கிக் கூறுகிறார் கழைதின் யானையார் என்ற புலவர். (204) இரத்தலில் உள்ள தன்மான உணர்வையும் சங்கப் புலவர்கள்

எண்ணியுள்ளனர்.

## I. 6. நட்புறவு

சங்க காலத்தில் நட்பின் உயர்வு மதித்துப் போற்றப்பட்டது. மன்னர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் புலவர்களுக்குக் கிட்டியது. ஔவை - அதியமான், கபிலர்-பாரி, முடமோசியார்-ஆய், பிசிராந்தையார்-கோப்பெருஞ்சோழன் முதலியோர் நட்புத்திறன் புறப்பாடல்களில் புலப்படுத்தப் பெற்றுள்ளது.

உயர்ந்த நட்பு உயர்ந்தோரிடம் சேர்வதாகும். பொன்னும், பவளமும், முத்து மணியும் வெவ்வேறிடத்தன. ஆனால் அணிகலனுக்காக ஒன்றாகக் தொகுக்கப்படும் போது அவை அனைத்தும் ஓரிடத்தன. ஆதலால் உயர்ந்த நட்பாகிய சான்றோர் நட்பு சான்றோரையே நோக்கியது (218) இப்புறப் பாடலில் சான்றோர் சான்றோரையே விரும்புவர் என்பது உணர்த்தப் பெறுகிறது.

இம்மை மட்டும் அல்லாமல் மறுமையிலும் பாரியின் நட்பைக் கபிலர் வேண்டுவது நட்புறவின் ஆழத்தைக் காட்டும் (236).

ஒருவரையொருவர் காணாமலே நட்புப் பூண்டிருந்தனர் என்பதனைக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் வாழ்வில் காணலாம். மன்னன் வடக்கிருந்த காலை அதனை அறிந்து பிசிராந்தையார் சோணாடு அடைந்து மன்னனுடன் உயிர்விட்ட செய்தி நட்பின் பெருமையைத் துலக்கும். செல்வம் இருந்தபோது வாராது, உயிர் விடும் நிலையில் இறக்கும் போதாவது வருவார் என்ற உணர்ச்சியும் உறுதியும், நம்பிக்கையும் நல்ல நட்பிற்குரிய அடையாளங்கள் (215).

“புலவர்களுக்கு மன்னனைத் திருத்தவும், அறநெறிக்குத் திருப்பவும், மக்கள் நன்மை கருதவும் இப்படிப்பட்ட நட்புறவுகள் தேவையே என்பதைப் புறக்கருத்துகள் உணர்த்திய வண்ணம் உள்ளன”[18] என்பார் கூற்று இங்கு மிகவும் பொருத்தமுடையதாகும்.

இன்னும் இதுபோன்ற தனிமனித அறங்கள் பல உண்டு. அவற்றைச் சுருங்கக் காணலாம்.

நல்வினையைச் செய்யாமற் போனாலும் தீவினை செய்தலை ஒழிக்க வேண்டும்; அதுவே நல்ல நெறியில் செலுத்தும் வழியுமாகும் (195); சான்றோர் உள்ள நாடே நல்ல நாடாகும் (187); யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொதுமை உணர்வு வேண்டும் (182); அறமே வீட்டுலகம் பெறுதற்குத் துணையாகும் (357); அல்லல் உற்றோர்க்கு அருளுக (27) என்றவாறு நூல் முழுவதும் அறக்கருத்துகள் நிறைந்துள்ளன.

**II. 1. அரசியல் அறம்**

சங்க காலத்தில் நிலவியது மன்னராட்சியே ஆயினும் மக்களாட்சியினும் மேலானதாகவே விளங்கியது. மன்னர்கள் குடிதழுவிக் கோலோச்சினர். மக்கள் திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டதாகவே கருதினர். “மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்” என்ற நிலை இருந்தது.

மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. ஒருவரையொருவர் பெரிதும் மதித்தனர். புலவர்பாடும் புகழையே பெரும்புகழாகக் கருதினர் மன்னர்கள். புலவர்கள் அரசவையில் அறிவுரை கூறும் ஆலோசர்களாக விளங்கினர். செந்நாப்புலவன் கபிலன் பாரியின் அமைச்சராகவே விளங்கினான்.

புறாநானூற்றில் அரசியல் அறங்கள் பலவற்றைக் காண இயலும். புலவர்கள் பாராட்டும் போதும் வேந்தர்கள் வஞ்சினம் கூறும் போதும் மன்னர்கள் தமது இயல்பினைப் புலப்படுத்தும் போதும் அரசரின் நல்லியல்புகள் வெளிப்படுகின்றன. அவை அனைத்தும் அறந்தழுவியனவே.

இவை நீங்கலாகப் புறநானூற்றின் 182 முதல் 195 முடியவுள்ள 14 பாடல்கள் முழுவதும் அரசியல் அறங்களே. இவற்றுள் சில கட்டுரைகள் அளவிற்கேற்ப இங்கு முன் வைக்கப் பெறுகின்றன.

**II. 1. ஆட்சிப் பகை**

சங்க கால மன்னர்கள் ஆட்சித்திறனும் ஆண்மைத் திறனும் பெற்று அரசியலை நடத்தினர். விழுமிய சிந்தையராய் இருந்தனர்.

மன்னர்கள் வாரிசு உரிமை வழியிலேயே ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தனர். இவ்வாறு வரும் அரசுரிமை ஊழ்வழி அரசுரிமையாகக் கருதப் பெற்றது. இவ்வாறு அரசுரிமை பெறும் ஒருவன்

"சிறப்பெய்தினம்" என்று கருதி குடிமக்களை வருத்தி வரிவாங்கினால் ஊக்கமில்லாத அச்சிறியவனுக்கு அவ் அரசுரிமை பளுவாக அமையும். ஆனால் போர் தாங்கும் ஊக்கமுடைய ஆற்றல் மிக்கவன் பெற்றால் அது வற்றிய குளத்தில் கிடக்கும் உலர்ந்த கள்ளி போல மிக நொய்தாக இருக்கும். இங்ஙனம் எய்திய அரசுரிமை பளுவாகவும், ஊக்கமுடையான் பெற்ற தாயம் நொய்தாகவும் இருப்பதனைச் சோழன் நலங்கிள்ளியின் பாடல் வழி அறிகிறோம்.

***விழுமியோன் பெறுகுவனாயின், தாழ் நீர்***
***அறுகய மருங்கிற் சிறுகோல் வெண்கிடை***
***என்றூழ் வாடுவறல் போல, நன்றும்***
***நொய்தாலம்ம தானே***[19]

### II.2. ஆட்சியது அருமை

ஆற்றல் மிக்க ஆட்சியை நடத்துவது என்பது மிகவும் அரிது. இதனை மன்னர்களே உணர்ந்திருந்தனர் என்பதற்குத் தொண்டைமான் இளந்திரையன் பாடல் தக்க சான்றாகும்.

***கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்***
***காவற் சாகா டுகைப் போன் மாணின்***
***ஊறின் றாகி யாறினிது படுமே***
***உய்தல் தேற்றா னாயின் வைகலும்***
***பகைக் கூழ் அள்ளற் பட்டு***
***மிகப்பஃ றீ நோய் தலைத்தலைத் தருமே***[20]

ஆட்சி என்னும் சக்கரத்தைச் செலுத்துவோன் மாட்சிமை பெற்றிருத்தல் வேண்டும். ஆட்சிச் சக்கரம் அப்போதுதான் இடையூறின்றி இனிதாகச் செல்லும். இதனையறியாமல் ஆட்சி புரிவானேயானால் பகை என்னும் சேற்றில் அழுந்திப் பல துன்பங்களுக்கு ஆளாவான் என மன்னன் இளந்திரையன் உரைத்திருப்பதிலிருந்து சான்றோர் பகுத்த அறநெறிப்படி ஒழுக வேண்டும் என்பது அறிவுறுத்தப் பெறுகிறது.

மழை பெய்தாலும் நாடு வறுமையுற்றாலும் மக்களின் இயற்கையான செயல் வினைகள் பாழ்பட்டு முறை பிறழ்ந்தாலும் இவ்வுலகம் மன்னர்களையே பழிக்கும் என்பது வெள்ளைக்குடி நாகனார் வாக்கு (35) இதனால் மன்னர்கள் பழிபாவங்களுக்கு அஞ்சி வாழ்க்கை நடத்தினர் எனத் தெளியலாம்.

## II. 3. நல்லாட்சி

நாட்டில் நல்லாட்சி நடைபெற மன்னனுக்குச் சில நற்பண்புகள் தேவை முரஞ்சியூர் முடிநாகனார் உதியஞ்சேரலாதனைப் பாடிய போது அவன் நிலம், விசும்பு, காற்று, தீ, நீர் என்ற ஐம்பெரும் பூதங்களின் இயற்கை போலப் பொறை, சூழ்ச்சி, வலி, தெறல், அளி என்ற ஐந்து பண்பும் உடையவர்களாளேயே நல்லாட்சியை நடத்த இயலும் என்பர்.

இப்புலவரே இப்பாடலின் நல்லாட்சிக்கு, எச்சூழலிலும் மனம் வேறுபடாத சூழ்ச்சி மிக்க அமைச்சர் சுற்றம் வேண்டும் என்கிறார்.

***பால் புளிப்பினும் பகலி ருளினும்***
***நால் வேதநெறி திரியினும்***
***திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி***[21]

என்ற தொடர்களே இக்கருத்தை விளக்குகின்றன.

## II. 4. அரச அறம்

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் இயல்புகளாக ஊன்பொதி பசுங்குடையார் உரைப்பன (10) அனைத்தும் அறச் செய்திகளே. அவை அரசனுக்குரிய அறங்களாக அமைந்துள்ளன.

1. வழிபடுவோர் பணிவுகாணின் எதற்காக அவர்கள் பணிகின்றனர் என்று ஆராய்ந்து விரைவில் உணர்தல்.
2. பிறரைப் புறங்கூறும் புலவர்களின் பழிமொழியை ஏலாமல் தெளிவாக அறிதல்.
3. பிறரிடம் தீமை காணின் அவற்றைச் சீர்தூக்கித் தீமைக்கேற்பத் தண்டனை வழங்குதல்.
4. குற்றம் புரிந்தோர் அடிபணிந்தால் முன் வழங்கிய தண்டனையிலும் குறைத்து வழங்குதல்.
5. சுவைமிக்க உணவினை வருவார்க்கு வரையாது வழங்குதல்.
6. செயலை முடித்தபின் ஏன் இதனைச் செய்தோம் என இரங்காதிருத்தல்.

## II. 5. செங்கோன்மை

மன்னனுக்குரிய மாண்புகளுள் செங்கோன்மையே சிறந்த மாண்பாகும். அறம் பிறழாமல் நடுநிலை தவறாமல் ஆளும் ஆட்சியே செங்கோன்மை. குடிகளை வருத்திக் கொடுமைப் படுத்தும் ஆட்சி கொடுங்கோன்மையாகும்.

மன்னர்கள் உரைத்த வஞ்சின மொழிகளில் செங்கோன்மையைச் சிறப்பிக்கக் காண்கிறோம். வன் + சினம் = வஞ்சினம். மன்னர்கள் மாற்றார் மேல் கொண்ட கடுங்கோபத்தில் இன்னது செய்தல் ஆற்றேனாயின் இன்னேன் ஆகுக என்று உரைப்பது வஞ்சின மொழியாகும். வஞ்சின மொழிகள் மன்னர்களின் தலையாய குறிக்கோளை உணர்த்துவன.

பாண்டியன் நெடுஞ்செழியன் கூறும் வஞ்சினம், நால்வகைப் படையுடையேம் என்னும் பெருமிதத்துடன் என் ஆற்றல் போற்றாது சினம் மீதூர்ந்து, சிறு சொல் சொல்லிய வேந்தரை அருஞ்சமரில் சிதையத் தாக்கி, முரசமொடு அகப்படுத்துவேன். அகப்படுத்தேனாயின் என் குடை நிழல் வாழும் குடிமக்கள் செல்நிழல் காணாது "கொடியவன் எம் இறை" எனக் கண்ணீர் பரப்பிக் குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக என்பதாகும்.

***என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது***
***கொடிய னெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்***
***குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"[22]***

என்ற புறநானூற்றுத் தொடர்கள் இக்கருத்தை விளக்குவன ஆகும். குடிதழுவிக் கோலோச்சும் அவனது சீரிய இயல்பினை இவ் வஞ்சினம் புலப்படுத்துகிறது.

பாண்டியர்க்குரிய ஒல்லையூரைப் பகைவரிடமிருந்து வென்று கொண்ட சிறப்பினையுடையவன் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன். இவன் மனைவி பெருங்கோப்பெண்டு. அவரும் நல்ல புலமை உடையவர். ஒருநாள் அவனுக்கும் சேர, சோழருக்கும் பகைமை ஏற்பட்டுப் போர் நிகழ்ந்த போது, அவன் கூறிய வஞ்சின மொழியே (71) இப் பாட்டாயிற்று. இதோ என் அருகிலிருக்கும்"சிறந்த பேரமருண்கண் இவளினும் பிரிக" என்றான், அறனிலை திரியாத அன்பின் அவையத்துத் திறனில் ஒருவனை நாட்டி முறை திரிந்து மெலிகோல் செய்தேன் ஆகுக என்றும் தென்திசை நாட்டைக்

காக்கும் காவலின் நீங்கி மாறி வன்புலங்களைக் காக்கும் காவற் கண்ணே யான் பிறப்பேன் ஆகுக என்றும் வஞ்சினம் மொழி கின்றான். இவ்வஞ்சின மொழிகள் அவனது அறநெறியைப் புலப்படுத்துகின்றன.

**II.6. மன்னக் கடமை**

புலவர் மோசிகீரனார் மன்னன் கடமை குறித்து

***நெல்லும் உயிர்அன்றே நீரும் உயிர் அன்றே***
***மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்***
***அதனால் யான்உயிர் என்பது அறிகை***
***வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே***[23]

என்று அறிவுறுத்துகிறார்.

பரந்த நிலப்பரப்புடைய இவ் உலகிற்கு நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; ஆட்சி நிகழ்த்தும் மன்னனே உயிராவான். எனவே மன்னன் மக்களுக்குத் தானே உயிர் என்பது அறிந்து முறை செய்து குடிமக்களைக் காப்பாற்ற வேண்டியது கடமையாகும் என்பது இப்பாட்டில் வலியுறுத்தப் பெறுகிறது.

**II. 7. வரிவாங்கும் முறை**

அரசன் தன் ஆட்சியைத் திறம்பட நிருவகிக்க வருவாய் மிகவும் முதன்மையானதாகும். அன்றைய நிலையில் நிலவரியே முதன்மையாகும். இத்தகைய வரியைக் குடிமக்களிடமிருந்து எப்படி வாங்க வேண்டும் என்பதைப் பாண்டியன் அறிவுடை நம்பிக்குப் பிசிராந்தையார் அறிவுறுத்துகிறார்.

பாண்டியன் குடிமக்களிடமிருந்து இறைவாங்கும் நெறியிற் பெருந்தவறு செய்தான். இவன் பால் வாழ்ந்தஅரசியல் சுற்றத்தார் இதனை இடித்துரைத்து நெறிப்படுத்தும் நேர்மையின்றி, அரசன் கருத்துக்கு வளைந்து கொடுத்து அவன் நாட்டில் குடிவாழும் மக்கட்குத் துனபம் உண்டாக்கினர். மக்கள்பால் வேந்தனுக்கு அன்பு குறைந்தது. மக்களை வருத்தி வரிவாங்குவதில் விருப்ப முடையவன் ஆனான். இதனை அறிந்த பிசிராந்தையார் அவனுக்கு நல்லறிவு புகட்டக் கருதி அறிவுறுத்துகிறார். "களிற்று யானைக்கு உணவாகும் நெல், அது விளையும் நிலத்திலிருந்து கொண்டு வரப்பட்டுக கவளங்கவளமாகக் கொள்ளப்படுமாயின், விளைநிலம்

ஒரு மா அளவினும் குறைந்ததாயினும் பல நாட்கள் அக்களிற்றுக்கு உணவு தர வல்லதாம். நூறுமா அளவு நிலத்தில் நெல் விளைந்து சாய்ந்து கிடப்ப, யானை தானே புகுந்து உண்ணுமாயின், அதன் வாய் புகுமளவினும் கால்களால் மிதித்துக் கெடுவது மிகுதியாகும். இவ்வாறே வேந்தனும் தான் பெறுதற்குரிய அரசிறையை நெறியறிந்து முறையே கொள்வானாயின் நாடு நலம் பெறும். நிறை பிறழ்ந்து இறை பெறின் யானை புக்க விளைநிலம் போல அவற்கும் பொருள் சேராது; நாடும் கெட்டழியும் என்றார். இதனை மனதிற்கொண்டே

> ***யானை புக்க புலம் போலத்***
> ***தானும் உண்ணான் உலகமும் கெடுமே***[24]

என்றார்.

### III. சமுதாய அறம்

சமுதாய உணர்வு என்பது மதம், மொழி, சாதி, இனம் கடந்த பொது உணர்வாகும். வாழ்விலும், தாழ்விலும் ஒரே வித நிலையை மக்கள் அனைவரும் அடைவதுதான் சமுதாயக் கட்டமைப்பின் பயனாகும்.

சங்ககாலச் சமுதாயம் பண்பட்ட சமுதாயமே ஆயினும் அப்பண்பாட்டை மேலும் வலியுறுத்தக் கருதிப் புலவர்கள் பலர் சமுதாய அறச்சிந்தனை உடையவர்களாக விளங்கியுள்ளனர். இந்நிலையில் புறநானூற்றுப் புலவர்களின் சமுதாய அறச்சிந்தனை இங்கு விளக்கப்பெறுகிறது.

### III.1. சான்றோர் - சாலார்

சமுதாயம் என்ற கட்டமைப்பில் சான்றோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர். சான்றோரில்லாச் சமுதாயம் சமுதாயமாகவே கருதப்பட மாட்டாது. இதனாலன்றோ கோவலன் அநியாயமாகக் கொலையுண்டதும் மதுரை மக்களை நோக்கி, “சான்றோரும் உண்டு கொல் சான்றோரும் உண்டு கொல்” என்று சூளுரைக்கின்றாள் கண்ணகி.

புறநானூற்றுப்புலவர் கண்ணகனார், சான்றோர் சான்றோரையே சேர்வர் என்ற கருத்தில்,

*பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய*
*மாமலை பயந்த காமரு மணியும்*
*இடைபடச் சேயவாயினும் தொடைபுணர்ந்து*
*அருவிலை நன்கலம் அமைக்குங் காலை*
*ஒருவழித் தோன்றியாங் கென்றும் சான்றோர்*
*சான்றறோர் பால ராப*
*சாலார் சாலார் பாலர் ஆகுபவே*[25]

என்றார்.

பொன், பவளம், முத்து, மணி என்பன பல்வேறிடங்களில் கிடைப்பன ஆயினும், உயர்மதிப்புடைய அணிகலன்களை உருவாக்குங்கால் அவை ஒருவழிச் சேர்கின்றன. அவற்றைப் போலவே சான்றோர் சான்றோரைச் சார்வர். சாலார் சாலாரைச் சேர்வார். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பதும் இக்கருத்தினதே.

### III.2. பல்லோர் கடமைகள்

சமுதாயத்தில் ஒவொருவருக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. இக்கடமை உணர்வும் அறநிலைப்பட்டதே. பொன்முடியார் என்ற புலவர் சமுதாயத்தைச் சார்ந்த ஒவ்வொருவரின் கடமையையும் வலியுறுத்தி

*ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ் சமம் முருக்கிக்*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே*[26]

என்றார்.

### III.3. நிலையாமை

இந்நில உலக வாழ்க்கை நிலைத் திருப்பதன்று. பிறந்த மக்கள் முடிவில் இறப்பது உறுதி. அவர்கள் ஈட்டும் பொருளும், இளமையும், துய்க்கும் இன்பமும நிலையற்றவை.

இதனாலன்றோ தொல்காப்பியர்.

*பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற்றானும்*
*நில்லா உலகம் புல்லிய நெறித்தே*[27]

என்று பாடினார். காஞ்சித் திணைக்கு அவர் தரும் விளக்கம் இது. காஞ்சித்திணை நிலையாமையை வலியுறுத்துவது. மன்னனின் போர் வெறியைத் தணிக்கப் புலவர்கள் நிலையாமையை எடுத்துரைத் துள்ளனர். எனினும், நிலையாமை அறம் சமுதாயத்திற்கும் படிப்பினையானது.

மனிதன் மனிதனாக வாழ நிலையாமையாகிய இவ் உண்மையை உணரவேண்டும். இவ்வாறு உணர்ந்து பிறர்நலம் பேணி நல்லறங்களைச் செய்வராயின் அவர்கள் புகழ்பெறுவர். அவர்கள் பெற்ற இப்புகழ் மறைந்து பின்பும் இந்நில உலகில் நிலைத்து நிற்கும். இவ்வுண்மையை,

> ***மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்***
> ***தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே***[28]

எனப் பெருந்தலைச் சாத்தனார் எடுத்துரைப்பர்.

**IV. போர் அறம்**

பண்டைத் தமிழ் மன்னர், குறுநில மன்னர், வேளிர் ஆகியோர் நிகழ்த்திய போர்களைப் புறநானூறு விரிவாகக் கூறுகிறது.

மன்னர்கள் பல்வேறு காரணங்களுக்காகப் போர் நிகழ்த்தியுள்ளனர். தம் ஆட்சி எல்லையை விரிவு படுத்துவது தம் புகழின் அளவாகக் கருதப்பட்டது. தம் நாட்டுமக்கள் வாழ்வதற்கு இடம் போதாது, நாடு விரிந்து பெரிதானால் மக்கள் நலம் பெருகும் எனக்கருதிப் போர் புரிந்துள்ளனர். இதனை "இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப ஒடுங்கா உள்ளத்துடன் சென்று சேர வேந்தன் செல்வக் கடுங்கோ வாழியாதன் பொருதான்" (8) எனக் கபிலர் கூறுகிறார். மறத்தால் வரும்புகழ் காரணமாகவும் போர் நிகழ்ந்துள்ளது.

போர்வினையிலும் எந்நெறியையும் மேற்கொண்டு வாகை சூடலாம் என்று பண்டைத் தமிழர் எண்ணவில்லை. வீரத்தை வெளிப்படுத்தும் போரிலும் மறவர்கள் அறநெறியினைப் பின்பற்றினர். அந்நெறிமுறை பிறழாது போர் புரிந்த மன்னர்கள் **"அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்"** (62) எனப் போற்றப் பெற்றனர்.

போர்க்களம் ஊரின்புறத்தே அமைந்திருந்தது. இரவில் போர் புரிதல் இல்லை என்ற அறநெறியை இடைக்குன்றூர் கிழார்.

***வெம்போர்ச் செழியனும் வந்தன னெதிர்ந்த***
***வம்ப மன்னரோ பலரே***
***எஞ்சுவர் கொல்லோ பகல்தவச் சிறிதே***[29]

என்று கூறுவதால் உய்த்துணரலாம்.

தொல்காப்பியர் "ஆ கவர்தல் வெட்சி" என்பர். கவர்ந்து செல்லும் பசுக்கள் மாற்றார் பசுக்கள் ஆயினும் அவற்றைக் கொடுமைப்படுத்திக் கொண்டு செல்வதில்லை. நீர் அருத்தியும், நிழலில் நிறுத்தியும் அழைதது்ச் செல்வர் என்று இளம்பூரணர் தரும் விளக்கம் போர் அறத்தை எடுத்துரைக்கின்றது.

பசுக்கள், பசுவின் இயல்பு வாய்ந்த பார்ப்பன மாந்தர், மகளிர், நோயுடையார், மக்கட்பேறு இல்லாதவர், ஆகியோரை ஒறுத்தல் அடாது என்றெண்ணிப் பாதுகாப்பான இடம் சென்று சேருமாறு நாட்டிரிடம் முன்னறிவிப்புச் செய்த பின்னரே பொருதனர் என்பதை,

***ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்***
***பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்***
***தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும்***
***பொன்போற் புதல்வர்ப் பெறா தீரும்***
***எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மின்***[30]

என்ற நெட்டிமையார் வாக்கால் அறியலாம். புறமுதுகு காட்டியோர், புண்பட்டோர், முதலியோரிடம் சண்டையிடுதலைப் "படைமடம்" படுதல் என இகழ்ந்தனர்.

பகைவர்களைக் கொன்று குவித்தலே அறம் என்றும் அவரிடம் இரக்கம் காட்டுதல் முறையன்று என்றும் தொடக்கக் காலத்தில் கருதப்பட்டது. அதனால்தான் பகைவர் நாட்டைக் கொள்ளையிடுதல், அவர் ஊர்களை எரியூட்டுதல், நீர் நிலைகளைப் பாழ்படுத்தல், மாற்றார் மனைவிமார் கூந்தல்களை அரிந்து கயிறாக்கிக் களிறு பிணித்தல் முதலிய செயல்கள் நிகழ்ந்தன. அவ்வன் செயல்கள் புலவர்களாலும் புகழப் பெற்றன.

**V. கொடை அறம்**

புறப்பொருள்களில் தமிழர் வீரமும் கொடையுமே முதன்மைப்படுத்தப் பெறுகின்றன.

சங்க காலத்தை வீரயுகம் என்பது போலக் கொடையுகம் என்றும் கூறலாம். சங்க கால மன்னர்கள் மட்டுமன்றிக் குறுநில மன்னர்கள், வேளிர்கள், மறவர்கள், புலவர்கள் முதலிய பிறரும் கைவண்மையில் சிறந்து விளங்கினர் என்பதற்குப் புறநானூற்றில் மிகுதியான சான்றுகள் உள்ளன.

**V. 1. வள்ளல்கள் கொடை இயல்புகள்**

"நீரினும் இனிய சாயலனாயிருத்தல், மடவர், மெல்லியர் செல்லினும் கொடையளித்தல், புகழ்ந்து பாடாதோருக்கும் உதவுதல், தன்னிடம் உள்ள பொருள் அனைத்தையும் கொடையால் இழந்தும் பெருமிதத்துடன் இருத்தல், பிறர் புகழும் போது நாணத்தால் தலை சாய்தல், பொது நோக்குத் தவிர்ந்து வரிசையறிந்து வழங்குதல், குடிமயக்கில் கொடுக்காது தெளிவான நிலையில் மிகுதியாகக் கொடுத்தல், நாள், செவ்வி, சகுனம் முதலிய பார்க்காமல் சென்று தீ மொழி கூறினும் இரவலரை வறிதே அனுப்பாமல் பரிசு நல்கல், பலநாள் பலரோடு செல்லினும் தலைநாள் போன்ற விருப்புடன் விருந்தோம்பல், அல்லற்காலையும் அகமும் முகமும் மலர இரவலர்ப் பேணுதல், கொடை மடம் படுதல், அறவிலை வணிகம் செய்யாமல் கடமை உணர்வால் அளித்தல், விளம்பரமின்றி அடக்கமாக ஈதல், ஈத்தொறும் இரங்காமல், மகிழாமல் மாவள்ளல் எனப் பெருங்கொடை செய்தல், இவன் என்றும் பிறர்பால் இரவாதவாறு குறிப்பறிந்து நிறையக் கொடுத்தல், வல்லாங்கு வாழ்தும என்னாது நல்குதல் முதலியன குறிப்பிடத்தக்க கொடையியல்புகளாகும்: [31]

**V.2. பாரி - பேகன்**

பறம்பிற் கோமான் பாரி, கொல்லியாண்ட வல்வில் ஓரி, மாரியீகை மறப்போர் மலையன் (காரி), குதிரை மலைக்குரிய எழினி (அதிகன்) பெருங்கல் நாடன் பேகன், மோசிபாடிய ஆய், வருவோர் வறுமை தீர நல்கியநள்ளி என்ற எழுவரும் கடையெழு வள்ளல்கள் எனப் போற்றப்படுவோர் ஆவர்.

இவர்கள் அனைவருமே வள்ளன்மையில் ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள் எனினும் எடுத்துக் காட்டிற்காகப் பாரி, பேகன் இருவர் கொடைத் திறமும் இங்கு மொழியப் பெறுகின்றது.

இன்றும் கொடைக்குப் பாரியையே எடுத்துக்காட்டுவர். இவன் பறம்பு மலைக்கோமான். நீரினும் இனிய சாயலன். இரவலர்க்கு இன்முகம் காட்டி இன்சொல் இயம்பும் இயல்பினன். மடவர் மெல்லியர் செல்லினும் அன்புடன் ஏற்று உதவுவான் தன்நாட்டு முந்நூறு ஊர்களையும் இரவலர்க்கு நல்கிய அருளாளன்.

பாரியின் கொடை வளத்தில் முல்லைக்குத் தேர்ஈந்த நிகழ்ச்சி முதன்மையானது. தம்மைப் புகழ்ந்து போற்றிய புலவர்க்கும் பொருள் கொடுத்தல் புரவலர் இயல்பு, ஆனால் பாரி இதற்கு மாறாக முல்லைக் கொடிக்குத் தேர் நல்கிய சிறப்பினைக் கபிலர்,

***பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை***
***நாத் தழும்பு இருப்பப் பாடா தாயினும்***
***கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த***[32]

என நயத்தக்க முறையில் ஏத்துவர்.

சாதாரண முல்லைக் கொடிக்குக் கறங்கு மணி நெடுந்தேர் கொடுத்தமையைக் கொடைமடம் என்பர். இது கொடை மடமன்று உயிர்க் கருணையால் தன்னை மறந்து கொடுத்ததாகும்.

படைமடம் படாத பெருவீரனாய பேகன், கொடை மடம் பட்டவன், கொடைமடத்தைத் “தேற்றா ஈகை” எனவும் கூறுவர். குளிரில் நடுங்கிய மயிலுக்குத் தான் போர்த்த போர்வையைக் கொடுத்தவன் பேகன். இக்கொடைமடம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டைக் காட்டுவதாகும். மறுமைப்பயன் கருதாது பிறர்வறுமை தீர்க்கும் கடமையில் இன்பம் கண்ட இவன் கொடைக் கோட்பாட்டினை,

***எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென***
***மறுமை நோக்கின்றோ அன்றே,***
***பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே***[33]

எனப் பரணர் உணர்த்துவர்.

### V.3. மறக்கொடை

கொடை வரலாற்றில் பாரியைப் போல நிலைத்த புகழைப் பெற்றவன் குமணன். தம்பியால் நாடுகடத்தப் பெற்றுக் காட்டில் அல்லலுற்ற போது பெருந்தலைச் சாத்தனார் அவனைக் காணவந்தார். புலவர்க்குப் பரிசு கொடுக்கப் பொருள் ஏதும் இல்லாத நிலையில் தன் தலையை அரிந்து கொடுக்கத் துணிந்து புலவர்க்கு வாள் தந்தனன். இந்நிகழ்ச்சி குமணனின் மறக்கொடையைக் காட்ட வல்லது.

***பாடி நின்றனென் ஆக, கொன்னே***
***பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்***
***நாடிழந் ததனினும் நனிஇன் னாதென***
***வாள்தந் தனனே தலைஎனக் கீயத்***
***தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்***[34]

இக்கொடை கண்ணப்பரின் மறக்கொடையை நினைவூட்டுவதாகும்.

மறக்கொடைக்கு மற்றொரு சான்று - வீரமறவன் ஒருவன் தன்பால் பொருளற்ற நிலையில் நெருநல் வந்த விருந்தினரை ஓம்பத் தன் பழைய வாளை ஈடுவைத்தான். அடுத்த நாள் தன் யாழையும் பணையம் வைத்தான் என்பது புறநானூறு கூறும் செய்தியாகும்.

***நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்***
***இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்று இக்***
***கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்***[35]

### V. 4. வேந்தர் கொடை

வேந்தர்கள் அளித்த கொடைக்கு ஒரு சான்று. பாண்டியன் கருங்கை ஒள்வாட்பெரும்பெயர்வழுதி முகக்குறிப்பறிந்து பொருளீந்து வறுமையின் சிறுமையைக் களையும் பண்பினன் என்பதை,

***நின்நசை வேட்கையின் இரவலர் வருவர் அது***
***முன்னம் முகத்தின் உணர்ந்து***
***இன்மை தீர்த்தல் வன்மையானே***[36]

என இரும்பிடர்த் தலையார் போற்றுவர்.

### V.5. புலவர் கொடை

குமணன்பால் பெருஞ்செல்வம் பெற்றுப் போந்த பெருஞ் சித்திரனார் அதனைத் தன் மனைவிபால் தந்து எல்லோர்க்கும் கொடுத்து இன்புறுமாறு பணிக்கிறார். இதன்கண் எல்லோர்க்கும் என்பதை வகுத்து "நின்னை விரும்புவோர், நின்னால் விரும்பப் படுவோர், நின் கிளையினராகிய சுற்றத்தார், கடன் நல்கியோர் முதலிய பலர்க்கும் வழங்குக. அவ்வாறு வழங்குமிடத்து இன்னார்க்கு வழங்குகின்றோமென்றும், என்னைக் கேட்டல் வேண்டும் என்றும் கருதற்க; இச்செல்வம் முற்றும் முதிர மலைத் தலைவனான குமணன் தந்தது" என்று இனிமை கனியக் கூறியுள்ளார்.

> ***வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்***
> ***எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழ வோயே***[37]

என்பது புலவர் வாக்கு இக்கொடை பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் கொடையறமாகும்.

### VI. பல்லறம்

ஒரே பாட்டில் பல்லறம் உரைத்த பெரும் புலவன் கணியன் பூங்குன்றன், "***யாதும் ஊரே யாவரும் கேளிர்***" என்று தொடங்கும் இவருடைய பாடல் சங்கப் பாடல்களில் முடிமணியாகும்.

கற்றறிந்த சான்றோர்களுக்கு உலகின் எப்பகுதியும் சொந்தமே. எல்லா மக்களும் அவர்கள் உறவினர்களே என்பதை "***யாதும் ஊரே யாவரும் கேளிர்***" என்ற தொடர் விளக்கும். இக்கருத்து உலக ஒற்றுமையை வலியுறுத்துவது இப்பாட்டில் இவர் உணர்த்தும் பிற கருத்துகளும் அறிந்து இன்புறத்தக்கன.

ஒருவர் துன்புறுலும், அத்துன்பத்தின் நீங்கி அமைதி பெறுதலும் ஆகிய இவ்விரண்டும் பிறரால் வருவன அல்ல. உலக வாழ்க்கையில் கேடும் ஆக்கமும் தம்மால் வருவனவன்றிப் பிறர் தர வாரா.

நோதலும் அது தீர்தலும் அவற்றையொப்பத் தம்மால் வருவன. சாதலும் புதியதன்று. கருவிற் தோன்றிய நாளே தொடங்கியுள்ளது. வாழ்தலை இனிதென்று உவத்தல் கூடாது. வாழ்க்கையில் வெறுப்பு வந்தவிடத்து இன்னாது என்று இருத்தலும் கூடாது. ஆற்று நீரில் செல்லும் படகு போல அரிய உயிர் ஊழின்

வழியேபடும். எனவே நன்மையால் மிக்க பெரியவரைவியத்தலும் கூடாது. சிறியோரைப் பழித்தல் அதனினும் கூடாது என்று பல்வேறு அறச் சிந்தனைகளை இப் புறப்பாடல் விளக்குகிறது.

***யாதுமூரே யாவருங் கேளிர்***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா***
***நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன***
***சாதலும் புதுவதன்றே வாழ்தல்***
***இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்***
***இன்னா தென்றலும் இலமே மின்னொடு***
***வானந் தண்டுளி தலைஇ யானாது***
***கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று***
***நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்***
***முறைவழிப படூஉம் என்பது திறவோர்***
***காட்சியிற் தெளிந்தன மாகலின் மாட்சியிற்***
***பெரியோரை வியத்தலு மிலமே***
***சிறியோரை யிகழ்தல் அதனினு மிலமே***[38]

சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறமாகும்.

தனி அறத்தினும் நிகழ்ச்சி சார்ந்த அறம் பசுமரத்தாணி போல் பதியும்.

அறம், பொருள், இன்பம் மூன்றில் அறமே வலிவுடையது. சங்க காலத்தில் வாழ்ந்தோர் வறுமை நிலையிலும் பொய் கூறுவதற்கு அஞ்சும் பண்பினராக விளங்கினர்.

சங்கப்புலவர்கள் செய்ந்நன்றி கொல்லா இயல்பினர். தமக்கென வாழாமை மிகச்சிறந்த அறப்பண்பாகும். ஈதலும் இசைபட வாழ்தலும் பண்டைய வாழ்விற்கு உரமூட்டின.

பண்டைக்காலத்தில் நட்பின் உயர்வு மிகவும் மதிக்கப் பெற்றது.

சங்ககால மன்னர்கள் குடிதழுவிக் கேலோச்சினர். ஆட்சித்திறனும், ஆண்மைத்திறனும் பெற்று ஆட்சி நடத்தினர்.

மன்னர்கள் சான்றோர் வகுத்த அறநெறிப்படி ஒழுகினர். நல்லாட்சி நிலவப் பொறை, சூழ்ச்சி, வலி, தெறல், அளி என்ற ஐந்து பண்புகள் வலியுறுத்தப் பெறுகின்றன.

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் இல்புகளாக ஊன்பொதி பசுங்குடையார் உரைப்பன அனைத்தும அறச் செய்திகளே.

மன்னனுக்குரிய மாண்புகளில் செங்கோன்மை சிறந்த மாண்பாகும்.

மன்னன், மக்களுக்குத் தானே உயிர் என்பது அறிந்து குடிமக்களை முறை செய்து காப்பாற்ற வேண்டியது கடமையாகும்.

மக்களை வருத்தி வரிவாங்குதல் கூடாது. சமுதாயம் என்ற கட்டமைப்பில் குறிப்பிடத்தக்கவர் சான்றோர் ஆவர்.

சான்றோர் சான்றோரையே சார்வர்.

சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு; மனிதன் மனிதனாக வாழ நிலையாமையை உணர வேண்டும். இத்தகைய மனித சமுதாயமே மேம்பட முடியும்.

வீரத்தை வெளிப்படுத்தும் போரிலும் வீரர்கள் அறநெறிகளைப் பின்பற்றினர்.

புறமுதுகு காட்டியோரிடம் போரிடுதல் “படைமடம்” என இகழப் பெற்றது.

பாரி முல்லைக்குத் தேர் ஈந்ததும், பேகன் மயிலுக்குப் போர்வை தந்ததும் கொடை மடமன்று, உயிர்க்கருணையாகும்.

குமணனின் கொடை மறக்கொடையாகும். வேந்தர்கள் மட்டுமன்றிப் புலவர்களும் கொடை இயல்புடையோராக விளங்கினர்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்று தொடங்கும் கணியன் பூங்குன்றனின் பாடல் பல்லறங்களை வலியுறுத்துவதாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. அண்ணாமலை, வே. சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் - தொகுதி - 1 ப. 64
2. சாரங்கபாணி, இரா. *சங்கத் தமிழ் வளம்*, ப. 39
3. புறம், 195 : 6 - 7

4. திருக்குறள் : 983
5. திருக்குறள் : 36
6. புறம், 31 : 1 - 2
7. புறம், 139 : 5 - 6
8. இராமலிங்கம், என். இ. *புறநானூறும் வாழ்வியலும்* ப. 67.
9. புறம், 148 : 5 - 7
10. குறள் : 101
11. புறம், 34 : 5 - 7
12. புறம், 395
13. இராமலிங்கம், என். இ. *புறநானூறும் வாழ்வியலும்* ப. 96.
14. புறம், 182 : 8 - 9
15. குறள் : 323
16. புறம், 189 : 7 - 8
17. குறள் : 231
18. குருநாதன், இராம. *புறநானூறு ஒரு புதிய பார்வை,* ப. 140
19. புறம், 75 : 7 - 10
20. புறம், 185 : 1 - 6
21. புறம், 185 : 17 - 19
22. புறம், 72 : 10 - 12
23. புறம், 186
24. புறம், 184 : 10 - 11
25. புறம், 218
26. புறம், 312
27. தொல், புறத். இளம். நூ. 23
28. புறம், 165 : 1 - 2

29. புறம், 76 : 4 - 6

30. புறம், 9 : 1 - 5

31. சாரங்கபாணி, இரா. *சங்கத் தமிழ் வளம்* ப. 62

32. புறம், 200 : 9 - 12

33. புறம், 141 : 13 - 15

34. புறம், 165 : 9 - 13

35. புறம், 316

36. புறம், 3 : 24 - 26

37. புறம், 163 : 6 - 7

38. புறம், 192

# 6

## முடிவுரை

சங்கப் புறப் பொருள் நூல்களில் முடிமணியாகத் திகழும் புறநானூறு, தமிழர் வாழ்வியலை வெளிப்படுத்தும் ஒரு வரலாற்று நூலாகும். இந்நூல் பண்டைத் தமிழர் வாழ்வியலை எடுத்துக் காட்டி, இன்றைய நம் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.

தமிழர் வாழ்க்கை நில அடிப்படையில் அமைந்தது. வாழ்ந்த நிலங்களுக்கு ஏற்பவே கடவுட் கொள்கையும் அமைந்தது. தமிழர் மறுபிறப்பில் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர்.

பழந்தமிழ் நாட்டில் மழவர், பாணர், ஆவியர் முதலிய பல்வேறு குலத்தினரும், குடியினரும் வாழ்ந்தனர்.

இல்வாழ்க்கை அறம், பொருள், இன்பங்களால் சிறப்புப்பெற்றது. விருந்தோம்பலில் தமிழர் தலைசிறந்து விளங்கினர்.

தமிழ் மக்களின் நம்பிக்கைகளில் விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல் முதலிய நம்பிக்கைகள் குறிப்பிடத் தக்கன.

தமிழகத்தில் பல்வேறு கலைகள் சிறப்புற்றன.

தமிழக அரசியலில் நடுவணாகத் திகழ்பவன் அரசனே. ஈகை, வீரம், நீதி, அறிவு என்பன மன்னனின் சிறப்புப் பண்புகள்.

அரச உரிமை மூத்தவனுக்கே முடி என்பதாகும். நிலவளம் பெருக்கியும், நீர்வளம் பெருக்கியும், நாட்டு நலத்தில் அக்கறை கொண்டும் செங்கோல் செலுத்தினர்.

மன்னர்களும் புலவர்களும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். புலவர்கள் அரசர்களின் ஒற்றுமையைப் பாராட்டியும் வேற்றுமையைக் களைந்தும் தொண்டாற்றினர்.

தமிழக மன்னர்களிடத்தில் இயல்பாகவே கொடைப்பண்பு அமைந்திருந்தது. கொடையினைப் போலவே வீரப் பண்பிலும் சிறந்து விளங்கினர்.

பண்பட்ட மக்கள் கூடிவாழ்தலே சமுதாயம் எனப்படும். கற்று, கற்றதன் வழி நின்று, ஒழுக்கத்தில் சிறந்தோர் சான்றோர் என மதிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் சான்றோர் பலர் இருந்தனர். நல்லது செய்தல் இயலாதெனினும் அல்லவை செய்யார்.

கற்பு, காமம், ஒழுக்கம், பொறையுடைமை, நிறை, விருந்து புறந்தருதல் மனையோள் மாண்புகளாகும். பெண்கள் பொறையுடையவர்களாக விளங்கினர்.

இல்வாழ்விற்கு நன்மக்கட் பேறே ஏற்றம் தருவதாக இருந்தது. சமுதாயத்தில் கற்றோர் பெரிதும் மதிக்கப்பட்டனர்.

அன்பையும் அருளையும் எல்லா உயிர்களிடத்தும் செலுத்துவதே, சமயம். தமிழர் அன்பு நெறியையே சமய நெறி எனக் கொண்டனர்.

சமயம் மக்களுக்குத் தொண்டு செய்வதிலும் உயர்ந்த எண்ணத்தை வலியுறுத்துவதிலும் நன்னெறி காட்டுகிறது.

வீடுபேறு என்னும் நிலை சொல்லுக்கும் பொது உணர்விற்கும் எட்டாத சிறப்புடையது.

புறநானூற்றுப் புலவர்கள் காலத்திலேயே ஆரியக் கொள்கைகள் தமிழரிடம் வந்துவிட்டன.

உடல், உள்ளம், ஆன்ம உயர்வு ஆகியவற்றில் சிறந்தனவற்றை ஒருங்கே வெளிக் கொணர்வதுதான் கல்வி. இந்தியக் கல்வி வரலாறு வேதகாலத்திலிருந்து தொடங்குகிறது.

மனிதன் முதன் முதல் கற்றது உழவியல். கல்வி ஏகபோக ஆதிக்கத்திற்கு உட்படாமல் அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் அமைந்திருந்தது.

*பல்லவர் காலத்தில் தமிழகத்தில் வடமொழி ஏற்றம் பெற்றது. நாளடைவில் தமிழ் ஆட்சி மொழியானது.*

*தொடக்கத்தில் அந்தணர்களே ஆசிரியர்களாக இருந்தனர்.*

*கற்றதன் பயன் மனிதத் தன்மையுடன் வாழ்வதே. சாதிக் கொடுமைகள் அகலக் கல்வி ஒன்றே உயர்ந்த கருவி.*

*சான்றோர் விலக்கியன ஒழித்தலும, விதித்தன செய்தலும் அறமாகும். தனி அறத்தினும் நிகழ்ச்சி சார்ந்த அறம் பசுமரத்தாணி போல் பதியும்.*

*அறம், பொருள், இன்பம் இவை மூன்றில் அறமே வலியுடையது.*

*சங்கப் புலவர்கள் செய்ந்நன்றி அறத்தைப் பெரிதும் போற்றினர். நட்பின் உயர்வை மதித்தனர். சங்க கால மன்னர்கள் குடிதழுவிக் கோலோச்சினர்.*

*சமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் தலையாய கடமை ஒன்று உண்டு. போரிலும் அறமே பின்பற்றப் பெற்றது.*

*யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலக ஒற்றுமைக்குத் தமிழர் வழி வகுத்தனர்.*

## துணைநூற் பட்டியல்

### பழந்தமிழ் நூல்கள்


*1. ஆசாரக் கோவை*

*2. களவழி நாற்பது, குறுந்தொகை*

*3. சிலப்பதிகாரம்*

*4. சிறுபாணாற்றுப்படை*

*5. சீவக சிந்தாமணி*

*6. திருக்குறள்*

*7. திருமந்திரம்*

*8. தாயுமான சாமிகள் திருப்பாடல்*

*9. நற்றிணை*

10. நன்னெறி

11. நாலடியார்

12. பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடல் புராணம்

13. பழமொழி நானூறு

14. புறநானூறு

15. பொருநராற்றுப்படை

16. மதுரைக் காஞ்சி

17. மூதுரை

18. விவேக சிந்தாமணி

19. வெற்றி வேற்கை

**இலக்கண நூல்கள்**

20. தொல்காப்பியம்,
எழுத்ததிகாரம்,
இளம்பூரணர்.

21. தொல்காப்பியம்,
சொல்லதிகாரம்,
சேனாவரையம்.

22. தொல்காப்பியம்,
பொருளதிகாரம்,
இளம்பூரணர்.

23. தொல்காப்பியம்,
பொருளதிகாரம்,
நச்சினார்க்கினியம்.

24. நன்னூல்

**பிற நூல்கள்**


| | | |
|---|---|---|
| *25.* | அண்ணாமலை, வே. | *சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம்,* தொகுதி - *1.* சிதம்பரம். |
| *26.* | அறவாணன், க.ப. | *அற்றை நாட்காதலும் வீரமும்* பாரி நிலையம், சென்னை, *1978.* |
| *27.* | இராமலிங்கம், என்.இ. | *புறநானூறும் வாழ்வியலும்* திருவள்ளுவர் பதிப்பகம், ஆதம்பாக்கம், சென்னை, *1994.* |
| *28.* | இளவழகனார் | *புறநானூற்றுச் சொற்பொழிவுகள்* கழகப் பதிப்பு, சென்னை, *1996.* |
| *29.* | கந்தையாபிள்ளை, ந.சி. | *சரித்திர காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழ்,* ஒற்றுமை ஆபீஸ், சென்னை, *1943.* |
| *30.* | காமாட்சி, பி. | *பெரிய புராணம் காட்டும் சமுதாய நிலை,* இரத்தினா பதிப்பகம், திண்டுக்கல், *1993.* |
| *31.* | குருநாதன், இராம. | *புறநானூறு ஒரு புதிய பார்வை* வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை, *1997.* |
| *32.* | கோவிந்தராசன், மு. | *தமிழ் நூல்களில் கல்வி* சரசுவதி பதிப்பகம், சென்னை, *1994.* |
| *33.* | ஞானசம்பந்தம், அ.ச. | *தமிழரும் சமயமும்* |
| *34.* | ஞானமூர்த்தி, தா. ஏ. | *சங்க காலச் சமுதாயம்* முத்துக்கோலை தமிழகப் புலவர் குழு, திருச்சி, *1981.* |
| *35.* | சண்முகப் பிள்ளை, மு. | *புறநானூறும் தமிழரும் சமயம்* சக்தி காரியாலயம், சென்னை. |
| *36.* | சாரங்கபாணி, இரா. | *சங்கத் தமிழ் வளம்* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், *2003.* |

37. செந்துறை முத்து — *தமிழ் வரலாறு நாகரிகம் பண்பாடு* அருண் மொழிப் பதிப்பகம். சேலம், *1981.*

38. செந்துறை முத்து — *ஆயகலைகள் அறுபத்து நான்கு* நல்வாழ்வுப் பதிப்பகம், சென்னை, *1978.*

39. சோனாச்சலம், கே.எஸ் — *பொருளதிகாரச் சிந்தனை வரலாறு* அண்ணாமலை நகர், *1958.*

40. திரவியம், கா. — *சிந்தனைச் சுரங்கம்*, முதற்பாகம், பூம்புகார் வெளியீடு, சென்னை, *1984.*

41. தேவநேயன், ஞா. — *பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்*, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி விரிவு, *1966.*

42. பழனிச்சாமி, செ. — *புறநானூற்றில் பழந்தமிழ்ப் பண்பாடு,* வாணி பதிப்பகம், கோவை, *1989.*

43. பாலசுந்தரம்பிள்ளை, தி.சு. — *சங்க நூல் கட்டுரைகள் அல்லது பழந்தமிழ் நாகரிகம்* கழக வெளியீடு, சென்னை, *1966.*

44. பாலசுப்ரமணியன், கு.வெ. — *சங்க இலக்கியத்தில் புறப்பொருள்* மீரா, புதுக்கோட்டை, *1986.*

45. பிள்ளை, கே. கே. — *தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்*, தமிழ் நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, *1975.*

46. மறைமலையடிகள் — *சைவ சித்தாந்த ஞான போதம்*

47. வித்யானந்தம், சு. — *தமிழர் சால்பு*, பாரி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை,*1971.*

48. வெள்ளையாம்பட்டு சுந்தரம் — *கல்விக் கனிகள்*, சுந்தரம் சென்னை, *1980.*

49. வையாபுரிப்பிள்ளை, ச. *புறநானூறும் தமிழரும்*
சக்திகாரியாலயம்,
சென்னை.

50. ஜகந்நாதன் கி.வ. *புறநானூறும் தமிழரும்*
சரித்திரம்,
சக்திகாரியாலயம்,
சென்னை.

**ஆங்கில நூல்கள்**

51. Gisbert, V. *Fundamental of Sociology*
Orient,
Longmans,
1959.

52. Goshi, V. *Social Philosophy*
Current Book House,
1957.

53. Puranalingam Pillai, M.S. *Tamil Index*
Saivasithantha works,
PublishingSociety,
Madras,
1961.

54. Siva Raja Pillai, K.N. Chronology of the Early Tamils